கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு—24

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தெய்வச் சேக்கிழார் நாயனாரருளிய

# சிறுத்தொண்ட நாயனார் புராணம்

[உரையுடன்]

உரையாசிரியர்

கோவை - வழக்கறிஞர் - சிவக்கவிமணி

திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B. A., அவர்கள்

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை-14

கோவைத் தமிழ்ச்சங்கம்,
கோயமுத்தூர்.
26-1-1953

உரிமை ஆசிரியர்க்கே] [விலை ரூ. 1—4—0

கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு—24

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தெய்வச் சேக்கிழார் நாயனாருளிய

# சிறுத்தொண்ட நாயனார் புராணம்

[உரையுடன்]

உரையாசிரியர்

கோவை - வழக்கறிஞர் - சிவக்கவிமணி

திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B. A., அவர்கள்

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை-14

கோவைத் தமிழ்ச்சங்கம்,

கோயமுத்தூர்.

26-1-1953

உரிமை ஆசிரியர்க்கே]

[விலை ரூ. 1—4—0

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# முன்னுரை

பல்குமருத் துவரதிபர் செங்காட்டங் குடிவாழ்
படைத்தலைவ ரமுதளிக்கும் பரஞ்சோதி யார்மெய்ச்
செல்வமிகு சிறுத்தொண்டர் காழி நாடன்
திருவருள்சேர்ந் தவர்வளருஞ் சீராளன் றன்னை
நல்குதிரு வெண்காட்டு நங்கைசமைத் திடப்பின்
நன்மதிச்சந் தனத்தாதி தலைக்கறியிட் டுதவப்
புல்கவரும் வயிரவர்தா மகிழ்ந்துமக வருளப்
போற்றியவர் சிவனருளே பொருந்தி னாரே.

—திருத்தொண்டர் புராண சாரம்—40

அன்பர்களும் மாணாக்கர்களும் எளிதிற் பெற்றுப் பயனடையும்படி முன்னர்ச் சில சரிதங்களைத் தனிப்பதிப்பாக வெளியிட்டதுபோலவே சிறுத்தொண்ட நாயனார் புராணத்தையும் ஈண்டுத் தனிப்பதிப்பாக வெளியிடுகின்றேன். சிறுத்தொண்ட நாயனாரது சரிதவிரிவையும் அதிற் காணும் நுட்பங்களையும் அறியப் பலர் ஆசைப்படுகின்றார்கள். ஆளுடைய பிள்ளையாரது சரிதத்துடன் தொடர்பு பெற்றதனால், இப் புராணம், அதன்மூலம், நாயன்மார்கள் பலரும் வாழ்ந்த காலநிச்சயம் பெறுவதற்குப் பெரிய சரித ஆதரவு தருவதுகண்டு ஆராய்ச்சியாளர்களாகிய புலவர் பெருமக்கள் பலராலும் எடுத்துக் கையாண்டு வரப் படுவதாகும். அன்பர்கள் ஆதரிப்பார்களாக.

சேக்கிழார் நிலையம்,
கோயமுத்தூர்,
26—1—1953

C. K. சுப்பிரமணிய முதலியார்,
பதிப்பு உரை ஆசிரியர்

---

## பொருளடக்கம்

1. சிறுத்தொண்ட நாயனார் புராணம் உரையுடன் ... க—எஅ
2. சரிதச்சுருக்கம் ... எஅ—அக
3. கற்பனை ... அக—அச

உ
சிவமயம்

# 36. சிறுத்தொண்ட நாயனார் புராணம்

---

## தொகை

" செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன் " (6)

—திருத்தொண்டத் தொகை

## வகை

" புலியி னதளுடைப் புண்ணியர்க் கின்னமு தாத்தனதோர்
ஒலியின் சதங்கைக் குதலைப் புதல்வ னுடலறுணித்துக்
கலியின் வலிகெடுத் தோங்கும் புகழ்ச்சிறுத் தொண்டன்கண்டீர்
மலியும் பொழிலொண்செங் காட்டங் குடியவர் மன்னவனே " (43)

—திருத்தொண்டர் திருவந்தாதி

## விரி

3660. உருநாட்டுஞ் செயல்காம னொழியவிழி பொழிசெந்தீ
வருநாட்டத் திருநுதலார் மகிழ்ந்தருளும் பதிவயலிற்
கருநாட்டக் கடைசியர்தங் களிகாட்டுங் காவேரித்
திருநாட்டு வளங்காட்டுஞ் செங்காட்டங் குடியாகும். க

புராணம் :—சிறுத்தொண்ட நாயனாரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி ; இனி, நிறுத்த முறையானே, ஆசிரியர், ஏழாவது, வார்கொண்ட வன முலையாள் சருக்கத்துள் மூன்றாவதாகச் சிறுத்தொண்ட நாயனார் புராணங் கூறத் தொடங்குகின்றார்.

தொகை :—திருச்செங்காட்டங் குடியிலே பொருந்திய சிறுத்தொண்ட நாய னாருக்கும் நான் அடியேனாவேன்.

செங்காட்டங்குடி - நாயனாரது பதி ; சிறுத்தொண்டர் - தொண்டர்களின்முன் தம்மை மிகச் சிறியவராய் வைத்து ஒழுகி வந்த காரணத்தாற் போந்த காரணப் பெயர் (3674) ; இவரது இயற்பெயர் பரஞ்சோதியா ரென்பது (2661).

வகை :—புலியின்...தணித்து - புலியின் தோலினை உடையாகக் கொண்ட புண்ணியராகிய சிவபெருமானுக்கு இனிய அமுதாகும்படி தனது ஒலிக்கும் சதங்கை பூண்ட குதலை மொழியினையுடைய ஒரே புதல்வனது உடலை அறுத்து ; கலியின்... கண்டீர் - கலியினது வலியினை ஒழித்து மேலோங்கும் புகழினை உடைய சிறுத் தொண்டர் காண்மின் ; மலியும்...மன்னவனே - மிகுந்த பொழில்கள் சூழ்ந்த திருச் செங்காட்டங்குடிப் பதியவர்களின் தலைவராவார்.

புலியின்...புண்ணியர் - உத்தராபதியாராகிப் பயிரவக் கோலத்துடன் வந்த சிவபெருமான் : அமுதா...உடல் துணிந்து - ஆ - ஆக என்பது ஈறுகெட்டு ஆ என நின்றது ; ஆக்கும் பொருட்டு ; ஓர் - புதல்வன் என்று கூட்டுக. ஒப்பற்ற மகன் -

ஒரே புதல்வன் என்றிரண்டும் கொள்ள நின்றது; கலி - மலவன்மை மலக்கட்டினால் வரும் பிறவிப்பிணி. துணித்து - அழதாக்கி என்க.

விரி :—3660. (இ - ள்) உருநாட்டும்...திருநுதலார் - உருவுடையனாயிருந்து உயிர்கள் மேல் செலுத்துகின்ற தன் ஆணைச் செயலினை மன்மதன் ஒழியும்படி கண்ணினின்றும் பொழிகின்ற செந்தீ வரும் நாட்டத்தினைப் பொருந்திய திருநெற்றியினையுடைய சிவபெருமான்; மகிழ்ந்தருளும் பதி - மகிழ்ந்து வீற்றிருந் தருளும் பதி; வயலில்...காட்டும் - வயல்களில் கரிய கண்களையுடைய கடைசியர்கள் தமது களியாடல்களைக் காட்டுதற் கிடமாகிய; காவேரி...செங்காட்டங்குடி யாகும் - காவேரித் திருநாடு என்று சொல்லப்படும் சோழநாட்டிலே உள்ள வளம்பொருந்திய திருச்செங்காட்டங்குடி என்பதாகும்.

(வி - ரை) பதி (யாதெனில்) செங்காட்டங்குடியாகும் என்று கூட்டுக.

உருநாட்டும் செயல் - உருவுடையனாயிருந்து செலுத்துகின்ற செயல் - ஆணை; ஒழிதலாவது - உருவில்லாதவனாதல். காமன் செயல் ஒழிய என்னாது உருநாட்டும் செயல் ஒழிய என்றது இறைவரது நெற்றிக்கண்ணால் எரிக்கப்படுவதற்கு முன்னும் காமனது செயல் உண்டு; பின்னும் உண்டு; ஆனால் முன்னர் உருவுடன் நின்று செய்தனன்; பின்னர் இப்போது உருவிலியாய்நின்று செய்கின்றான் என்பதே வேறுபாடு என்று குறிக்க உருநாட்டும் செயல் ஒழிய என்ற அடைமொழி தந்தோதினார். உமையம்மையாரது திருவுருவத்திற் கருத்தை நாட்டி அவரைத் திருமணம் செய்து கொள்ளும்படி செய்தசெயல் என்று கந்தபுராண சரிதக் குறிப்புப்பட உரைத்தலுமாம்.

ஒழியப் பொழி செந்தீ - அவ்வேறுபாட்டுக்குக் காரணம் விழியினின்றும் பொழிந்த செந்தீ என்பதாம்; ஒழிய - ஒழியும் பொருட்டு; உருவிலியாதல் ஏனையோர் காட்சிக்குமாத்திரமாம்; தன் மனைவி இரதிக்கு உருவுடையனாயிருப்பன். இது பற்றிய வரலாறுகள் கந்தபுராணம் - காமதகனப் படலம் முதலியவற்றுட் காண்க.

உருநாட்டும் செயல் காமன் ஒழிய - நுதலார் மகிழ்ந்தருளும் பதி என்று கூட்டி இப்பதியின் சிறப்பும் பின்வரும் சரிதக் குறிப்பும் பெற உரைக்கவும் நின்றது; என்னை? மக்கள் முதலிய எல்லாவுயிர்களும் தத்தம் போகங்களைப் புல்லுதலில் கருத்தை நாட்டுதல் ஆண் பெண் என்ற உரு வேறுபாடு பற்றி வருவதேயாம். அப்போகங்களினால் பெறப்படும் மக்கள் முதலியவாகிய தம் பொருள்களின் மேல்வரும் நாட்டம் ஆசை முதலிய வலிய உலகப் பற்றுக்களும், அப்போகங்களைப் பற்றித் தொடர்ந்து வருவனவேயாம். இங்குச் சிறுத்தொண்ட நாயனாரும், மனைவியாரும் இல்லறத்தில் வாழ்ந்தனர்; பெறுதற்கு அரிய சிறந்த மகப்பேறும் பெற்றனர்; ஆனால் அந்த உருவங்களின்மேல் வைத்த கருத்தினைவிட இறைவனது உருவின்மேல் நாட்டிய கருத்து மிக்கது; "காதலாலே தேடியும் முன் காணேன் றவத்தா லுமைக் கண்டேன்" (3704) "இருவர் மனமும் பேருவகை யெய்தி யரியவினை செய்வார்" (3723) "திருமனையில் மனைவி யார்தா மாதவரை, முந்த வெதிர்சென் றடிவணங்கி முழுது மழகு செய்த மனை" (3729) என்பனவும் பிறவும் காண்க. எனவே உயிர்களுக்கு உருவத்திலே காதலை நாட்டுவிக்கும் செயலினைக் காமன் இப்பதியிலே நாயனார் - மனைவியார் - மைந்தனார் - தாதியார்மாட்டு நிகழாமல் ஒழியும்படி நுதலார் அருளும் என்ற குறிப்பும் காண்க. அருளுதல் - பக்குவம் நோக்கி அருள்செய்தல்.

விழிபொழி செந்தீ வரும் நாட்டம் - சிரிப்பினும், கையினும் தீ யிருத்தலால் அவற்றினின்றும் பிரித்துணர்தற்கு விழி பொழி என்றார். அருளும் தருதலால் செந்தீ-வரும் என்றார்; நாட்டம் - கண்; "நுதல்விழி நாட்டத் திறையோன்" (மணிமே).

விழிபொழி-வருநாட்டம் - என்றதில் விழிபொழி என்றது எரித்தற் கண்ணும், வருநாட்டம் - என்றது பின்னர் அருள் செய்து உயிர் பெற்றெழுந்து வருதலை நாடிய அருள் நோக்கத்தின் கண்ணும் குறிப்புக்கள் பெற நின்றன; "நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே" என, இந்நெற்றித் திருவிழி அழித்தற் காகவன்றி அடியார்க்கருள் பயத்தற்காகவும் செயற்படும் என்று அரசுகள் போற்றிய தனுலும் காண்க; வரும் என்ற அடைமொழியின் குறிப்பும் இது. விழிபொழி செந்தீ வருநாட்டம் - " கட்டழல் பொதிந்த நெற்றிக்கண் " (காமதக - 89) என்று இதனை இவ்வாறே கந்தபுராணம் கூறுதலும் காண்க. தீப்பொழிந்ததும் அருளே யாமென்பதும் குறிப்பு. " யாமுனை முனிவி னன்றே பின்பது தணிவ துள்ளம் பேதுறன் மைந்த!" என்ற (திருக்கல்யாணப் படலம் - 88) கந்தபுராணம் காண்க. பார்வையினுலே பொழிகின்ற அக்கினி தோற்றும் கண் என்பர் இராமநாதச் செட்டியார்.

கருநாட்டம் - கரிய கண்கள்; களித்தலாலே தெள்ளிய நாட்டமில்லாத என்பதும் குறிப்பு.

களிகாட்டும் - களியாடற் செயல்கள். குரவையாடல் முதலியன என்பாருமுண்டு.

காவேரித் திருநாட்டு - சோழ வளநாட்டின் கண்; நாட்டு - நாட்டின் கண்; எழனுருபு தொக்கது. நாட்டின் குடியாகும் என்க. இதனுல் நாட்டு வளமும், வளங்காட்டும் என்றதனுல் நகர வளமும் கூறியவாறு காண்க. இனி இவ்வாறன்றி நாட்டுவளங் காட்டும் என்று கூட்டி நாட்டின் வளங்கள் முற்றும் தன்னகத்தே விளங்கக் காட்டும் குடி என்று இருவளமுஞ் சேர்த்துரைத்ததாக உரைப்பினுமமையும்.

களிநாட்டும்—என்பதும் பாடம். 1

3661. நிலவியவத் திருப்பதியி னெடுஞ்சடையார் நீற்றடைவால்
உலகில்வள ருயிர்க்கெல்லா முயர்காவற் றொழில்பூண்டு
மலர்புகழ்மா மாத்திரர்தங் குலம்பெருக வந்துள்ளார்
பலர்புகழுந் திருநாமம் பரஞ்சோதி யாரென்பார். உ

(இ - ள்) நிலவிய அத்திருப்பதியில் - நிலைபெற்ற அந்தத் திருப்பதியிலே; நெடுஞ்சடையார்...தொழில் பூண்டு - நீண்ட சடையினையுடைய சிவபெருமானது திருநீற்றுச் சார்பினுலே உலகிற் பிறந்து வளர்கின்ற எல்லாவுயிர்களுக்கும் உயர்வாகிய காவல் தொழிலை மேற்கொண்டு; மலர்புகழ்...வந்துள்ளார் - மலர்கின்ற புகழினையுடைய மாமாத்திரர் குலம் பெருகும்படி வந்தவதரித்துள்ளவர்; பலர் புகழும்...என்பார் - பலரும் புகழ்கின்ற பரஞ்சோதியார் என்று சொல்லப்படும் திருநாமத்தினை யுடையவர்.

(வி - ரை) நிலவிய - சிறப்பினுல் நிலைபெற்ற.

நீற்று அடைவால்-திருநீற்றுச் சார்பின்கண் நின்றமையாலே; அத்துணையாற் பெற்ற வலிமையினுலே; " மதியணிந்தார் திருத்தொண்டு வாய்த்தவலி யுடைமையினுல்" (3666) என்பது காண்க; நீற்று அடைவால் - தொழில் பூண்டு - என்று கூட்டுக. அஃதாவது உயிர்க்கெல்லாம் காவற்றொழில் பூணும் வலிமை திருநீற்றுச் சார்பினுற் பெற்று என்க,

உயிர்க்கெல்லாம் உயர் காவற்றொழில் - இங்கு மருத்துவத் தொழில் குறித்து நின்றது. " ஆயுள் வேதக்கலையும் " என மேல்வரும் பாட்டிற் குறித்தல் காண்க.

மாமாத்திரர் குலம் என்பது வழிவழி மருத்துவன் றொழில் செய்யும் ஓர் மரபு ; " ஆமாத்தியர் " என்ற மரபுடன் மயங்கற்பாலதன்று ; அது மறையவர் குல வகையுள் ஒன்று. உண்மை நாயன்மார்களுள்ளே மறையோர் பதின்மூவர் என்றும், சிவ வேதியர் இருவர் என்றும், கூறி வகைப்படுத்திய ஆசிரியர் உமாபதியார் " மாமாத்திரர் மரபிற் சிறுத்தொண்டர் ஒருவர் " (புராணவரலாறு - 28) என்று வேறு பிரித்துக் கூறியருளியது காண்க. இம்மரபு வேதியர்க்கும் அரசர்க்கும் இடையில் வைத்தோதப்பட்ட வைப்பு முறையுங் கருதுக. இது முப்புரி நூலணியும் மரபென்றும் கருதவுள்ளது. " வெந்த நீறணிமார்பன் ", "சிறப்புலவன் சிறுத்தொண்டன்", " பொடி நுகருஞ் சிறுத்தொண்டன் " (பிள். தேவா) என வரும் திருவாக்குக்களுடன் "முந்நூல்சேர் பொன்மார்பிற் சிறுத்தொண்டர்" என்ற ஆசிரியர் திருவாக்கும் கருதுக ; ஒருசார் வேதியர் மரபு போன்று முந்நூலணியும் சார்புடைய தொரு மரபு என்பதாம்.

உயர்காவற்றொழில் - படைக்கலத்தின் பயிற்சியால் வரும் சேனபதித் தொழிலும் குறிப்பு ; உயர் - செவ்விய நெறியிற் செலுத்தப்படுதல்.

மாமாத்திரர் - நாயனாரது மரபு ; குலம்பெருக - பெருகுதல் - விளங்குதல்.

வந்துள்ளார் - வருதல் - அவதரித்தல்.

பலர்புகழும் திருநாமம் - பல சமயத்தாராலும் புகழப்படும் திருநாமம் ; பரஞ்சோதி யென்பது பல சமயத்தார்களும் மேற்கொண்டு புகழப்படுவதொன்றாம். ஆயினும் "சோதி யாயெழுஞ் சோதியுட் சோதிய" " ஒளியா யொளியத னொளியா யொளியத னொளியுந் தணிதரு மொளியாகி " (பேரூர்ப்புராணம்) என்றபடி எல்லாச் சோதிகட்கும் பரமாய் - அப்பாற் பட்டதாய் - உள்ள சிவச்சோதிக்கு இப்பெயர் பொதுவாயும் சிறப்பாயு முரியதாம். " பலர்புகழ் ஞாயிறு " (முருகு.) என்பார் - எனப்படுவார். 2

3662. ஆயுள்வே தக்கலையு மலகில்வட நூற்கலையுந்
தூயபடைக் கலத்தொழிலுந் துறைநிரம்பப் பயின்றவற்றாற்
பாயுமத குஞ்சரமும் பரியுமுகைக் கும்பண்பு
மேயதொழில் விஞ்சையினு மேதினியின் மேலானார். ௩

(இ - ள்) ஆயுள் வேதக் கலையும்...பயின்றுள்ளார் - ஆயுள் வேதம் எனப்படும் மருத்துவ நூற்கலையும் அளவில்லாத வட நூல்களில் உள்ள மற்றும் பலவிதமாகிய கலைகளையும், தூய்மையுடைய படைக்கலங்களின் தொழிற் கலையும், ஆகிய இவற்றை யெல்லாம் அவ்வவற்றின் எல்லை நிரம்பும் அளவும் பயின்றுள்ளார் ; பாயும்...மேலானார் - (அந்தக் கலைகளைப் பயின்றதனோடு) பாய்கின்ற மதம்பொழியும் யானைகளையும் குதிரைகளையும் செலுத்தும் தன்மை பொருந்திய தொழில்புரி வித்தையிலும் உலகில் மேம்பட்டவராயினர்.

(வி - ரை) ஆயுள் வேதக்கலை - மருத்துவக் கலை ; அலகில் வடநூற் கலை - வடமொழி நூல்களிற் பேசப்படும் ஏனைக் கலைஞானங்கள் ; இவற்றை வேறு பிரித்து வடநூல் என்று தொகுத்தமையால் ஆயுள் வேதக் கலை தென்மொழி யாகிய தமிழில் உள்ளது என்பதும், அதனையே பரஞ்சோதியார் பயின்றனர் என்பதும்

கருதப்படும். தமிழில் உள்ளவை சித்தர் மருத்துவ நூல்கள். போகர் முதலிய மருத்துவப் பெரியார்கள் செய்தவை ; மருத்துவன் தாமோதரனார் என்றொரு சங்கப் புலவர் வரலாறும் காண்க ; தேவாரங்களை வேதம் என்பது போல மருத்துவக் கலையினை ஆயுள்வேத மென்றார் ; அது வேதாங்கங்கள் ஆறனுள் ஒரு பகுதியாதலும் குறிப்பு.

வடநூற் கலை - நாயனாரது குலநலம் பற்றிய வினைக் கலைஞானங்கள்; இவற்றிற் குரிய நூல்கள் வடமொழியில் உள்ளன என்பது. ஆயுள் வேதம் - இவரது குலத் தொழிற்குரியது பற்றித் தனியே எடுத்துக் கூறினார். உபவேதங்களுள் ஒன்று இது.

தூய படைக்கலத் தொழில் - இந்நாளிற் செய்வதுபோல மக்களின் பெரு நாசத்திற்கும் ஒவ்வாத கேட்டுக்கும் காரணமாகிய பாவத்திற்கும் கொலைக்கும் உட் படாது உலகங் காவலாகிய தூயதொழிலுக்குத் தூயமுறையில் விதிப்படி பயன் படுவன என்பார் தூய என்றார். "இடையிரு வகையோ ரல்லது நாடிற், படைவகை பெறாஅ ரென்மனார் புலவர்" (தொல் பொருள். மரபு - 75) என்றமையாலும் இவர் வேதியர் மரபன்றென்பதும் பெறப்படும்.

துறை நிரம்புதல் - அவ்வக் கலைகளின் எல்லை அளவு படும்படி நிறைதல்.

பாயும்...தொழில் விஞ்சை - யானை யேற்றம் குதிரையேற்றம் என்ற இவற் றைக் கலைஞான அளவில் மட்டும் நில்லாது சேனை தலைவராயிருந்து பகைவர் வந்தால் அவர்மேற் செலுத்தி வெல்லும் படை ஆளும் தன்மையுடைய ஒரு தொழி லாகவும் கைவர ; தொழில் விஞ்சையினும் - கலையே யன்றித் தொழிலிலும் என உம்மை இறந்தது தழுவியது.

இப்பண்பினால் அரசர்க்குப் போரில் வெற்றி வரச் செய்தமை மேல் (3664 - 3665) உரைத்தல் காண்க.

பயின்றுள்ளார்—பண்பின்—விஞ்சையினில்—என்பனவும் பாடங்கள். 3

3663. உள்ளநிறை கலைத்துறைக ளொழிவின்றிப் பயின்றவற்றாற்
"றெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறி"வென்றே
கொள்ளுமுணர் வினின்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடை யாயென்றும் பயின்றுவரும் பண்புடையார். ௪

(இ - ள்) உள்ளநிறை...பயின்று - தமது உள்ளம் நிறைவு பெறுவிக்கும் கலைத் துறைகளை எல்லாம் இடையறாது பயின்று தேர்ந்து ; அவற்றால்...உணர்வினில் - அவை எல்லாவற்றாலும் தெளிவுபெற வடித்து எடுத்த பொருளாவது சிவன்திருவடி யிலே செறிந்த அன்புடைமையாகிய ஒழுக்கமேயாம் என்றே கொள்ளும் உணர்வி னாலே; முன்னே - முதன்மை பெற; கூற்றுதைத்த...பண்புள்ளார்-இயமனை உதைத்த திருவடியினிடத்தே அன்பு பூண்ட ஒழுக்கம் பள்ளமடையில் நீர்ஓடுதல் போலத் தடையில்லாது விரைவாக என்றும் பயின்று வரும் பண்பினை உடையாராயினார்.

(வி - ரை) உள்ள நிறை கலைத்துறைகள் - இவை வேறு ; முன்பாட்டிற் கூறியவை வேறு. அவை உடலையும் உலகினையும் பற்றியவை ; இவை உயிரினையும் அதன் உட்பற்றாகிய இறைவனையும் பற்றியவை ; இவை புறத்திலன்றி உள்ளத் தினுள் ஆராய்ந்து தெளிதற்குரியனவாதலின் உள்ள நிறை கலைத்துறைகள் என்றார்; நிறை - நிறைதற்கு ஏதுவாகிய ; நிறைவு - அமைதி.

அவற்றால் - அவற்றின் துணையாலே.

தெள்ளி வடித்து அறிந்த பொருள் - தெள்ளுதல் - ஆராய்ந்து தெளிதல் ; வடித்தல் - முடித்தல் ; பொருள் - உண்மைப் பொருள்.

செறிவு - செறிந்த - உறைப்புடைய - அன்பின் ஒழுக்கம். செறிவு - அதனை உடைய ஒழுக்கத்துக்கு வந்தது. சிவன் கழலிற் செறிவு - இடையறாத சிவத்தியானமுமாம்.

செறிவே என்று கொள்ளும் - என்று பிரிநிலை ஏகாரம் பிரித்துக் கூட்டுக. தேற்றேகாரமுமாம். கொள்ளுதல்-விடாது உட்கொள்ளுதல்; பற்றுதல். உணர்வினில்- உணர்வினாலே. " கற்றதனா லாய பயன் " என்ற கருத்து.

முன்னே பயின்று - முன் - முதன்மையாக ; முன்கூறிய உலகியல் நிலைகளின் பயிற்சி பின்னாக என்பதாம்.

பள்ள மடையாய் - இஃது உழவுத் தொழிலின் மரபு வழக்கு. மதகு கால்வாய்களினின்றும் நிலத்துக்கு நீர் செல்லும் துவாரம் மடை எனப்படும்; மடை - நீர்வாய்; மடுத்தற்குரியது மடை. பள்ளமடையினின்று நீர்பாய உள்ளதாய் அமைந்த நிலம் நீர்க் குறைவில்லாமையால் தண்டாத விளையுள் தரும் ஏற்றமுடையதென்பர்; அன்பின் ஒழுக்கமானது இவரது உள்ளத்திலும் மெய் மொழிகளிலும் இடையறாது மேலிருந்து நீர் கீழே பாய்வதுபோலப் பாய்ந்துவரும் தன்மை குறிப்பு; "பள்ளந்தாழுறுபுனலிற் கீழ்மே லாகப் பதைத்துருகும் அவர்" (திருவா); பள்ள மடை - பள்ள நிலத்துக்கு நீர்பாய அமைத்த மடை.

என்றும் - இடையறாது.

கலைத்தொழில்கள்—என்ற பாடம் பிழை. 4

3664. ஈசனடி யார்க்கென்று மியல்பான பணிசெய்தே
ஆசில்புகழ் மன்னவன்பா லணுக்கரா யவற்காகப்
பூசன்முனைக் களிறுகைத்துப் போர்வென்று பொருமரசர்
தேசங்கள் பலகொண்டு தேர்வேந்தன் பாற்சிறந்தார். ௫

(இ - ள்) ஈசனடியார்க்கு...செய்தே - சிவனடியார்களுக்கு எந்நாளும் இயல்பால் ஆன பணிகளைச் செய்தே ; ஆசில்...அணுக்கராய் - குற்றமில்லாத புகழினையுடைய அரசனிடத்து அன்பினாலே பக்கத் துணையாயிருந்து ; அவற்காக...வென்று- அவனுக்காகப் போரிலே செலுத்தப்படும் யானைப் படையினைச் செலுத்திப் பல போர்களில் வெற்றிகொண்டு ; பொரும் அரசர்...சிறந்தார் - போரில் எதிர்த்து நிற்கும் அரசர்களது தேசங்கள் பலவற்றையும் கைக்கொண்டு தேர்ப்படையினையுடைய தமது அரசனிடம் சிறப்புப் பெற்றனர்.

(வி - ரை) இயல்பான பணி - தம்மியற்கையாய் உள்ளத்தெழும் அன்பினாலே ஆகிய பணிகள் எல்லாவற்றையும் ; இயல்பு - உரிமையுமாம்.

ஆசில் புகழ் மன்னவன் - ஆசு இல் புகழ் - குற்றமற்ற புகழாவது நீதிப்படி அரசு புரிந்து குடிகாத்தலும், அநீதியான போர்களால் பிற அரசர்களையும் மக்களையும் அலைக்காமையுமாம். இந்த நாளில் நிகழ்ந்த பெரும் போர்களையும் அவற்றுள் மன்னர்களும் மன்னராய்ச் செயல் செய்வார்களும் செய்த கொடுந் தொழில்களையும் கருதுக. மன்னவன் - இவ்வரசன் மகேந்திரவர்மன் மகனாகிய நரசிம்மவர்மன் என்னும் பல்லவ அரசன் என்பது சரித்திர ஆசிரியர்களால் நிச்சயிக்கப் பட்டிருக்கிறது ; மேற்பாட்டில் வரும் வடபுலத்து வாதாபிப் போர் (Battle of

Badami) என்பது கல்வெட்டுக்களால் ஆறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் கி. பி. 640-க்கும் 643-க்கும் இடையே நடந்திருக்க வேண்டுமென்றும், 642-ம் ஆண்டா யிருக்கலாம் என்றும் துணியப்படுகின்ற படியால், இம்மன்னனது காலமும், அதனால் பரஞ்சோதியாரது (சிறுத்தொண்டர்) காலமும், அதன் துணையாலே அவருடன் ஒரு காலத்தவரான திருஞான சம்பந்தரது காலமும் இதுவே யெனச் சரித ஆசிரியர்கள் துணிந்துள்ளார்கள். *நாயன்மார்கள் வாழ்ந்த கால ஆராய்ச்சிக்கு முதலாவதாகப் பெருந்துணையாய்க் கிடைத்தது இச்செய்தியேயாம். (மகேந்திரவர்மன் - கி. பி. 625 - 650 என்ப)

அணுக்கர் - பக்கத்திருந்து அந்தரங்கமான உரிமைப்பாட்டுடன் ஆலோசிக் கவும் தொழிலில் ஏவப்படுதற்கும் உரியவர்கள்.

பூசல் முனை - போர் முகத்திலே ; முனை - முகம்.

சிறந்தார் - சிறப்புச் செய்யப்பட்டு அரச சேவையில் அமர்ந்தனர்.

போய் வென்று—என்பதும் பாடம். 5

3665. மன்னவற்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியு நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனவெண் ணிலகவர்ந்தங் கியலரசன் முன்கொணர்ந்தார். அ

(இ - ள்) மன்னவற்கு...துகளாக - அரசனுக்காகப் படையெடுத்துச் சென்று வடபுலத்திலே வாதாவி என்னும் பழய நகரம் தூளாக இடிபடும்படி ; துளை நெடுங்கை வரை உகைத்து - யானைப்படையினைச் செலுத்தி வென்று ; பன்மணி யும்...முன் கொணர்ந்தார் - பல மணிகளையும் நிதிக்குவைகளையும் யானைக் கூட்டங் களையும் குதிரைத் தொகுதிகளையும் இன்னும் இவ்வாறான எண்ணில்லாதனவற் றையும் கைக்கொண்டு இவ்விடத்துத் தமது அரசன்முன் கொண்டு வந்தனர்.

(வி - ரை) மன்னவற்குத் தண்டுபோய் - மன்னவற்கு - அரசனுக்காக ; அரச னேவலால் ; தண்டு போதல் - பகைவர் மேற் படை செலுத்திச் செல்லுதல்.

வடபுலத்து வாதாவித் தொன்னகரம் - இது Badami என்று வழங்கப்படும் ; பம்பாய் ராஜதானியில் பெல்காம் என்ற சில்லாப் பிரதேசத்தில் உள்ளதென்பர். இது சளுக்கிய அரசன் புலிகேசியினுடைய தலைநகரமாயிருந்த தென்றும், அவனுக் கும் பல்லவ மன்னன் நரசிங்கவர்மனுக்கு நேர்ந்த போரில் (சிறுத்தொண்டர்) சேனா பதி பரஞ்சோதியாரால் வென்று தகர்க்கப்பட்டதென்றும் கல்வெட்டுக்களால் அறி கின்றோம்; இடிந்த பலமான அக்கோட்டைப் பகுதிகள் இன்னும் காண உள்ளன.

துகளாக - துகளாகும்படி ; உகைத்து - (சேனை) செலுத்தி ; உகைத்தல் - செலுத்துதல், ஏவுதல் ; பகடு - யானையின் ஆண் ; கைவரை - யானை.

பன்மணியும்...கவர்ந்தே - கொணர்ந்தார் - இது முன்னாள் போரில் வென்றார் செய்யும் மரபு ; "மன்னர்முன்னுப், பணிவார் திறையும் பகைத்தவர் சின்னமுங் கொண்டுவண்டேர், அணிவார் முரசினொ டாலிக்கு மாவோ டணுகினரே" (கோவை - 330) என்று இதனைச் சுவைபெறக் கூறுதல் காண்க. பகை அரசர்

*இவ்வாராய்ச்சியினை முதன் முதற் செய்தவர் ஆசிரியர் P. சுந்தரம் பிள்ளை அவர்கள் ; அவர்கண்ட முடிபுகளைப் பற்றி ஆளுடைய அரசுகள் சரித ஆராய்ச்சிக் குறிப்பு. III-பக். எகூஎ பார்க்க.

பணிந்தால் அவர்பாற் றிறைகொண்டு மீளுதலும், பணியாது போர் செய்யின் அவர்களது சின்னங்களைக் கைக்கொண்டு மீளுதலும் வென்ற படைத்தலைவர் செயலாம். இங்குப் பகையரசன் பணியாமையால் அவனது தலைநகரக் கோட்டையைத் தகர்த்துப் போர்ச் சின்னங்களாக இப்பண்டங்களைக் கொணர்ந்தனர். கவர்ந்து - என்ற குறிப்புமிது. புகழ்ச்சோழ நாயனார் புராண வரலாறும் பார்க்க.

எண்ணில கவர்ந்தே-இப்பொருள்களுடன், பரஞ்சோதியார் அந்நகரினின்றும் ஒரு விநாயகப் பெருமான் திருவுருவத்தையும் நினைவுக் குறியாகக் கொணர்ந்து அவரைத் தமது நகராமாகிய திருச்செங்காட்டங்குடித் திருக்கோயிலாகிய கணபதீச்சரத்தில் தாபித்தனர் என்றும், அவரே இப்போது " வாதாபி கணபதி " என்று அங்கு விளக்கமாக அறியப்பட்டு வழிபடப் பெறுகின்றார் என்றும் கூறுவர்.

இயல் அரசன் - இகலினாலன்றி நீதியியல்பினால் அரசு புரிபவன்.

பரிநிரையும்—இகலரசன்—என்பனவும் பாடங்கள். 6

3666. கதிர்முடிமன் னனுமிவர்தங் களிற்றுரிமை யாண்மையினை
அதிசயித்துப் புகழ்ந்துரைப்ப, வறிந்தவமைச் சர்களுரைப்பார்
" மதியணிந்தார் திருத்தொண்டு வாய்த்தவலி யுடைமையினால்
எதிரிவருக் கிவ்வுலகி லில்லை"யென வெடுத்துரைத்தார். எ

(இ - ள்) கதிர்முடி மன்னனும்...உரைப்ப - ஒளிமுடியுடைய அரசனும் இவரது யானைப்படை செலுத்துதற்கு உரிய வல்லமையினைக் கண்டுஅதிசயப்பட்டுப் புகழ்ந்து சொல்ல; அறிந்த...உரைப்பார் - அதனை அறிந்த மந்திரிகள் எடுத்துச் சொல்வார்களாகி; மதியணிந்தார்...உரைத்தார் - சந்திரனை அணிந்த சிவபெருமானது திருத்தொண்டு வாய்க்கப் பெற்ற வல்லமையினாலே இவரை எதிர்த்து நிற்போர் இவ்வுலகில் இல்லை என்று எடுத்துக் சொன்னார்கள்.

(வி - ரை) கதிர்முடி மன்னன் - முடி துளங்குதலில்லாத தன்மை வெற்றிப்பாடு குறித்தது.

களிற்றுரிமை ஆண்மை - யானைச் சேனையைச் செலுத்துதலில் இவருக்கே சிறப்புரிமையாகவுள்ள ஆளுந்தன்மை. " பாயுமதக் குஞ்சரமும்...விஞ்சை " (3662) என இதனை முன்வைத்து விதந்து கூறியது காண்க.

அதிசயித்து - தகர்க்க முடியாத வலிய அந்த வாதாவிக் கோட்டையினைத் தூளாகத் தகர்த்ததுவும், யானை முதலிய சின்னங்களை நிறையக் கவர்ந்து கொணர்ந்ததுவும் கண்டு அதிசயித்து; அதிசயம் - இன்னதென் றறியவரும் விம்மிதமாகிய பெருமித உணர்ச்சி. " அதிசயம் கண்டாமே " (திருவா).

புகழ்ந்துரைத்தல் - சேனைத் தலைவர்களைப் பாராட்டிச் சிறப்புச் செய்து அணைக்கும் வகை.

அறிந்த அமைச்சர் - அறிந்த - அவ்வெற்றிப் பாட்டின் உண்மைக் காரணத்தை அறிந்த; மதியுடைய அமைச்சர்களாதலின் வெளிக் காரணமாகிய களிற்றுரிமை ஆண்மையினை யன்றி அதற்கு உள்நின்ற காரணமாகிய திருத்தொண்டி னுறைப்பாகிய நிலையினை உணர்ந்து எடுத்துக் கூறினர்.

" மதியணிந்தார்... இல்லை " என எடுத்து - சிவன் திருத்தொண்டின் உறைப்புடைய வலிமை பெற்றவர்கள் உலகில் யாரையும் வெற்றிகொள்ள வல்லவர். இவரை எவரும் வெல்லுதல் அரிது என்பது உண்மை; " நாணில்அமண் பதகருடன்

ஒன்றிய மன்னவன் சூழ்ச்சி திருத்தொண்டி னுறைப்பாலே, வென்றவர் " (1795) என்றமை காண்க. "அகில காரணர் தாள்பணி வார்கடாம் அகில லோகமு மாடற் குரியர் " என்பது முதலாக வரும் திருக்கூட்டச் சிறப்பும் பார்க்க. எடுத்து - விளங்க எடுத்து. 7

3667. "தம்பெருமான் றிருத்தொண்ட ரெனக்கேட்ட தார்வேந்தன்
உம்பர்பிரா னடியாரை யுணராதே, கெட்டொழிந்தேன்!
வெம்புகொடும் போர்முனையில் விட்டிருந்தே" னெனவெருவுற்
"றெம்பெருமா! னிதுபொறுக்க வேண்டு"மென விறைஞ்சினான். அ

(இ - ள்) தம்பெருமான்...தார்வேந்தன் - தமது இறைவராகிய திருத்தொண்டர் இவர் என்று கேட்ட, மாலை யணிந்த அரசன்; எம்பெருமானடியாரை...வெருவுற்று - எமது பெருமானது அடியாராகிய இவரை இன்னார் என்றறியாதே, கெட்டொழிந்தேன், வெம்மையாகிய கொடிய போர் முனையில் சென்று போர் செய்யும்படி விட்டிருந்தேனே! என்று நடுக்கமுற்று; எம்பெருமான்!...இறைஞ்சினான் - எமது பெருமானே இப்பிழையினைப் பொறுத்தருள வேண்டும் என்று வணங்கினான்.

(வி - ரை) தம்பெருமான்...கேட்ட - இவர் தொண்டர் என்று அமைச்சர்கள் சொல்லக் கேட்ட. திருத்தொண்டு வாய்த்த வலியுடைமையால் இவருக்கு எவரும் எதிர் நில்லார் என்று அமைச்சர்கள் இவரது வெற்றிக்குக் காரணமாகிய அளவே எடுத்துக் கூறினர்; அது கேட்டவுடன் அரசனும் சிவன்பாற் பேரன்புடையவனாதலின், அவ்வெற்றியின் எண்ணத்தை அறவே விடுத்து, இவர் திருத்தொண்டராம் பெரிய தன்மையினையும் அவரை அறியாதே போர்முனையில் விடுத்த தனது அபசாரத்தையுமே எண்ணி நடுங்கினான். இஃது அன்பின் றிறத்தாலாயது.

கெட்டொழிந்தேன் - ஒரு சொன்னீர்மைத்தாய்க் கெட்டேன் என்னும் பொருள் தந்து நின்றது. மிகக்கெட்டேன் எனினுமமையும்; தார்வேந்தன் - தார் - சேனையுமாம்;

வெருவுற்று - சடுதியில் நேர்ந்த அச்சத்தால் மெய்ந் நடுங்குதல்.

எம்பெருமான்!-தலைவரே!; முன்னே அவரைப் புகழ்ந்துரைத்த (3666) போது தன் கீழே தொழில்புரியும் சேனைத் தலைவர் என்ற நிலையினையே உட்கொண்டு புகழ்ச்சி மொழி கூறினான். இப்போது அவர் திருத்தொண்டு வாய்த்த வலியுடையார் என அறிந்தபோது அவர் கீழே தான் அமைந்து அவரைத் தனது தலைவர் என்ற நிலையினை மேற்கொண்டான். இஃது அவனது பழுத்த சிவனடிமைப் பண்பின் றிறம்; அவர்பால் பிழை பொறுக்க வேண்டுவதும் அவ்வாறேயாம். இது - தொண்டராதலை அறியாமே போரில் விட்டிருந்த பிழை; "மதக்களிற் றெதிரேயிந்த, மெய்த்தவர் சென்ற போது வேறொன்று புகுதா விட்ட, அத்தவ முடையே னானேன்" (588) என்ற அரசர் பெருமான் புகழ்ச் சோழனாரது மனநிலை ஈண்டு வைத்துக் காணற்பாலது. 8

3668. இறைஞ்சுதலு முன்னிறைஞ்சி "என்னுரிமைத் தொழிற்கடுத்த
திறம்புரிவே னதற்கென்னோ தீங்"கென்ன வாங்கவர்க்கு
நிறைந்தநிதிக் குவைகளொடு நீடுவிருத் திகளளித்தே
அறம்புரிசெங் கோலரச னஞ்சலிசெய் துரைக்கின்றான், கூ

3669. "உம்முடைய நிலைமையினை யறியாமற் கொண்டுய்த்தீர் ;
எம்முடைய மனக்கருத்துக் கினிதாக விசைந்துமது
மெய்ம்மைபுரி செயல்விளங்க வேண்டியவா றேசரித்துச்
செம்மைநெறித் திருத்தொண்டு செய்யு"மென விடைகொடுத்தான்.

3668. (இ - ள்) இறைஞ்சுதலும்...என்ன - அரசன் பணிந்ததும் அதன் முன்பு தாம் இறைஞ்சி எனது உரிமையாகிய படைத்தொழிலுக் கேற்றதாகப் பொருந்திய திறத்தினையே நான் செய்வேன் ; அதனால் என்ன தீங்கு வரும் ? என்று கூற ; ஆங்கு...அளித்தே - அங்கு (அப்பொழுதே) அவருக்கு நிறைந்த நிதியின் குவைகளுடனே நீடுசெல்லும் சர்வ மானியங்களையும் கொடுத்து ; அறம் புரி...உரைக்கின்றான் - அறத்தின் வழியே அரசுபுரியும் செங்கோலரசன் அவரைக் கைகூப்பி வணங்கி உரைப்பானாகி, ௯

3669. (இ - ள்) உம்முடைய...உய்த்தீர் - உமது உண்மை நிலையாகிய திருத்தொண்டின் உறைத்த பண்பினை அறியாதபடி கொண்டு செலுத்தினீர் ; எம்முடைய...இசைந்து - இனி எமது மனக்கருத்துக்கு இனிமைபெற இசைந்தருளி ; உமது...செய்யும் என - உம்முடைய மெய்ம்மைத் தன்மையிற் செல்கின்ற திருத்தொண்டின் செயல்கள் உலகில் விளங்கும்படி உம் கருத்துக்கு வேண்டியபடியே ஒழுகிச் செம்மைதரும் நெறியாகிய சிவநெறியின் திருத்தொண்டு செய்யும் என்று கூறி; விடைகொடுத்தான் - அவரைத் தன்கீழ் அப் படைத்தொழிலினின்று விடுதலை செய்து விடை கொடுத்தனன். ௰

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

3668. (வி - ரை) முன்னிறைஞ்சி - முறைமையின் முன்னே பணிந்து.

"என்...தீங்கு" என்ன - இது பரஞ்சோதியார் கூறிய விடை ; உரிமைத் தொழிலாகிய படைக்கல விஞ்சைத் திறமும் சேனைத் தலைமையும் ஏற்று அரசர் சேவகத்தில் அணுக்கராய் அமர்ந்தமையால் அதற்கு அடுத்த கடமையாகிய செய வினையே செய்தேனே யன்றி வேறு அடாத எந்தச் செயலினிலும் ஏவப்பெற்றே னில்லை ; ஆதலின் தீங்கு ஒன்றும் உம்மைச் சாராது என்றபடி. தீங்கு - தவறு.

ஆங்கவர்க்கு...அளித்தே - ஆங்கு - அப்பொழுதே ; நிதிக் குவைகளும் நீடு விருத்திகளும் அளித்தல் - இனி அவர் தமது சீவனத்துக்காக வேறெந்தத் தொழிலையும் எவரிடத்தும் சேவகம் பூண்டு செய்யாது கவலையின்றிச் சேவித்துச் சிவனது சேவகமே செய்து வாழும்பொருட்டு ; நீடு விருத்திகள் - சர்வ மான்யமாகிய நிலங்கள் ; இறையிலி - முற்றூட்டு என்பர் ; நீடு - நிதிக்குவைகள் போல அவ்வப் போது செலவழிந்து விடாதபடி, நிலமாதலின் நீடிச்செல்வது என்றது குறிப்பு ; அளித்து - அளியுடன் தந்து என்றது குறிப்பு.

அறம்புரி செங்கோல் அரசன் - பரஞ்சோதியார்க்கு அப்போது மணமாகாத இளவயது (3671) ; சிறந்த படைக்கலப் பயிற்சியும் ஒப்பற்ற சேனைத் தலைமைத் திறமும் வாய்ந்தவர்; பல போர்களில் வென்று பொருமரசர் தேசங்கள் பல வென்று அரசாங்கத்தினை வளர்த்தார் ; வெல்லுதற்கரிய வாதாவித் தொன்னகரத்தைத் துகளாக்கிப் பகைவனை வென்று அரசனுக்குப் புகழும் பெருமையும் தேடித் தந்தனர் ; இவர் இன்னும் பன்னாள் தமது அரசசேவையில் இருந்தால் அரசு சிறந்து ஓங்கும் ; அரசசேவையிலிருந்து விடுதி பெறுங்காலம் இன்னும் பல ஆண்டுகள் உண்டு ; (இந் நாளினும் 55 வயது அரசாங்க சேவகர்கள் விடுதி பெறுங்காலம் என வகுத்துள்ளதும்

கருதுக.) இவையெல்லாம் அறிந்து வைத்தும் அரசன் உலகியல் அரசினும் சிவன் றொண்டே பெரிது என்றும், சிவன் றொண்டரை வணங்கி, அவர் வழியொழுகுவதன்றித் - தன்கீழ்ச் சேவகத்தில் வைத்து ஏவல் கொள்ளுதல் அடாத பாவம் என்றும் உண்மை நீதியினை உணர்ந்தானாதலின் அவ்வழி ஒழுகினான் என்பார் அறம்புரி செங்கோல் அரசன் என்று சிறப்பித்தார். செங்கோல் - அரசின் உலகியல் நிலை ; அறம்புரி - அரசின் உயர்ந்த தெய்வநிலை. அறம் - சிவனியமமாகிய வேத சிவாகமங்களின் மேலாக முடித்துக் கூறும் சிவ தரும விதிகள் என்ற பொருளில் வந்தது.

உரைக்கின்றான் - சொல்வானாகி, முற்றெச்சம் ; உரைக்கின்றானாகி - என - விடை கொடுத்தான் என்று மேல் வரும் பாட்டுடன் முடிக்க.

எதிரிறைஞ்சி—என்பதும் பாடம்.  9

3669. (வி - ரை) இது அரசன் கூறிய முடிவும் தீர்ப்பும் ஆகும். பரஞ்சோதியார், தமது உரிமைத் தொழிலின் கடமையே செய்தேன், அதனிற் றீங்கில்லை என்று கூறியதனை அரசன் ஏற்றுக் கொள்ளவில்லை. உலகியற் கடமைகளினியல் வேறு ; சிவனடிமைத்திறத்தின் பண்பு வேறு ; பின்னையது அதனினும் சிறந்தது ; மேலாய்க்கொண்டுய்க்கத் தகுந்தது. அரசியல், மக்களின் உடம்பின் நன்மைகளையே கருதி அதனோடொழிவது ; சிவனியலாகிய பண்பு அதனின் மேம்பட்ட உயிரின் நன்மை பற்றியது என்பதாம்.

உம்முடைய...உய்த்தீர் - நிலைமை - உயர்ந்த நிலை ; அறியாமை - பிறர் அறியாத வண்ணம். உய்த்தல் - செலுத்துதல் ; அறியாமற் கொண்டுய்த்தோம் என்ற பாடம் சிறப்பின்று. சிவன் திருத்தொண்டு, அன்பினாலே சிவனும் உயிருமே அறியச் செய்வதன்றி, உலகறிய ஆரவாரமாகச் செய்வதன்று என்பது சிறந்த ஒழுக்கமாம்.

எம்முடைய ..இசைந்து-இதனை நீர் மறுக்கலாகாது என்று அரசன் வேண்டியபடி.

மெய்ம்மை புரி உமது செயல் - என்க ; மெய்ம்மை புரி - மெய்யாகிய (சத்) இறைவர்பாற் செய்யும் அன்பின் திறங்கள்.

வேண்டியவாறே சரித்து - அன்பின்திறம் வெளிப்பாடாகும் நிலைகளும், அது பற்றி மேற்கொள்ளும் செயல்களும் பலவாதலின் அவற்றுள் உமது கருத்துக்கிசையுமாறு வேண்டியவாறே என்பது ; சரித்தல் - உலகத்தில் ஒழுகி வாழ்தல். இஃது உலகியல் பற்றியது. இசைந்து - உய்த்தீர் - என்று கூட்டியுரைக்கவும் நின்றது.

செம்மை நெறி...செய்யும் - இஃது உயிரினியல் பற்றி அரசன் கொண்ட விருப்பம். செம்மை - சிவத்தன்மை.

விடைகொடுத்தான் - விடை - அரச சேவையினின்றும் விடுதி.

இசையுமிது—என்பதும் பாடம்.  10

3670. மன்னவனை விடைகொண்டு தம்பதியில் வந்தடைந்து
பன்னுபுகழ்ப் பரஞ்சோதி யார்தாமும் பனிமதிவாழ்
சென்னியரைக் கணபதீச் சரத்திறைஞ்சித் திருத்தொண்டு
முன்னைநிலை மையின்வழுவா முறையன்பிற் செய்கின்றார், கக

3671. வேதகா ரணரடியார் வேண்டியமெய்ப் பணிசெய்யத்
தீதில்குடிப் பிறந்ததிரு வெண்காட்டு நங்கையெனுங்
காதன்மனைக் கிழத்தியார் கருத்தோன்ற வரும்பெருமை
நீதிமனை யறம்புரியு நீர்மையினை நிலைநிற்பார், கஉ

3672. நறையிதழித் திருமுடியா ரடியாரை நாடோறும்
முறைமையினிற் றிருவமுது முன்னூட்டிப் பின்னுண்ணும்
நிறையுடைய பெருவிருப்பா னியதியா கக்கொள்ளுந்
துறைவழுவா வகையொழுகுந் தூயதொழிற் றலைநின்றார். கங

3670. (இ - ள்) மன்னவனை... அடைந்து - அரசனை விடை கொண்டு தமது பதியின்கண் வந்து சேர்ந்து ; பன்னும்...இறைஞ்சி - எடுத்துச் சொல்லப் பெறும் புகழினையுடைய பரஞ்சோதியாரும் குளிர்ச்சியுடைய சந்திரனைச் சூடிய சிரத்தினை உடைய இறைவரைக் கணபதீச் சரத்திலே வணங்கி ; திருத்தொண்டு... செய்கின்றார் - திருத்தொண்டினை முன்னை நிலைமையினின்றும் வழுவாமல் முறைப்படி அன்பினுற் செய்கின்றாராய் ; கக

3671. (இ - ள்) வேதகாரணர் அடியார்......செய்வார் - வேதங்களுக்குக் காரணராகிய சிவபெருமானடியார்களுக்கு வேண்டிய உண்மைப் பணிகளையெல்லாம் செய்வாராய் ; தீதில்குடி...நிலை நிற்பார் - குற்றமில்லாத குடியிலே பிறந்த திருவெண்காட்டு நங்கை என்கின்ற காதலையுடைய மனைக்கிழத்தியாருடனே கூட இருவர் கருத்தும் ஒன்றாகப் பொருந்த வரும் பெருமையுடையதாய் அறநீதியின் வழியே இல்லறம் புரிந்து வாழும் தன்மையினை நிலை நிற்பாராய், கஉ

3672. (இ - ள்) நறையிதழி...அடியாரை - தேன்பொருந்திய கொன்றை மாலையைச் சூடிய திருமுடியினையுடைய சிவபெருமானது அடியார்களை ; நாடோறும்...துறை - நூல்விதிப்படி நாடோறும் முறைப்படி முன்னே திருவமுதூட்டிப் பின்னே தாம் உண்ணுதலாகிய நிறைவுடைய பெரிய விருப்பத்தினாலே அதனை நியதியாகிய நியமமாகக் கொண்டு ஒழுகும் துறையினில்; வழுவா...தலைநின்றார்-தவறாமல் ஒழுகுவதாகிய தூய்மையுடைய தொழிலிற் சிறந்து விளங்கினர். கங

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

3670. (வி - ரை) தம்பதியில் வந்து அடைந்து - அரசனது நகரத்தினின்றும் தமது பதியாகிய திருச் செங்காட்டங்குடியில் வந்து என்க. அரசன் தலை நகரம் காஞ்சிபுரமென்பது சரித ஆராய்ச்சியாளரா ற் கருதப்படுகின்றது.

பனிமதிவாழ் சென்னியரைக் கணபதீச்சரத் திறைஞ்சி - பனிமதிவாழ் சென்னியர் - சிவபெருமான். அவரைக் கணபதீச் சரத்தில் இறைஞ்சி என்றது அவரை எங்கும் எவ்விடத்தும் எப்பொருளிலும் வணங்கலாம் ; "எவனுக்கு முற்றும் வடிவங்களாகும்" (காஞ்சிப்புரா) என்பது கேனோபநிடதம்; இங்கு அவரைக் கணபதீச்சரத் திருக்கோயிலிற் கண்டு வணங்கி ; கணபதீச்சரம் என்பது திருச்செங்காட்டங்குடித் திருக்கோயிலின் பெயர். "கன்னவிறோட் சிறுத்தொண்டன் (உடைய) கணபதீச் சரமேய, இன்னமுதன்" (பிள். தேவா); விநாயக மூர்த்தி கயமுகாசுரனைக் கொன்றபோது இரத்த வெள்ளம் பெருகிய காரணத்தால் திருச்செங்காட்டங்குடி என்ற ஊர்ப்பெயரும், அப்போது கணபதியினுற் சிவலிங்கம் தாபிக்கப் பட்டமையால் கணபதீச்சரம் என்ற கோயிலின் பெயரும் போந்தன. (கந்தபுராணம் - கயமுகனுற்பத்திப் படலம்) ; "...இபமுகத் தவுணன் மார்பி, னீடிய குருதிச் செந்நீர் நீத்தமா யொழுகும் வேலைப், பாடுற வருங்கா ணென்றிற் பாத்தவி னதுவே செய்ய காடெனப் பெயர்பெற்று" (250); "மீண்டுசெங் காட்டிலோர்சார் மேவிமெய்ஞ் ஞானத் தும்பர், தாண்டவம் புரியுந் தாதை தன்னுருத் தாபித்

தேத்திப், பூண்டபே ரன்பிற் பூசை புரிந்தனன் புவியு ளோர்க்குக், காண்டகு மனைப் தானங் கணபதீச் சரம தென்பர்" (ஷை 264).

முன்னை நிலைமையின் - முன்னை - அரசன்பால் படைத்தொழிலில் அமர்ந்து சென்றதன்முன்; 3663 - 3664 - பார்க்க. முன்னை நிலைமையின் - என்றது முன்னைப் பிறவியிற் செய்த தவ நிலைமை காரணமாக என்ற குறிப்பும் தருவதாம்.

முறை - சிவாகம விதிமுறை.

செய்கின்றார் - முற்றெச்சம்; செய்கின்றாராகித் - தலை நிற்பாருமாகித் (3671), தூய - தொழிற்றலை நின்றார் (3672) என்று வரும் பாட்டுக்களுடன் முடிக்க.

பனிமதி - சிவனை அடைவதன் முன்னே முனி சாபத்தாற் றளங்கிய மதி என்றலுமாம். பனித்தல் - துளங்குதல் - நடுங்குதல். 11

3671. (வி - ரை) அடியார் - பணிசெய்ய - நீதி மனை அறம்புரியும் நீர்மை - சிவன் திருத்தொண்டு முறை அன்பிற் செய்கின்ற நாயனார் அடியார்களுக்குப் பணி செய்வதற்காக மனையறத்தை மேற் கொண்டார் என்பது ஈண்டுக் கவனிக்கற்பாலது; "தென்புலத்தார் தெய்வம்" என்றும், "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும்" என்றும், "இயல்புடைய மூவர்க்கு" என்றும் (குறள்) இல்வாழ்வான் கடமைகளை நீதிநூல் வகுத்துக் கூறும். அவை வேறு; இங்குக் கூறிய அடியார் பணியாகிய அறம்புரி நீர்மை வேறு; முன்கூறியவை உலகியற் பயத்தன. உரிய போகங்களைத் தந்து இறுதியிற் பிறவிக்கேதுவாவன; ஆனல் அடியார் பணியோ! எனின், அவற்றின் வேறாய்ச், சிவன் பணியேயாய் முடிவில் வீடுபேற்றுக் கேதுவாவன. இங்கு நாயனார் உலகியற் போகங்கள் பற்றியேனும் மகப்பேறு பற்றியேனும் மணஞ் செய்து மனையறம் மேற்கொண்டாரலர்; அடியார் பணிவிடைக்காக வென்றே அதனை மேற் கொண்டனர் என்பார், அடியார் மேய்ப்பணி செய்ய என்றார். பின்வரும் சரித நிகழ்ச்சி யிதனை உறுதிப்படுத்துதல் காண்க. இல்வாழ்க்கை நிலையின் அடியார்களுக்குப் பணிசெய்த இளையான்குடிமாறர், இயற்பகையார், குங்கிலியக் கலயர் முதலாகிய இப்புராணப் பெரியோர்களது சரிதங்களையும் இங்கு நினைவுகூர்க.

தீதில் குடிப் பிறந்த - இருமரபுந் தூயராய் வரும் நல்ல குடிப்பிறப்பு வேண்டப் படுவது. "இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி" (முருகு). குடிப்பிறந்தார் - குலத்தின்கண் - என்று பலவாறும் இதனை எடுத்து ஓதுவார் திருவள்ளுவர்.

திருவெண்காட்டு நங்கை - இவ்வம்மையின் இயற்பெயர் விளங்கவில்லை; ஊர்ப் பெயர் பற்றியே விளக்கமாய் வழங்கப் பெற்றனர் போலும்; "காரைக்காலம்மை" என்ற வழக்குக்காண்க.

காதன்மனைக்கிழத்தியார் ..பெருமை - காதல் மனைக்கிழத்தியார் - இவர்களது இல்லறம் அகப்பொருணூல்களில் கூறியபடி காதற்றன்மையும் பொருந்தி யிருந்தது என்றபடி; கருத்தோன்ற வரும் பெருமை - "காத விருவர் கருத்தொருமித்-தாதரவு, பட்டதே யின்பம்" என்பது காண்க. இருவர் மனமும் ஒன்றியிராவிடில் அஃது இல்லறமாகாது; "இருவரும் பூண்டீர்ப்பி னல்லால், இல்வாழ்க்கை யென்னும் இயல் புடைய வான்சகடம், செல்லாது" என்ப; அருமைநோக்கிப் பெருமை என்றார்; கருத் தொன்றவரும் உலகிறந்த அரிய பெருமையினை இச்சரித நிகழ்ச்சியிற் கண்டுகொள்க.

நீர்மையினில்—என்பதும் பாடம். 12

3672. (வி - ரை) நாடோறும் அடியாரைத் திருஅமுது முன் ஊட்டிப் பின் உண்ணும் - நியதி - அடியார்க்கு அமுதூட்டியபின்பே தாம் உணவு கொள்வதாகிய

நித்த நியமத்தினை நியதியாகக் கொள்வது ; சாக்கியனார் சிவலிங்கங் கண்டுண்ணும் நியதி கைக்கொண்டனர். இங்கு நாயனார் சிவனடியாரை முன்னூட்டிப் பின் உண்ணும் நியதியைக் கொண்டனர். ஈரிடத்தும் ஒப்ப இந்நியதியே சரித விளைவுக்குக் காரணமாய் வீடுபேறளித்த நிலை கண்டு கொள்ளத்தக்கது.

திருவமுது என்றார் அடியார்களேயின்றி அரனும் உள்நின்று அமுதுண்கின்றா ராதல் குறிக்க. பின்னர் அரனே அவ்வமுதுண்ண வருதலும் குறிப்பு.

துறை - நெறி - ஒழுக்கம்.

தூயதோழில் - தூய்மை செய்து உதவும் தொழில் ; தூய்மை செய்தலாவது பாசம் போக்குதல்

இம்மூன்று பாட்டுக்களானும் சிவன் பணி முதலிற் கூறி, அதன் பின் அடியார் பணிக்காக மனையறம் பூண்ட சீர்மை கூறி, அதன்பின் அந்த மனையறத்தினின்று செய்த அடியார் பணியினைத் தொடர்ந்து கூறிய பொருத்தம் கண்டு கொள்க. திருவமுதளித்த நிலை வரும் பாட்டிற் கூறுவார்.

பெருவிருப்பு—என்பதும் பாடம். 13

3673. தூயதிரு வமுதுகனி கன்னலறு சுவைக்கறிநெய்
பாயதயிர் பாலினிய பண்ணியமுண் ணீரமுத
மேயபடி யாலமுது செய்விக்க விசைந்தடியார்
மாயிருஞா லம்போற்ற வருமிவர்பான் மனமகிழ்ந்தார். கங

(இ - ள்) தூய...உண்ணீர் அமுதம் - தூய்மையாகிய திருவமுதும், கனிவகையும், சர்க்கரையும், ஆறு சுவைகளையுடைய கறி வகைகளும், நெய்யும், உறைந்த தயிரும், பாலும், இனிய பலகாரங்களும், அமுதம்போன்ற உண்ணீரும் ஆகிய இவைகளை ; மேய...செய்விக்க - பொருந்தியவாற்றால் திரு அமுது செய்விக்க ; இசைந்து...மகிழ்ந்தார் - அதற்கிசைந்து அடியார்கள் வந்து அமுதுண்டு பெரிய உலகம் போற்றவரும் இவரிடத்து மனமகிழ்ச்சி கொண்டார்கள்.

(வி - ரை) தூய...உண்ணீரமுதம் - உரியவாறு திருவமுது அமைக்க வேண்டிய பகுதிகளைக் குறித்தவாறு. அரசர்பாற் சிறந்த சேனைத்தலைவராயும் போன் புடையராயு மிருந்தாராதலின் பாஞ்சோதியார் ஒன்றும் குறைபாடின்றி இவ்வெல்லா வற்றானும் அமைத்தூட்டினார் என்பார் இவ்வாறு விரித்துக் கூறினார் ; "உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தினில்"(443) எனப் பொதுவகையால் முன்கூறிய தனை ஈண்டு இடநோக்கி விரித்துரைத்தபடி ; இதனை வற்புறுத்தி உபதேசிக்கும் வகையாலும் விரித்துக்காட்டும் வகையாலும், கூறினார். " அன்றமுத ஞடோறு நாடோறு மண்ண லடியாரள விறந்தபெயர் வந்தவர்க ளெல்லாஞ், சென்றுறையத் திருமடங்க டிருமடங்க டோறுந் திருவிளக்கங் கவர்சாத்த வுள்ளுடைமேற் போர்வை, துன்றியசெந் நெலினடிசில் கன்னனறுங் கனிக டேயவறு சுவைக்கறிநெய் தயிர் திரண்ட பாறேன், நன்றுதிருப் பண்ணியந்தண் ணீரமுத மடைக்காய் நரபதியே வலினமைச்சர் நாடோறு நடத்த " (புராண வரலாறு - 72) என்று உமாபதியார் இதனை எடுத்துக்கூறுதல் காண்க.

திருவமுது - செந்நெல்லின் அடிசில் ; பால் - திரட்டிக்காய்ச்சிய பால் ; உண்ணீர் அமுதம் - உண்பதற்கு (தாகத்திற்குக் குடிப்பதற்கு) வேறாகப் பக்குவப்படுத்திய நீர் ; இது மிக முக்கியமாகக் கவனிக்கத்தக்க தொன்றென்பார் நீர் அமுதம் என்றடை

மொழி புணர்த்தி ஓதினர் ; "வெயிலின்வைத் தாற்றிய தண்ணீர் நாற்றமிட் டிருப்ப" என்பர் பட்டினத்தடிகள் ; உண்ணல் என்னும் பொதுவினை ஈண்டுப் பருகுதலைக் குறித்தது; பாய தயிர் - பிரையிட்டுக் கட்டியாக்கிய தயிர். இவை நியம மாக நாடோறும் செய்யும் வகை. இதன்மேல் அடியார்கள் வேண்டியவாறு செய்தல் வேறு சிறப்புவகை ; அதனை இந்நாயனார் சரிதத்துள் மேற் கண்டு கொள்க.

மாயிருஞாலம் - மா - இரு - ஒரு பொருட் பன்மொழி ; மிகுதி குறித்தது.

மேயபடி—மிசைந்தடியார்—என்பனவும் பாடங்கள் 14

3674. சீதமதி யரவினுடன் செஞ்சடைமேற் செறிவித்த
நாதனடி யார்தம்மை நயப்பாட்டு வழிபாட்டான்
மேதகையா ரவர்முன்பு மிகச்சிறிய ராயடைந்தார்
ஆதலினாற் சிறுத்தொண்ட ரெனநிகழ்ந்தா ரவனியின்மேல். கரு

(இ - ள்) சீதமதி...தம்மை - குளிர்ந்த சந்திரனைப் பாம்பினுடனே சிவந்த சடையின்மேல் நெருங்கும்படி வைத்த சிவபெருமானது அடியார்களுக்கு ; நயப் பாட்டு வழிபாட்டால்-விருப்பத்துடன் செய்யும் வழிபாட்டு வகையினாலே ; மேதகை யார்...அடைந்தார் - மேன்மையுடையோராகிய அவ்வடியார்களின் முன்பு தம்மை மிகவும் சிறியாராய் வைத்து, அடைந்து, ஒழுகிவந்தனர் ; ஆதலினால்...அவனியின் மேல் - ஆதலாலே சிறுத்தொண்டர் என்ற பெயருடனே உலகில் நிகழ்வதாயினர்.

(வி - ரை) இந்நாயனாரது இயற்பெயர் பரஞ்சோதியா ரென்றிருப்பவும், ("பலர்புகழுந் திருநாமம் பரஞ்சோதியா ரென்பார்"- 3661) சிறுத்தொண்டர் என்றே உலகில் வழங்கவும், திருத்தொண்டத் தொகையினுள் போற்றப்படவும் போந்த கார ணங் கூறியவாறு ; காரணம்பற்றிய பெயராதலானும், சிறப்புடைமையானும், நாயனாரது விருப்பத்துக் கிணங்கிய பெயராதலானும் இயற்பெயரினும், இதுவே உலகிற் பெரியோர்பால் வழங்கலாயிற்று என்க.

அடியார் தம்மை நயப்பாட்டு வழிபாட்டால் - நயப்பாடு - நயப்பு - விருப்பம்; தம்மை - தமக்கு ; வேற்றுமை உருபு மயக்கம். தம்பாற் செய்யும் என ஏழனுரு பாகக் கொள்ளனுமாம். வழிபாட்டால் - வழிபடும் வகையால் ; வழிபாட்டால் - அடைந்தார் - என்று கூட்டுக.

மேதகையார் - மேதகைமை - மேம்பாடு ; சிவனடியாராதலே மேம்பாடென் பது ; திருக்கூட்டச் சிறப்புப் பார்க்க.

அவர்முன்பு மிகச்சிறியரா யடைந்தார் - அடியார்களது பெருமையின் முன்பு தம்மை மிகச்சிறிய ராகவே கண்டு அடைந்து ஒழுகினர் ; அடியார்களைக் காணுந் தோறும் இவர்களது பெருமை எங்கே! அடியேனது சிறுமை எங்கே ! இவர் கருணையினால் தமது பெருமைபாராது சிறியேனை ஆட்கொள்ள எழுந்தருளினர் என எண்ணி அதற்குத்தக வொழுகுதல் இதன் தன்மை ; "எத்தனையு மரியநீ யெளியை யானாய் ! எளியேனை வந்திரங்கி யேன்று கொண்டாய்...இத்தனையு மெம்பரமோ ! ஐய ! ஐயோ ! எம்பெருமான் றிருக்கருணை யிருந்த வாறே" (அரசு. தேவா) என்பது இவ்வியல்பினைக் காட்டுவதாம்.

அவனியின்மேல் - உலகில் ; மேல் - உயர்வாக : உயர்ந்தோரிடத்து என்ற குறிப்புமாம்; "பூதிசா தனத்தவர்முன் போற்றப் போதேனாயிடினும், நாத னடியார் கருணையினா லருளிச் செய்வர் நான்என்று" (3703) என்று பின்னர் நாயனார் திரு வாக்கிற் கூறுதல் காண்க. 15

3675. கண்ணுதலார் கணபதீச் சரத்தின்கட் கருத்தமர
உண்ணிறையன் பினிற்பணிசெய் தொழுகுவார் வழுவின்றி
எண்ணில்பெருஞ் சீரடியா ரிடைவிடா தமுதுசெய
நண்ணியபே ருவகையுட னயந்துறையு நாளின்கண், கசு

3676. நீராருஞ் சடைமுடியா ரருளினு னிறைதவத்துப்
பேராள ரவர்தமக்குப் பெருகுதிரு மனையறத்தின்
வேராகி விளங்குதிரு வெண்காட்டு நங்கைபாற்
சீராள தேவரெனுந் திருமைந்த ரவதரித்தார். கஎ

3675. (இ - ள்) கண்ணுதலார்...ஒழுகுவார் - நுதலிற் கண் உடைய இறைவரது கணபதீச்சரத்தின் கண்ணே கருத்துப் பதிய விரும்பி உள்ளே நிறையும் அன்பினாலே திருப்பணிகள் செய்து ஒழுகுவாராகிய அவர்; வழுவின்றி - குறைவில்லாமல்; எண்ணில் பெரும்...செய - அளவில்லாத பெருமையுடைய சிறந்த அடியார்கள் இடையறாது வந்து அமுது செய்தருள; நண்ணிய...நாளின் கண் - பொருந்திய பெரிய மகிழ்ச்சியுடனே விரும்பி அமர்ந்திருந்த நாளிலே, கசு

3676. (இ - ள்) நீராரும்...அருளினால் - கங்கையாறு பொருந்திய சடை முடியினையுடைய சிவபெருமானது திருவருளினாலே; நிறைதவத்து...நங்கைபால் - நிறை தவத்தினை உடைய அவருக்குப் (சிறுத்தொண்டருக்கு) பெருகும் சிறந்த இல்லறத்தின் வேராகி விளங்கும் திருவெண்காட்டு நங்கை என்னும் மனைவியாரது மணிவயிற்றினிடமாக; சீராள தேவரெனும்...அவதரித்தார்-சீராள தேவர் என்னும் திருமகனார் வந்தவதரித் தருளினர். கஎ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

3675. (வி - ரை) கருத்தமர உள்நிறை அன்பினில் - கருத்து அமர்தல் - மனம் ஊன்றி நிற்றல்; பணி செய்யும் ஆசையில் அழுந்துதல்; அமர - அமர்தலினால்; விரும்புதலினால்; அன்பினில் - அன்பு காரணமாக; உள்நிறை - மனத்தினுள் நிறையும்.

ஒழுகுவார் - ஒழுகுவாராகிய நாயனார்; வினையாலணையும் பெயர்; ஒழுகுவார்-உறையும் நாளின்கண் என்று முடிக்க.

வழுவின்றி - வழுவின்றிப் பணிசெய்து என்றும், வழுவின்றி அமுதுசெய என்றும், முன்னும் பின்னும் கூட்டி உரைக்க நின்றது. வழு - குறை.

எண்ணில் பெருஞ்சீர் - எண்ணில் - தொகையின் பெருமை; பெருஞ்சீர் - சிறப்பின் பெருமை.

நயந்து - அளவில்லாத அடியார்கள் இடையறாது அமுது செய்தல் கண்டு அதனில் மேலும் விருப்பம் மிகுந்து. 16

3676. (வி - ரை) அருளினால் - மைந்தர் அவதரித்தார் - என்க. "கூத்தனாருளாலே...பெண் கொடியைப் பெற்றெடுத்தார்" (876) என்றது காண்க; அருளினால் - சிவன் பணியும், அடியாரை அமுதூட்டிய பணியும் கூடச் சிவனருள் சுரந்தமையால் என்க. "அடியார்க் குரிய வர்ச்சனை யுலப்பில் செய்த" (2938).

நிறைதவத்துப் பேராளர் - தவம் - அரன்பூசையும் அடியார் பூசையும்; நிறை தவம் - அவரது தவம் இம் மகப் பேற்றினாலே நிறைவெய்த உள்ளது என்ற குறிப்புப்பெற இவ்வாற்றால் உரைத்தமை காண்க. பேராளர் - பெரியவர்; தவம்

நிறைதற்கேதுவாகிய அடியார் பூசை; சிறுத்தொண்டர் என்ற காரணப் பெயரினைப் பூண்டவர் என்றலுமாம். பேர் - புகழுமாம்.

திருமனையறத்தின் வேராகி - மனையறமாகிய தாவரத்துக்கு மனைக்கிழத்தியாரே வேர்போன்றவர் என்பது; இவர்களது இல்லறச் சிறப்பும் மேல் வரும் சரித நிகழ்ச்சிக் குறிப்புமாம். "கருத்தொன்ற வரும்பெருமை நீதிமனை யறம்புரியும்" (3671). பெருந்திரு - பேரழகு பொருந்திய என்றலுமாம். வேர் - மூலம்;

அவர்தமக்கு - நங்கையால் - மைந்தர் - அவதரித்தார் என்று தந்தையர் தாயர் இருவரையும் உடன்கூறியது இருவர் அன்பும் ஒருமித்துப் பின் நிகழும் சரிதக் குறிப்புப் பெறுதற்கு: "தொண்டர் மனைவியார் நீடு மகனார்" (3746) என்று இறுதியில் ஒன்றுசேர்த்துக் கூறும் திறமும் காண்க.

சீராளதேவரெனுந் திருமைந்தர் - சிறந்த இச் சரித விளைவுக்கு மூலமாய், இறைவர் தாமே விரும்பிய பண்டமெனச் சொல்லப்பெறும் பேறு பெற்றவராய், "சீராளன் சிறுத்தொண்டன்" என்று ஆளுடைய பிள்ளையாரது மறைத் திருவாக்கினிற் பிறக்கும் பேறுடையவராய் (3682), முருகப் பெருமானுடன் வந்து இறைவர் ஆட்கொள்ளும் தனிச் சிறப்புடைய பேறுபெறுபவராய் உள்ள பெருமைகள் எல்லாம் குறிக்க இங்கு இவ்வாறு அருமைபெறக் கூறினார். பின்னரும், "நீடு மகனார்" என்பது காண்க. 17

3677. அருமையினிற் றனிப்புதல்வர் பிறந்தபொழு தலங்கரித்த
பெருமையினிற் கிளைகளிப்பப் பேறற்கரிய மணிபேற்று
வருமகிழ்ச்சி தாதையார் மனத்தடங்கா வகைவளரத்
திருமலிநெய் யாடல்விழாச் செங்காட்டங் குடியெடுப்ப, கஅ

3678. மங்கலநல் லியமுழக்க மறைமுழக்கம் வானளப்ப
அங்கணர்தஞ் சீரடியார்க் களவிறந்த நிதியளித்துத்
தங்கண்மர பினிலுரிமைச் சடங்குதச தினத்தினிலும்
பொங்குபெரு மகிழ்ச்சியுடன் புரிந்துகாப் பணிபுனைந்தார். கசு

3677. (இ - ள்) அருமையினில்...பொழுது; அருமையாக ஒப்பற்ற மகனார் பிறந்தபொழுது; அலங்கரித்த...களிப்ப - அலங்காரங்கள் செய்து அப்பெருமையினால் சுற்றத்தார்கள் களிப்புற; பெறற்கரிய...வளர - பெறுதற்கரிய மணி போன்ற மகனாரைப் பெற்றதனால் வரும் மகிழ்ச்சியானது தந்தையாராகிய நாயனார் மனத்துள்ளே அடங்காத வகை மேலோங்கி வளர; திருமலி...எடுப்ப - சிறப்பு மிக்க நெய்யாடல் விழாவைத் திருச்செங்காட்டங்குடியில் உள்ளோர் எல்லவரும் செய்து கொண்டாட, கஅ

3678. (இ - ள்) மங்கல...வானளப்ப - மங்கலமாகிய நல்ல இயங்களின் முழக்கமும் மறைகளின் முழக்கமும் வானின் ஓங்க; அங்கணர்தம்...அளித்து - இறைவருடைய சிறப்புடைய அடியார்களுக்கு அளவில்லாத நிதிகளைக் கொடுத்து; தங்கள்...புரிந்து - தங்கள் குல மரபினுக்கு உரிமையாகிய சடங்குகளைப் பத்துநாட்களிலும் மேன்மேல் அதிகரிக்கும் மகிழ்ச்சியுடனே புரிந்து; காப்பு அணிந்தார் - காப்புச் சாத்தினர். கசு

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

3677. (வி - ரை) இந்த இரண்டு பாட்டுக்களாலும் சீராள தேவரது திரு அவதாரத்தில் நிகழ்ந்த மகிழ்ச்சிச் செயல்களும் சடங்குகளும் கூறப்பட்டன.

**அலங்கரித்த...கிளைகளிப்ப** - மனை அலங்காரங்கள் முதலியவை செய்து மகிழ்ந்தனர் கிளைஞர்கள் என்க.

**பெறற்கரிய...வளர** - தந்தையார் பெறற்கரிய மகனைப் பெற்றதனால் மகிழ்ந்தார் என்க. **மணி** - மணிபோன்ற மகவு : " இந் நடைமணியைத் தந்தபின்னர் " (திருக்கோவை - 385) ; **பேற்று** - பெறுதலால் ; **பெறற்கரிய** - என்றது பிறந்த பொழுதே சோதிடம், உடற்கூற்று இலக்கண நூல் முதலிய அளவைகளால் கண்டு அறிந்தவாறு அம்மகவின் அருமை குறித்தது.

**நெய்யாடல் விழா** - நன்மகப் பேற்றில் அயலோர் செய்வதொரு மகிழ்ச்சிச் சடங்கு. " மீதணியு நெய்யணி விழாவொடு திளைப்பார் " (1933) என்று ஆளுடைய பிள்ளையார் திருவவதாரத்துக் கூறுதல் காண்க. எண்ணெயாடல் விழா என்பாரு முண்டு.

**அலங்கரித்த பெருமை** - என்பதற்கு இவ்வாறன்றி, அம்மகப்பேறு அந்த மனை வாழ்க்கையை அணிகலம் போன்று அலங்கரித்த மேன்மையால் என்று உரைத்து, " மற்றத னன்கல நன்மக்கட் பேறு " (குறள்) என் றுதகரிப்பாரு முண்டு.

அலங்கரித்து—மகப்பெற்று—என்பனவும் பாடங்கள். 18

3678. (வி-ரை) **மங்கல...அளப்ப** - மங்கல இயங்கள் முழக்குதலும், வேத மந்திரங்களை ஓதி வாழ்த்துதலும் மகப்பேற்றின் மகிழ்ச்சிச் செயல்கள். **மறை முழக்கம்** - மாமாத்திரர் என்ற இவரது குலம் அந்தணர்க்கும் அரசர்க்கும் இடையில் வைத்து ஒருசார் வேத மந்திரச் சடங்குகளுக்கு உரியாராதல் பெறக் கூறியவாறு. பிறர் உச்சரிக்காமலே தாமாகவே முழங்கிய மறைகளின் முழக்கம் என்றலும் குறிப்பு ; இருவகை முழக்கங்களையும் சேர்த்துக் கூறியதனால் இரண்டும் தாமாகவே முழங்கின என்றலுமாம். " எங்கணு மியற்றுபவ ரின்றியு மியம்பு, மங்கல முழக் கொலி மலிந்தமறு கெல்லாம் " (1932) ; " ஓவா, வேதமொழி யாலொலி விளங்கியெழு மெங்கும் " (1929) என்றவையும், பிறவும் காண்க. **வான் அளப்ப** - வான் அளவும் ஓங்க ; பெருமையினாலும் வானையும் தம்முட்பட மேலோங்கி அளவு படுத்தி நிற்க.

**அங்கணர்தம்...நிதியளித்து** - இஃது இச்சடங்கிற் செய்த சிறந்த செயலாம் : நாயனாரது அன்பின் மேன்மை காட்டுவது ; சிறந்த பயன் தருவது. இதனை வனை உலகவரும் கைக்கொண்டொழுகுதல் பயன்தரும்.

**மரபினில் உரிமைச் சடங்கு** - தமது குலமரபுக்கு உரிய விதிச் சடங்குகள் : **தசதினத்தினிலும்** பிறவி, யிறவிகளில் பத்துநாட் சடங்குக்குரிய மரபு என்பது : இவற்றிற் பதினாறுநாட் சடங்குக் குரிய வேறு குலங்களுமுண்மை நூல்களுட் காண்க. " தூயதிரு மாமறை தொடர்ந்தநடை நூலின், மேயவிதி யையிரு தினத்திலும் விளைத்தார் " (1938) என்றது காண்க. இவை " சாதக முறைப்பல சடங்கு " என்ப. ஆளுடைய பிள்ளையார் புராணம் பார்க்க.

**காப்பணி** - திருநீற்றுக்காப்பு. வேறு உலகர் கொள்ளும் காவல் முறைகளும் உடன் கொள்ளலாம். 19

3679. ஆர்வநிறை பெருஞ்சுற்ற மகமலர வளித்தவர்தாம்
பார்பெருகு மகிழ்ச்சியுடன் பருவமுறைப் பாராட்டுச்

சீர்பெருகச் செய்யவளர் திருமகனார் சீறடியிற்
றார்வளர்கிண் கிணியசையத் தளர்நடையின் பதஞ்சார்ந்தார். ௨௦

(இ - ள்) ஆர்வ...அளித்து - பெருவிருப்புடைய பெருஞ் சுற்றத்தார்களெல்லாம் மனமகிழக் கொடுத்து ; அவர் தாம்...செய்ய - அந் நாயனார், உலகத்திற் பெருகும் மகிழ்ச்சியுடனே அவ்வப் பருவங்கடோறும் செய்யப் பெறும் சடங்குகளை எல்லாம் சிறப்புப் பெருகச் செய்ய ; வளர்...சார்ந்தார் - வளரும் திருமகனாராகிய சீராள தேவர் தமது சிறிய திருப்பாதங்களில் மாலையாகக் கோத்த கிங்கிணிச் சதங்கை அசையும்படி தளர்நடைப் பருவத்தினைச் சார்ந்தனர்.

(வி - ரை) ஆர்வநிறை...அளித்து - சுற்றத்தார்க்கு மிகச் சிறப்புடன் வரிசைகள் தந்து ; இஃது இம்மகிழ்ச்சிச் சடங்குகளுள் ஒன்று ; அடியார்க்கு நிதியளித்தலைச் சிறப்பும் பயனும் பற்றி முன்னர்க் கூறினார்.

பார்பெருகு மகிழ்ச்சி - உலகில் உள்ளார்களும் பெருமகிழ்ச்சி கொள்ளுதல் ஈகைத் திறத்தினாலாவது.

பருவமுறைப் பாராட்டு - செங்கீரைப் பருவ முதலாக வகுத்துச் சொல்லப்பட்ட பிள்ளைப் பருவங்களிற் செய்யும் சிறப்புக்கள் ; ஆளுடைய பிள்ளையார் புராணம் பார்க்க. சீர் - இவை சந்தி மிதிப்பித்தல் - அன்ன மூட்டுதல் முதலியவை என்பாரு முண்டு.

கிண்கிணி - சதங்கை ; ஒலிக் குறிப்புப் பெயர். இங்குக் கூறியது திருவடியிற் சாத்தும் அணி.

தளர் நடையின் பதம் - ஓராண்டு நிறைவு அணையும் பருவம்,
தார்வளர் - தார்போல என்றலுமாம். 20

3680. சுருளுமயிர் நுதற்சுட்டி துணைக்காதின் மணிக்குதம்பை
மருவுதிருக் கண்டநாண் மார்பினிலைம் படைகையிற்
பொருவில்வயி ரச்சரிகள் பொன்னரைஞாண் புனைசதங்கை
தெருவிலொளி விளங்கவளர் திருவிளையாட் டினிலமர்ந்தார். ௨௧

(இ - ள்) வெளிப்படை - சுருளுடைய மயிர் நிறைந்த நெற்றியிலே சுட்டியும், இரண்டு காதுகளிலும் குதம்பைக் காதணிகளும், திருக்கழுத்திற் பொருந்தும் கண்டசாமும், மார்பில் ஐம்படைத் தாலியும், கைகளில் ஒப்பற்ற வயிரத்தாலாகிய சரிகளும், (இடையில்) பொன்னரை ஞாணும், திருவடியிற் பூணுகின்ற சதங்கையும் ஆகிய இவற்றைப் பூண்டு தெருவிலே ஒளிவிளங்க வளரும் பிள்ளைத் திருவிளையாட்டிலே விரும்பியிருந்தனர் (சீராள தேவர்).

(வி - ரை) இத்திருப்பாட்டினாலே சீராளதேவரைப் பிள்ளைப் பருவத்தே அணி செய்த திருக்கோலம் கேசாதிபாதம் கூறப்பட்டது. திருவுரு அணிசெய் தரிசனம்.

சுருளுமயிர் நுதல் - மயிர் சுருண்டிருத்தலும், நெற்றியிற் சுருண்டு வீழ்தலும் உடல் அழகிலக்கணங்கள் என்பர்.

குதம்பை - காது வளர்ச்சிக் கிடும் காதணி என்பர் ; ஈண்டு (மணி - அழகு ;) அழகிய காதணி என்ற அளவில் பொருள் தந்து நின்றது ; மணி - இரத்தினமுமாம்.

திருக்கண்ட நாண் - திருக்கண்டத்தில் - நாண் என்க. நாண் - பொற்சரம்.

ஐம்படை - 150-வது பாட்டுப் பார்க்க. திருமாலின் சங்கு சக்கரம் வாள் தண்டு வில் என்ற ஐந்து படைகள் பொலியப் பொன் முதலியவற்றாற் செய்யப்படுவது ; இது காவல் செய்யும் என்பது மரபு.

சரி - கைவளை ; தோளில் அணிவதுமுண்டு.

சுட்டி முதலாகச் சதங்கை யீறாகக் கூறப்பட்ட இந்த அணிகலங்களை யெல்லாம் பூட்டப்பெற்று என்க.

அமர்தல் - விரும்பிச் செய்தல். 21

3681. வந்துவளர் மூவாண்டின் மயிர்வினைமங் கலஞ்செய்து
தந்தையா ரும்பயந்த தாயாருந் தனிச்சிறுவர்
சிந்தைமலர் சொற்றெளிவிற் செழுங்கலைகள் பயிலத்தம்
பந்தமற வந்தவரைப் பள்ளியினி லிருத்தினார். உஉ

(இ - ள்) வந்து...செய்து - முறைமையில் வந்து வளர்ச்சி பெறும் மூன்றாண்டிலே மயிர் நீக்கு மணவினை என்னும் மங்கலச் சடங்கினைச் செய்வித்து ; தந்தையாரும்...இருத்தினார் - தந்தையாரும் ஈன்றெடுத்த தாயாரும் தமது ஒப்பற்ற சிறிய தோன்றலாராகிய மகனாருக்கு மனம் மலர்தற்கேதுவாகிய சொற்களின் தெளிவினையுடைய செழுங்கலைகளைப் பயில்வதற்காகத், தமது பிறவிப்பந்தம் நீங்க வந்த அவரைப் பள்ளியினில் அமர்த்தினார்.

(வி - ரை) தந்தையாரும் - தாயாரும் - செய்து - வந்தவரைப் பயில இருத்தினார் என்று கூட்டுக.

மூவாண்டின்...செய்து - " மயிர் நீக்கும் மணவினை " (1285) என இது சவுளக் கல்யாணம் எனப்படும் சிறப்புடையது என்பார் மயிர்வினை மங்கலம் என்றார். இது மூன்றாண்டிற் செய்யப்பெறுவது ; செய்து - செய்வித்து.

சிந்தை...கலைகள் - சிந்தை மலர் - மனத்தை மலரச் செய்யும் ; மலர் - மலர்த்தும் எனப் பிறவினைப் பொருள் கொள்க. " புலன் கொளுவ மனமுகிழ்த்த சுருணீக்கி மலர்விக்கும் கலைபயில " (1285) என்றது காண்க. சொற்றெளிவு - கருவி : சிந்தை மலர்தல் - பயன் ; கலை - சாதனம்.

செழுங்கலைகள் - பலவேறு கலைஞானங்கள். தம் பந்தம் அற வந்தவர் - தம் பொருட்டானன்றித், தம்மை ஈன்ற இருவரது பந்தமும் அது காரணமாக வரும் பிறவியும் அறும்பொருட்டே அவதரித்தவர் என்பதாம் ; மகன் என்னும் உலகப் பற்றை அறுத்தற்கு நிலைக்களமாய் வந்த இவர் அதன்மூலமே ஈன்றோர் பிறவியறுக்க ஏதுவாயினமை சரித விளைவாம். "என்றும் பிரியாதே யிறைஞ்சி யிருக்கும்" நிலை (3746) பெறுதற் கேதுவாயினார் என்பது.

வந்துவிளை—பந்தமறப்பிறந்தவரை—பள்ளியி னில் அமர்த்தினார்—என்பனவும் பாடங்கள். 22

3682. அந்நாளிற் சண்பைநக ராண்டகையா ரெழுந்தருள
முன்னாக வெதிர்கொண்டு கொடுபுகுந்து முந்நூல்சேர்
பொன்மார்பிற் சிறுத்தொண்டர் புகலிகா வலனார்தந்
நன்னாமச் சேவடிகள் போற்றிசைத்து நலஞ்சிறந்தார். உங

(இ - ள்) அந்நாளில்...எழுந்தருள - அந்நாளில் சீகாழி ஆண்டகையா ராகிய ஆளுடைய பிள்ளையார் அங்கு எழுந்தருள ; முந்நூல் சேர்...சிறுத்தொண்டர் - முப்

புரி நூலணிந்த பொன்பூண்ட மார்பினையுடைய சிறுத்தொண்டர்; முன்னாக... புகுந்து-முன்னாகச் சென்று எதிர்கொண்டு அழைத்துக்கொண்டு வந்து நகரினுட்புக்கு தம் மனையில் எழுந்தருளுவித்து; புகலிகாவலனார்தம்...நலஞ் சிறந்தார் - சீகாழித் தலைவரது நல்ல பெருமையுடைய திருவடிகளைத் துதித்து நன்மை சிறக்கப் பெற்றார்.

(வி - ரை) அந்நாளில்...கோடுபுதந்து...போற்றிசைத்து - இவ்வரலாற்றினை ஆளுடைய பிள்ளையார் புராணத்தினுள் தகுதியும் சிறப்பும் பற்றி விரிவாக (2366—2369) உரைத்தருளியமையால் ஈண்டுச் சுருக்கிக் கூறினார்; ஆண்டுக் கண்டு கொள்க.

ஆண்டகையார் - பெரு வீரராகிய இந் நாயனாரைத் தொண்டாகக் கொண்டுடைய பேராற்றல் ஆண்டகைமை எனப்பட்டது.

முந்நூல்சேர் பொன்மார்பில் - என்றதனால் இவர் மரபுக்குப் பூணூல் அணியும் உரிமை உண்டு என்பது பெறப்படும்; முன் (3662) உரைத்தவை பார்க்க.

போற்றிசைத்து நலஞ் சிறந்தார் - தமது திருமனையில் எழுந்தருளுவித்து உபசரித்தனர். "போந்து மாமாத்திரர்தம்...திருமனையிற் புகுந்து...மாதவரவர் தாம் மகிழ்ந்தருள வமர்ந்தருளி" (2369) என்றது காண்க. நலம் சிறந்தலாவது உபசரித்த அந் நன்மையில் விளங்குதல். 23

3683. சண்பையர்தம் பெருமானுந் தாங்கரிய பெருங்காதற்
பண்புடைய சிறுத்தொண்ட ருடன்பயின்று மற்றவரை
மண்பரவுந் திருப்பதிகத் தினில்வைத்துச் சிறப்பித்து
நண்பருளி யெழுந்தருளத் தாமினிது நயப்புற்றார். உச

(இ - ள்) சண்பையர் தம் பெருமானும்...பயின்று - சீகாழியர்களது தலைவராகிய ஆளுடைய பிள்ளையாரும் தாங்குதற் கரிதாய் மேன்மேலும் ஓங்கிவளரும் பெரிய காதற் பண்பினையுடைய சிறுத்தொண்டருடன் பயின்று இனிதமர்ந்தருளி; மற்றவரை...சிறப்பித்து - அவரை உலகம் போற்றும் திருப்பதிகத்திலே பாராட்டி வைத்தருளிச் சிறப்புச் செய்து; நண்பருளி எழுந்தருள - தமது நண்பராகும் பேற்றினையும் அவருக்குத் தந்தருளி எழுந்தருள; தாம் இனிது நயப்புற்றார் - தாம் இன்பத்துடனே பெருவிருப்பமும் பொருந்த அமர்ந்தருளினார்.

(வி - ரை) தாங்கரிய பெருங்காதற் பண்பு - முன் 3671 - 3672 - 3673 பாட்டுக்களில் சிவன் அடியார்கள் பால் இவர் கொண்ட பெருங் காதலின் உறைப்பு உரைக்கப்பட்டது; சிவன் கழலில் அன்பு "பள்ளமடை யாயென்றும் பயின்றுவரும் பண்பும்" முன் (3663) உரைக்கப்பட்டது; பிள்ளையார் வருகை கேட்டு எதிர் கொண்டு வரவேற்று அழைத்து வந்த பண்பு முன் "பெருகியஞா னம்பெற்ற பிள்ளையா ரெழுந்தருளும் பெருமை கேட்டுத், திருமருவு செங்காட்டங் குடிநின்றுஞ் சிறுத்தொண்ட ரோடிச் சென்றங், குருகுமனங் களிசிறப்ப வெதிர்கொண்டு தம்பதியுட் கொண்டு புக்கார்" (2366) என்பதாதியாக உரைக்கப்பட்டதும் காண்க.

உடன் பயின்று - இஃது அணைந்தோர் தன்மை குறித்தது. "அன்பரொடு மரீஇ" (போதம். 12).

மண்பரவும் - மண் - மண்ணுலகத்தவர்; புண்ணியப் பேற்றினால் இப் புவனியில் வந்து பிறந்து சிவநெறி வந்தொழுகுவோர்களே இத்திருப்பதிகங்களைப் பாவி உய்யும் திறத்தவ ராவர் என்பது; ஏனை விண்ணவரும் பிறரும் அறிந்து பரவும்

ஆற்றலிலர் ; மண் - அதில் வாழும் நன்மக்களுக்கு வந்தது. ஆகுபெயர். பரவும் - போற்றும் ; போற்றியுய்யும்.

திருப்பதிகத்தினில் வைத்து-இது பெரும்பேறு. பிள்ளையாரது திருவாக்கினில் வரும் பேற்றினாலே தாவரங்களாகிய பனைகளும் பிறவி நீங்கி வீடு பெறுவன ; எலும்பும் பெண்ணாகுவது என்பனவாதி எண்ணிறந்த அருளிப்பாடுகளை இங்கு நினைவு கூர்க. "பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாகக், கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே" "சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய, போராளன்" என்பன வாதியாக வரும் திருப்பதிகங்கள் காண்க. இறைவர், இனி வயிரவராய் வெளிவந்து இவர்க்குச் செய்ய நின்ற பொருளும் அச்சரித நிகழ்ச்சியில் வெளிப்படக் காணும் சீராள தேவரது சிறப்பும் திருவருட் குறிப்பினால் இத்திருப்பதிகங்களுள் முற்குறிப்பாகப் பெறப்பட வைத் தருளிய திறமும் கண்டு கொள்க.

நண்பருளி - தமது நண்பர் என்னப்படும் பெருமையை அவர்க்கு அருளிச் செய்து - ஈந்து ; இத்திறத்தினை நம்பியாண்டார் நம்பிகள் ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியுள் வைத்து "விரும்பும் புதல்வனை மெய்யறிந் தாக்கிய வின்னமிர்தம், அரும்பும் புனற்சடை யாயுண் டருளென் றடிபணிந்த, இரும்பின் சுடர்க்களிற் றன் சிறுத் தொண்டனை யேத்துதிரேற், சுரும்பின் மலர்த்தமி ழாகரன் பாதத் தொடர் வெளிதே"—(72) என்று போற்றிய திறமும் காண்க. "உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும்" (குறள்). தமது திருவடிக்கடியாராய் ஒழுகிய சிறுத்தொண்டருக்கு "நண்பர்" என்ற பெருமை ஈந்தருளியது எந்தம் பரமசாரியாரது பெருங்கருணைத் திறம்.

இனிது நயப்புற்றார் - பிள்ளையாரது திறங்களை எப்போதும் எண்ணி விரும்பி யின்புற்று இருந்தனர். திருமருக னகரில் மீண்டும் சென்று பிள்ளையாரைப் பணிந் தழைத்ததுவும் (2384—2385), திருப்புகலூரில் மீண்டும் சென்று அவர் திருவடிகளைப் பணிந்து உடனுறைந்து "திருத் தொண்டினுண் மைத்திறந் தன்னையே தெளிய நாடி" (2421) யிருந்ததும், பிறவும் இங்கு நினைவு கூர்தற்பாலன. இவை முன் விரிக்கப்பட்டமையின் இவ்வாறு சுருங்கக் குறித்தருளினர். 24

### வயிரவர் வருகை

3684. இத்தன்மை நிகழுநா ளிவர்திருத்தொண் டிருங்கயிலை
அத்தர்திரு வடியிணைக்கீழ்ச் சென்றணைய வவருடைய
மெய்த்தன்மை யன்புநுகர்ந் தருளுதற்கு விடையவர்தாஞ்
சித்தநிகழ் வயிரவராய்த் திருமலைநின் றணைகின்றார், உரு

3685. மடல்கொண்ட மணியிதழி நெடுஞ்சடையை வனப்பெய்தக்
கடல்மண்டி முகந்தெழுந்த காளமே கச்சுருள்போற்
றொடர்பங்கி சுருண்டிருண்டு தூறிநெறித் தசைந்துசெறி
படர்துஞ்சின் கருங்குஞ்சி கோந்தளமா கப்பரப்பி, உசு

3686. அஞ்சனமஞ் சனஞ்செய்த தனையவணி கிளர்பம்பை
மஞ்சினிடை யிடையெழுந்த வானமீன் பரப்பென்ன
புஞ்சநிறை வண்டுதேன் சுரும்புபுடை பரந்தார்ப்பத்
துஞ்சினுனித் தனிப்பரப்புந் தும்பைநறு மலர்தோன்ற, உஎ

3687. அருகுதிரு முடிச்செருகு மந்தியிளம் பிறைதன்னைப்
பெருகுசிறு மதியாக்கிப் பெயர்த்துச்சாத் தியதென்ன
விரிசுடர்ச்செம் பவளவொளி வெயில்விரிக்கும் விளங்குசுடர்த்
திருநுதன்மேற் றிருநீற்றுத் தனிப்பொட்டுத் திகழ்ந்திலங்க, உஅ

3688. வெவ்வருக்கன் மண்டலமும் விளங்குமதி மண்டலமும்
அவ்வனற்செய் மண்டலமு முடனணைந்த தெனவழகை
வவ்வுதிருக் காதின்மணிக் குழைச்சங்கு வளைத்ததனுட்
செவ்வரத்த மலர்செறித்த திருத்தோடு புடைசிறக்க, உகூ

3689. களங்கொள்விட மறைத்தருளக் கடலமுதக் குமிழ்நிரைத்
துளங்கொளிவெண் டிரட்கோவைத் தூயவட மணிந்ததென
உளங்கொள்பவர் கரைந்துடனு முயிருமுரு கப்பெருக
விளங்குதிருக் கழுத்தினிடை வெண்பளிங்கின் வடந்திகழ, நூ0

3690. செம்பரிதி கடலளித்த செக்கரொளி யினையந்திப்
பம்புமிருள் செறிபொழுது படர்ந்தணைந்து சூழ்வதெனத்
தம்பழைய கரியுரிவை கொண்டுசமைத் ததுசாத்தும்
அம்பவளத் திருமேனிக் கஞ்சுகத்தி னணிவிளங்க, நூக

3691. மிக்கெழுமன் பர்களன்பு திருமேனி விளைந்ததென
அக்குமணி யாற்சன்ன வீரமுமா ரமும்வடமுங்
கைக்கணிகொள் வளைச்சரியு மரைக்கடிசூத் திரச்சரியுந்
தக்கதிருக் காற்சரியுஞ் சாத்தியவொண் சுடர்தயங்க, நூஉ

3692. "பொருவிறிருத் தொண்டர்க்குப் புவிமேல்வந் தருள்புரியும்
பெருகருளின் றிறங்கண்டு பிரானருளே பேணுவீர் !
வருமன்பின் வழிநிற்பீ !" ரெனமறைபூண் டறைவனபோற்
றிருவடிமேற் றிருச்சிலம்பு திசைமுழுதுஞ் செலவொலிப்ப, நூநூ

3693. அயன்கபா லந்தரித்த விடத்திருக்கை யாலணைத்த
வயங்கொளிமூ விலைச்சூல மணித்திருத்தோண் மிசைப்பொலியத்
தயங்குசுடர் வலத்திருக்கைத் தமருகத்தி னொலிதழைப்பப்
பயன்றவத்தாற் பெறும்புவியும் பாததா மரைசூட, நூச

3694. அருள்பொழியுந் திருமுகத்தி லணிமுறுவ னிலவெறிப்ப
மருள்பொழிமும் மலஞ்சிதைக்கும் வடிச்சூலம் வெயிலெறிப்ப
பொருள்பொழியும் பெருகன்பு தழைத்தோங்கிப் புவியேத்தத்
தெருள்பொழிவண் டமிழ்நாட்டுச் செங்காட்டங் குடிசேர்ந்தார். நூரு

3684. (இ - ள்) இத்தன்மை...அணைய - இத்தன்மையில் நிகழும் இவரது திருத்தொண்டு பெரிய கயிலை மலையில் எழுந்தருளிய இறைவரது திருவடியிணைகளின் கீழே சென்று அணைய ; விடையவர்தாம் - இடபத்தையுடைய அவ்விறைவர் தாமே ; அவருடைய...அருளுதற்கு - அவருடைய மெய்யாந்தன்மையினையுடைய அன்பினை நுகர்ந்து அருள் புரிவதன் பொருட்டு ; சித்தமகிழ்...அணைகின்றார் - மன

மகிழ்வுடைய வயிரவத் திருக்கோலத்துடனே திருமலையினின்றும் எழுந்தருளி அணைவாராகி, உரு

3685. (இ - ள்) மடல்கொண்ட...சடையை-இதழ்கள் பொருந்திய கொன்றை மலர்களைச் சூடிய நீண்ட சடையினையே; கடல் மண்டி...சுருள்போல் - கருங்கடலிற் கூடி நீரினை மொண்டு மேலெழுந்த கருமேகத்தினது சுருள்போல்; தொடர்பங்கி... கொந்தளமாக - தொடர்ந்து நீண்ட தலைமயிர் சுருண்டு இருண்டு காடடர்ந்து நெறிப்பும் அசைவும் உடையதாய்ச் செறிந்து படரும் வரிசையுடைய கருங்குஞ்சிக் கொத்துப்போல(ஆக்கி) ; வனப்பெய்த - அழகுபட ; பரப்பி - பரப்பி முடித்து, உசு

3686. (இ - ள்) அஞ்சனம்...பம்பை - மைக்குழம்பை முழுக்குச் செய்தது போல அழகுமிகும் கருமயிராகிய ; மஞ்சினிடை...பரப்பென்ன - மேகத்தினிடையிடையே எழுந்து தோன்றும் விண்மீன்களின் பரப்புப்போல ; புஞ்சநிறை... ஆர்ப்ப - திரட்சியாக வரிசையாய்ப் பலவகை வண்டின் கூட்டங்கள் பக்கங்களிற் சூழ்ந்து ஒலிக்க ; துஞ்சின் நுனி - நிலைபெறும் வரிசைகளின் விளிம்பிலே ; தனி... தோன்ற - தனித்தனி பரப்பிய மணமுடைய தும்பை மலர்கள் விளங்க, உஎ

3687. (இ - ள்) அருகு...என்னை - திருமுடியின் ஒருபக்கத்திற் செருகும் அந்திமாலையில் காணும் இளம்பிறையினையே ஒளிபெருகும் சிறிய முழுமதி போல ஆக்கி மீண்டும் (நெற்றியிலே) தரித்தது போல ; விரிசுடர்...திருநுதல்மேல் - விரியும் ஒளி பொருந்திய செம்பவளச் சோதியின் கதிர்களை விரித்து வீசும் விளக்கமுடைய சுடர்த்திருநெற்றியின் மேலே ; திருநீற்று...இலங்க - திருநீற்றின் ஒற்றைப் பொட்டு ஒளிவீசி விளங்க, உஅ

3688. (இ - ள்) வெவ்வருக்கன்...என - வெப்பமுடைய சூரிய மண்டலமும் விளக்கமுடைய சந்திர மண்டலமும் அந்த அக்கினி மண்டலமும் ஒருங்கு கூடியதுபோல ; அழகை...சிறக்க - அழகைத் தன்வயமாக்கும் திருச்செவியிலே அழகிய சங்கக் குழையினை வளைத்து அணிந்து, அதனுள்ளே செவ்வரத்தம் பூவைச் செறித்த திருத்தோடு இருபக்கங்களிலும் சிறந்து விளங்க ; உகூ

3689. (இ - ள்) களங்கொள் விடம்...அணிந்தெதன - திருக்கண்டத்தில் கொண்ட விடத்தினை மறைத்தருளும் பொருட்டுப் பாற்கடலில் எழுந்த அமுதத்தின் குமிழ்களின் வரிசையாகிய வாய்ந்த ஒளியினையுடைய வெள்ளிய திரட்சிகளின் தூயவடத்தினை அணிந்தாற்போல ; உளங்கொள்பவர்...உருக - மனத்தினுள்ளே சிந்திப்பவர்களுடைய உடலும் உயிரும் உருகும்படி ; பெருக...வடந்திகழ - மிக விளங்குகின்ற திருக்கழுத்திலே வெள்ளிய பளிங்குமாலை விளங்க. ௩0

3690. (இ - ள்) செம்பரிதி...ஒளியினை-சிவந்த சூரியன் கடலிற் குளிக்கும் போது தரும் செவ்வான ஒளியினை ; அந்தி...சூழ்வதெதன - அந்தி முதிர வரும் இருளடர்ந்த இராப்போது படர்ந்து வந்து சூழ்வது போல ; அம்பவளத்திருமேனி - அழகிய பவளம் போன்ற திருமேனியின் மேல் ; தம் பழைய...சாத்தும் - தமது பழைய யானைத்தோற் போர்வையினையே கொண்டு ஆக்கியதனையே சாத்தும் ; கஞ்சுகத்தின் அணிவிளங்க - சட்டையினது அழகு விளங்க, ௩௧

3691. (இ - ள்) மிக்கெழும்...விளைந்தெதன - அன்பர்களிடத்தே மேல் ஓங்கி எழுகின்ற அன்பானது தமது திருமேனியின்மேல் அங்கங்கும் உருவமைந்து விளைந்தது போல ; அக்குமணியால்...காற்சரியும் - எலும்பு மணிகளாலமைத்த வெற்றி

மாலையும், ஆரங்களும், கோவைகளும், கைக்கு அணிகின்ற அழகிய கங்கணங்களும், திருவரையில் அணியும் அரைஞாணும், திருக்கால்களில் அணியும் தக்க காலணிகளும்; சாத்திய ஒண்சுடர் தயங்க - அணிந்த ஒன்றிய சோதி விளங்க, ௩௨

3692. (இ - ள்) பொருவில்...கண்டு - ஒப்பற்ற திருத்தொண்டராகிய சிறுத்தொண்டருக்காக இவ்வுலகத்திலே வந்து அருள் புரியும் பெருகிய அருளின் தன்மையைக் கண்டு; பிரானருளே...அறைவனபோல் - இறைவரது திருவருளினையே விரும்பிப் போற்றுவீர்! வளரும் அன்பின் வழியே நிற்கக் கடவீர்! என்று வேதங்கள் பூண்டு சாற்றுவனபோல; திருவடிமேல்...ஒலிப்ப - திருவடியின்மேல் திருச்சிலம்பு எல்லாத் திசையும் செல்லும்படி ஒலி செய்ய, ௩௩

3693. (இ - ள்) அயன்...பொலிய - பிரம கபாலத்தை ஏந்திய இடது திருக்கையினாலே அணைத்த விளங்கும் ஒளியினையுடைய மூவிலைச் சூலமானது அழகிய திருத்தோளின் மேலே விளங்க; தயங்கு...தழைப்ப - மலிந்து வீசும் ஒளியினை உடைய வலத் திருக் கையிலே பிடித்த தமருகத்தின் ஒலி ஓங்க; பயன்...சூட - முன்னைத் தவத்தினாலே பயன் பெறும் நிலமும் பாத தாமரைகளைத் தாங்க, ௩௪

3694. (இ - ள்) அருள்...எறிப்ப - அருள் பொழிகின்ற திருமுகத்திலே அழகிய புன்முறுவலானது நிலவு போன்ற குளிர்ந்த ஒளி வீச; மருள்...வெயில் எறிப்ப - மயக்கம் பெருகச் செய்யும் மும்மலங்களின் வலியினையும் போக்கும் கூரிய சூலம் வெயில் ஒளி வீச; பொருள்... ஏத்த - உண்மைப் பொருளை விளக்கும் பெருகுகின்ற அன்பு மேன்மேலும் தழைத்து ஓங்கி இவ்வுலகம் ஏத்த; தெருள்... சேர்ந்தார் - அறிவு விளக்கம் செய்யும் வளப்பமுடைய தமிழ்நாட்டில் உள்ள திருச்செங்காட்டங் குடியினிற் சேர்ந்தருளினார். ௩௫

இப்பதினொரு திருப்பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விடையவர் - அணைகின்றாராய் (3684), பரப்பி (3685), மலர் தோன்ற (3686), திகழ்ந்திலங்க (3687), புடைசிறக்க (3688), வடந்திகழ (3689), விளங்க, (3690), தயங்க (3691), ஒலிப்ப (3692), பொலிய, தழைப்ப, சூட (3693), எறிப்ப, ஏத்த, சேர்ந்தார் (3694) என இவற்றைக் கூட்டி முடித்துக் கொள்க.

இவற்றாற் சிறுத்தொண்டரது அன்பினை நுகர்ந்து அவருக்கு அருள் செய்யும் பொருட்டாக இறைவர் திருக்கயிலையினின்றும் வயிரவ சங்கமத் திருவேடத்துடன் அதற்குரிய வேடம் பூண்டு திருச்செங்காட்டங்குடி சேர்ந்த பண்பு விரிக்கப்பட்டது; தலைமுதல் அடிவரை வருணனையாக அவரது திருவேடத் தியல்பும் பொலிவும் ஆசிரியர் கண்டு நாமும் வழிபட்டுய்யும் பொருட்டுக் காட்டி யருளுகின்றார்.

3684. (வி - ரை) **திருந்தொண்டு...அணைய** - என்றது திருவடிக் கேற்க முற்றி விளைய என்றதாம்; திருவடியின் வியாபக நிறைவுக்குள்ளாகச் செறிய.

**மெய்த்தன்மை அன்பு நுகர்ந்து அருளுதற்கு** - மெய்த் தன்மை - என்றும் எவ்விடத்தும் எதனாலும் மாறாத ஒருபடித்தாகிய சத்தாம் தன்மை; **அன்பு நுகர்ந்து** - அன்பினுக்குள்ளே தாம் விரும்பி எழுந்தருளியிருந்து; "அன்பே சிவமாவது", "அன்பே சிவமாய்" (திருமந்). **அருளுதல்** - அருள்புரிதல்;

**திருமலை** - திருக்கயிலைமலை; திருமலைச் சருக்கம் பார்க்க.

**சித்தநிகழ் வயிரவராய்** - சித்த நிகழ்தலாவது அருள் புரியத் திருவுள்ளங்கொள்ளுதல்; **வயிரவர்** - வயிரவம் என்னும் அகச் சமயத்தின் கொள்கை பூண்ட சங்கமர்;

மாவிரதம், காபாலம், வைரவம் முதலியவை காண்க. வயிரவ சங்கமர் என்னாது வயிரவர் என்றே கூறியது அடியவரை ஆண்டானாகவே கூறும் வழக்குப் பற்றியும், இங்கு உண்மை பற்றியும் வந்தது; சித்தநிகழ் - அடியவர் சித்தத்தே சிந்திக்க நிகழும் என்றலுமாம். 25

3685. (வி - ரை) சடையைக், காளமேகச் சுருள்போல், பங்கி - கருங் குஞ்சி - கோந்தளமாகப் பரப்பி எனக் கூட்டுக; இறைவர் தமது சிவந்த நீண்ட சடையினையே கருமேகச் சுருள் போல ஆக்கி, அதனையே கரிய நீண்ட செறிந்த தலை மயிராக வரிசை பெற்ற கொத்தாகப் பரப்பி முடித்து என்க. ஏகாரமும் ஆக்கச் சொல்லும் தொக்கன.

ஈண்டு, இது முதல் திருவடிக்காட்சி வருமளவும் கூறும் திருக்கோலங்கள் எல்லாம் இறைவர் தமது உண்மைத் திருக்கோலத்தாலேயே, அந்தந்த அங்கங்களில் பூணும் பொருள்களையே கொண்டு, எழுந்தருளினர் எனவும், ஆனால் அவற்றை உலகர் அறியா வகையில் வயிரவச் சங்கமத் திருவேடத்திற் கேற்றவாறு மாற்றி யமைத்துக் கொண்டு வந்தருளினர் எனவும் காரணங்காட்டும் அழகு கண்டு களிக்க.

இதழி - கொன்றை ; இதழி நெடுஞ்சடையை - கொன்றை சூடிய நீண்ட சிவந்த சடையினையே ; பிரிநிலை ஏகாரம் விரிக்க ; இவ்வாறே மேல் வருவனவற்றிலும் கொள்க.

கடல்...போல் - மண்டுதல் - உண்ணுதல் ; காளமேகம் - கரியமேகம் ; கருமையைச் சிவப்பாக்கி ; பங்கி...குஞ்சி. நீண்ட சடையினையே நீண்ட பங்கிக் கருங் குஞ்சியாக்கிப் பரப்பி என்க ; குஞ்சி - ஆண் மக்கள் தலைமயிர் ; பங்கி - (சுருள்) மயிர் ; சுருண்டு - இருண்டு - தூறி - நெறித்து - அசைந்து - செறி - சுருண்டிருத்தல் - கருத்தல் - தூறுபோலக் காடடர்ந்திருத்தல் ; கருமணலின் அலைகளைப் போலச் நெறித்தல், அசைவுடைத்தாதல், அடர்ந்திருத்தல் என்ற இவை பங்கியின் அழகிய இயல்பும் காட்சியுமாம்.

படர்துஞ்சின் - படர்ந்த வரிசைகளின் நிலையினையுடைய ; மேல் "துஞ்சினுனி" (3686) என்பதும் காண்க. கோந்தளம் - கொத்து. கேசாதிபாதம் என்பதற் கேற்பக் கேசத்தை முதலிற் கூறி எடுத்தருளினர்.

அடர்துஞ்சின் — என்பதும் பாடம். 26

3686. (வி - ரை) மஞ்சினிடையிடைஎழுந்த - வான மீன் பரப்பென்ன - பம்பை - துஞ்சின் நுனிப் பரப்பும் - தும்பைமலர் தோன்ற என்று கூட்டுக. தும்பை மலர் - வானமீன் போலத் தோன்ற என்பது மெய்யும் வினையும் பற்றி எழுந்த உவமம்.

பம்பை மஞ்சி னிடையிடை - பம்பை - சுருண்ட விரிந்த மயிர். முன் " காள மேகச் சுருள்போல் " (3685) என்றதனைத் தொடர்ந்து கொண்டவாறு ; பம்பை மேகமாக, அம்மேகத்தின் இடைவெளியில் தோன்றும் விண்மீன்கள்போல் தும்பை மலர்கள் விளங்கின. மஞ்சு - மேகம் ; இங்குக் கருமேகம் குறித்தது.

புஞ்சம் - திரட்சி ; வண்டு - தேன் - சுரும்பு - கருவண்டும் தேன்வண்டும் பொறிவண்டும் என வண்டுகளின் வகை ; வண்டுகள் கூட்டமாக மொய்க்கும் நிலை குறித்தபடி.

தும்பை நறுமலர் - தும்பை இறைவர்க் குகந்த மலர்களுள் ஒன்று ; நறிய — என்றதனால் புதுமையும் தேனுடைமையும் பெறப்படும். 27

3687. (வி - ரை) அருந - நெற்றியின் அருகு ; பிறை தன்னை மதியாக்கிச் சாத்திய தென்னத் - திருநீற்றுப் பொட்டு - இலங்க - பிறையினையே சிறிய முழுமதி யாக்கிச் சாத்தியது போல விளங்கிற்று வெள்ளிய திருநீற்றுத் தனிப் பொட்டு என்பது. பெருந சிறு - முரண் அணி.

பெருந சிறுமதி ஆக்கி - இளம்பிறையினையே நிறைமதியாக்கியதனால் சிறுமதி யாயிற்று என்பது குறிப்பு. சிறிய வடிவுடைய நிறைமதி. பெருந - வளரும்.

பெயர்த்து - நெற்றி அருகில் முடிவில் இருந்ததனை இடம் பெயர்த்து நெற்றி யிற் சாத்தியது போல : திரும்பவும்.

விரிசுடர்...நுதல் - ஒளி வீசும் செவ்விய நிறமுடைய திருநெற்றி ; வெயில் - ஒளி; பவளவொளி - திருமேனியின் செவ்வொளி; திருநீற்றுத் தனிப்பொட்டு - வயிரவ சமயிகள் திருநீற்றினை நெற்றி விரவ முழுமையும் பூசாது பெரிதாய் ஒற்றை நீற்றுப் பொட்டு மட்டும் வைப்பர் ; தனிப்பொட்டு - ஒப்பற்ற பொட்டுமாம் ; திருநீற்றுப் பொட்டின் விளக்கத்துக்கு மதியை உவமித்தது பற்றித் "தோற்று மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே, சாற்று மின்பமுந் தண்மையுந் தந்துபோய், ஆற்ற வண்டமெ லாம்பரந் தண்ணல்வெண், ணீற்றின் பேரொளி போன்றது நீணிலா" (308) ; "திருநீற்றுத் தொண்டர்குழா மிருதிறமுஞ் சேர்ந்த போதி, லிரண்டு நில வின்கடல்க ளொன்றாகி யணைந்தனபோல்" (1498) என்றனவும், பிறவும் காண்க. 28

3688. (வி - ரை) அவ் அருக்கன் மண்டலமும்...உடன் அணைந்ததென - அருக்கனும் மதியும் அனலும் உடன் அணைந்ததென என்னாது அவ்வவர்களின் மண்டலங்களும் உடன் அணைந்தது என்றார் ; அவை மூன்றும் கண்களாய் மேலே விளங்குகின்றன ; அக்குறிப்பினை முன்பாட்டில் மதி - விரிசுடர் - வெயில் - என்று கூறி யருளினாராதலின், அவ்வொளிகள் விளங்குதற் கிருப்பிடமாயுள்ள மண்ட லங்கள் கீழே மூலம் போலக் காதுகளில் அமைந்தனபோல என்று கவி நயம்படக் கூறியருளிய திறம் காணத்தக்கது ; மண்டலம் - தோற்றத்திற் கிடம் ; புவனம் (பு-தோன்றுதல் ;) என்பதும் குறிப்பு.

வெவ் அருக்கன் - விளங்குமதி - அவ் அனல் - வெம்மை - சூடு ; விளங்குதல் - முன்பாட்டில் விளக்கம் கூறியது குறிப்பு ; அவ்வனல் - முன்னர்க் கூறிய ; விரி... சுடர்த் திருநுதல் என்று விரித்ததனாற் குறிப்புப் பெற்ற அந்த என முன்னறி சுட்டு ; முன் பாட்டில் திருநீற்றுப் பொட்டின் தூய ஒளிக்கு உவமிக்கப்படும் பெருமை பெறுதல் குறிக்க விளங்கும் என்றார் என்றலுமாம். உடனணைந்ததென - உடன் அணையலாகாத இவை மூன்றும் உடனியைந்ததென என்று அபூத உவமைத் திறம் வெளிப்படக் கூறியவாறு.

அழகை வவ்வுதல் - உலகில் உள்ள அழகெல்லாந் தாமே கவர்ந்து கொள்ளு தல் ; காது - காதுகள்.

சங்கக் குழை - என்க. மணி - மணிபோன்ற அழகிய ; "சங்கக் குழையார் செவியா ! வழகா !" (தேவா). சங்கு மணிக் குழையை வளைத்து.

செவ்வரத்த மலர் செறித்த - குழையினுள் மலரைப் புகுத்திய ; செறித்தல் திணித்தல்.

காதும் - அதனுள் குழையும்-அதனுள் மலரும் ஆக விளங்குதல் அருக்கன் மண் டலம், மதிமண்டலம், அனல் மண்டலம் மூன்றும் முறையே பட ஒருங்கு தோன்று தல் போல உள்ளன என்பது ; மண்டலம் வளைவும் குறிப்பது. மணிக்குழை சங்கு

என்று வேறுபிரித்துக் கூறுவாருமுளர். வளைத்து - துளைத்து வளைவுபட ஆக்கி; புடை - இருபக்கங்களிலும். 29

3689. (வி - ரை) களம் கொள்விடம் - ஏற்றுக்கொண்டு கழுத்திலே வைத்தருளிய விடம்.

மறைத்தருள - தாமாந்தன்மை அறிய வாராத வாறு கழுத்தின் விடத்தினை மறைத்தல் வேண்டப்பட்டது என்பது ; திருநீலகண்டம் - சிவனுக்குரிய சிறப்பு.

விடம் மறைத்தருள - அமுதக் குமிழிநிரை-விடத்தின் தன்மை போக்க அமுதம் வைத்து என்ற நயமும் காண்க ; அமுதமே விடத்தினை மறைக்கவல்லது என்பது. அமுதம் வெண்மை நிறமாதலின் கரிய விடத்தினை மறைக்கும் என்றதுமாம். களம் - ஔரி என்ற குறிப்புமுடையது ; கடல் - பாற்கடல் ; நிரை - நிரையாகிய ; துளங்கு ஒளி - விண்மீன் போல விட்டிமைக்கும் ஒளி.

உளங்கொள்பவர் - மனத்தில் வைத்துத் தியானிப்பவர் ; கரைந்து - அன்பினால் நெக்குருகி.

பளிங்கின் வடம் - பெரும்பளிங்கு மணிகளாலாகிய கழுத்து வடம் கழுத்தில் உள்ள விடத்தினை மறைக்க அமுதக் குமிழிகளின் வரிசைக் கோவை போல விளங்க என்பது உவமை ; உருவம் பற்றி வந்த உவமை. தற்குறிப்பேற்றமும் காண்க. பெருக - பெருகும்படி ; பெரிதும். 30

3690. (வி - ரை) செக்கர் ஒளியினை - இருள் செறிபொழுது - சூழ்வது எனப் பவளத் திருமேனியிற் - கரியுரிவைக் கஞ்சுகம் - விளங்க என்பது உவமை. உருவுபற்றி வந்தது. " சினப்பரி யழல்மீது யோர்த்திடும் அஞ்சனப்புகை "(கந்தபு).

செக்கர் ஒளி - செவ்வான ஒளி ; செம்பரிதி கடல் அளித்த என்பது மாலையிற் கடலில் விழும்போது சூரியன் சிவந்து விளங்குதலும், அவன்கடலில் விழுதலாற் பரப்ப வருவது செவ்வான வொளியாதலும் குறித்தது.

இருள் செறி பொழுது - இருண்ட இரவுக் காலம் ; செவ்வானத்தை இருள் இரவு சூழ்ந்து மறைப்பது போலக் கரிய கஞ்சுகம் செம்மேனியை மறைக்க என்றார். பொழுது - இரவு ; காலக் கூறு ; பெயர் ; படர்தல் - வருதலும் விரிதலுமாம் ; சூழ்தல் - சுற்றி மறைத்தல்.

பழைய கரி உரிவை கொண்டு சமைத்தது - கஞ்சுகம் - பழைய கரிய யானைத் தோலினையே கரிய கஞ்சுகமாக ஆக்கினர் என்பது ; கொண்டு - சாதனமாகக் கொண்டு ; சமைத்தல் - உளதாக்குதல். " மாமணிக் கஞ்சுகம் " (கந்தபு).

கடல் துளித்த - என்பதும் பாடம். 31

3691. (வி - ரை) சன்ன வீரம் - ஆரம் - வடம் - கைச்சரி - கடி சூத்திரச் சரி - காற்சரி என்ற இவைகள் திருமேனியில் முறையே கழுத்து - மார்பு - கை - அரை - கால் என்ற இடங்களில் விளங்குதல் அன்பர்களின் மிக்குஎழும் அன்பே விளைந்து திருமேனியில் அங்கங்கும் அழகுபட வெளிப்பட்டன என்பது போல என்க.

அன்பு திருமேனி விளைதலாவது - அன்பே அவ்வாறு அணிகலன்களாக விளைந்து திருமேனியில் அவ்வவ் விடங்களில் விளங்குதல் ; வெள்ளிய அக்குமணிகளால் ஆக்கப்பட்டு விளங்குதலின் அன்புக்கு உவமித்தார்; அன்புக்குத் தூயவெண்மை நிறம் உவமை. மேலும் திருநீலகண்ட நாயனார், திருக்கழுத்தில் அழுந்திய அன்பு வைத்தமைபோல ஒவ்வோர் அடியார்கள் திருமேனியில் ஒவ்வோர் அங்கங்களில்

அழுந்திய அன்பு செலுத்தி அவ்வவற்றை அணி செய்வார்களாதலின் அன்பே - திருமேனி விளங்கதெனை என்றார் என்றலும் குறிப்பு.

சன்ன வீரம் - வெற்றிமாலை ; வீரசங்கிலியுமாம் ; சன்ன வீரம் - ஆரம் - வடம் இவை மார்பில் அணிவது; வடம்-கண்மணிகளாலாகிய கொத்துத் தாழ்வடம். ஆரம் - நீண்டு ஒற்றையாகத் தொங்கும் முத்து மாலை.

சரி - சரித்தல்-நிலைத்தல் என்ற பொருட் காரணத்தால் அவ்வவ் வணிகளுக்கு வந்தது.

கைச்சரி - கையில் சரிப்பது ; இயங்குவது ; கடி சூத்திரம் - அரைஞாண் ; கடிசூத்திர அரைச்சரி - என்க. கடி - அரை ; கைவளைச்சரி - கடகம் ; தொடி.

ஒண்சுடர் - ஒள்ளிய தூய வெண்மை நிறம்.

தயங்குதல் - விளங்குதல் ; மிகுதலுமாம். 32

3692. (வி - ரை) திருவடிமேல் திருச்சிலம்பு ஒலித்தல் " அருளின் திறங் கண்டு பேணுவீர் வழிநிற்பீர் " என!மறை அறைவனபோல - என உவமித்தார் ; ஒலித்தல் -வினைபற்றி எழுந்த உவமை.

திருச்சிலம்பு - வேதமே சிலம்பு ; நாதமே சிலம்பு என்பர் ; சிலம்புதல் - (ஒலித்தல்) காரணமாகப் போந்த பெயர். " மறைச்சிலம்பு புலம்ப நடஞ் செய். "

" பொருவில்...வழிநிற்பீர் !" என - இது மறைகள் அறையும் ஒலியின் பொருள்.

வந்தருள் புரியும் திறம் கண்டு - வந்து-திருக்கயிலையினின்றும் புவிமேல் வந்து ; கண்டு - நேரே கண்ணுற் கண்டும் சிந்தித்துணர்ந்தும்.

பேணுவீர் ! - பேணுவீர்களே !; வினைப் பெயர்; விளி ; கடவீர் ! - கடவீராக !

அறைவனபோல் சிலம்பு திசை முழுதும் சேலஒலிப்ப- "இறைஞ்சுங் காலமிது வென் றங்கவரை அழைத்தா லென்ன...அடித்தாமரைமேற் சிலம்பொலிப்ப " (3488).

திசை முழுதும் சேல - எவ்வுலகத்தாரும் அறிந்துய்ய.

மறை...அறைவன - மறைகளின் உபதேச உள்ளுறையு மிதுவே யாதலும் காண்க. " ஆரண நூபுரஞ் சிலம்பு மடிகள். " 33

3693. (வி - ரை) இத்திருப்பாட்டாற் றிருக்கைக ளிரண்டன் நிலை போற்றப்பட்டது.

அயன்...இடத்திருக்கை - முன்னர்ப் பிரம கபாலத்தைத் தாங்கிய இடது திருக்கை. கை அணைத்த - கையினால் அணைக்கப் பெற்ற ; பிறவினை.

அணைத்த சூலம் தோள்மிசைப் பொலிய - என்க. இடது திருக்கையால் அணைக்கப்பெற்ற சூலம் தோள்மேல் சாத்தி விளங்கப்பெற்றது.

வலத்திருக்கை...தழைப்ப - வலது திருக்கையில் ஏந்திய தமருகத்தின் ஒலி ஓங்கிப் பரவ ; தழைப்ப என்றார் " தோற்றம் துடியதனில் " (உண்மை விளக்கம்) என்றபடி துடியின் ஒலியே ஒடுங்கிய உலகம் மீளத் தோன்றித் தழைத்தற்குக் காரணமாயிருக்கும் குறிப்புப் பெறுதற்கு ; தமருகம் - உடுக்கை ; துடி ; "இருதலை யொருநா இயங்க " வரும் ஓர் வகை இயம் ; தயங்குசுடர் - விளங்கும் ஒளி ; இது வலத்திருக்கையின் விளக்கம்; தமருகத்துக்கும் ஆம். ''கடுத்தாடுங் கரதலத்திற் றமருகமும் '' (நம்பி.)

தவத்தாற் பயன்பெறும் புவியும் என்க. இறைவரது இத்திருக்கோலத்திற் பாதங்களைச் சூடி நிற்றற்கு நிலம் முன்னைத் தவம் செய்திருந்தமையால் அதன்பயனாக அப்

பேறு பெற்றது. பேறும் - பெறும் வகையினாலே ; மண் சுமந்த திருவிளையாடலில் "நிலமகள் தீண்டித் திளைப்பெய்த" என்று கூறும் கருத்தை இங்கு நினைவு கூர்க. 34

3694. (வி - ரை) முறுவல் நிலவு - புன்முறுவலாகிய நிலவொளி (சந்திரிகை) வீச ; முறுவல் - பல் வரிசையின் தோற்றம் சிறிது வெளிப்படும் நிலை.

மருள் பொழி மும்மலம் - பொழிதல் - மிகுதியாகத் தருதல் ; மழைபொழிதல் என்புழிப்போல்; மருள் - மயக்கம்; "பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும், மருள்" (குறள்) ; கன்மமலம் நியதியின் வழியாய் வருவதாயினும் அதன் இச்சை நீங்கிய நீர்வின்போது வீடுபேறு வரவுள்ளதாதலானும், "முன்னமே யான்மா வின்றன் மும்மலத் தொன்ற தாகிக், கன்மமு மூலங் காட்டிக் காமிய மலமாய் நிற்கும்" (சித்தி. 2 - 39) என்பவாதலானும் கன்மமும் சிதைக்கப்படுதல் வேண்டும். மாயா மலம் இரவிற் கைவிளக்குப்போல் விளக்கத்தின் பொருட்டு இறைவராற் றரப்படினும், "வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யு மன்றே" (சித்தி. 2 - 53) என வருதலின் அதுவும் சிதைக்கப்படுதல் வேண்டும் ; "ஆன்மா வின்றன் அறிவொடு தொழிலை யார்த்து நின்று...என்று மஞ்ஞானங் காட்டும் ஆணவம்" (சித்தி. 2 - 80) ஆதலின் அதனைச் சிதைத்தாலன்றி உயிர் வீடு பெறாது ; ஆதலின் மருள் பொழி மும்மலம் சிதைக்கும் என்றார் ; "சாருமல மூன்று மற" (803) என்றதும், ஆண்டும், பிறாண்டு முரைத்தவையும் காண்க.

மும்மலம் சிதைக்கும் வடிச்சூலம் - மும்மலங்களையும் சிதைத்தல் மூவிலைச் சூல மேந்திய கருத்து என்பதாம். சூலம் - சிவனது படை - பாசுபதம் - என்ப. சிவமந்திரங்களுள் அஸ்திர மந்திரம் பற்றி வகுக்கப்படும் நிலைகள் எல்லாம் கருதுக.

பொருள் பொழியும் பெருகு அன்பு - பொருள் — உண்மைப் பொருள் ; பொழிதல் - தருதல் ; உண்மைப் பொருளைப் பெறுதற்குக் காரணமாகி மேன் மேல் பெருகும் அன்பு ; அன்பே பொருளெனப்படும் தன்மையினை அடைதற்குக் காரணமாய் நிற்பது.

பொருள்...புவி ஏத்த - இச்சரித வினைவின் பயனாக உலகம் அன்பின் பயனைக் கண்டு ஏத்தி உண்மைப் பொருளை அடைய முயல்வதாம் என்றபடி ; "மக்களே மணந்த தாரம்" என்பவாதியாக வரும் பொருள்களைப் பற்றிக் கொண்டு கழிந்து பிறவியில் வீழும் மாக்கள் மருள்பொழி மும்மலம் சிதைக்கப்பெறுதலாற் பொருள் பொழியும் பெருகன்பு தழைத்தோங்கப் பெறுவர் என்று தொடர்புபெறக் கூறியதும் காண்க. இச்சரிதங் கண்ட அறியா மாக்கள் இதனால் உலகன்புக் கிடையூறாகும் என்று பழிப்பர் ; அஃதுண்மை யன்று ; இதனால் பொருள் பொழியும் பெருகு அன்பு தழைத்தோங்குதலே சிறந்த பயனும் என்பதாம். "உருநாட்டும் செயல்காமனொழிய" (366க்) என்று தொடக்கத்துக்கூறிய குறிப்பினையும் காண்க.

தெருள்பொழி வண்டமிழ் - அறிவு மிகக் கொடுக்கும் வள்ளன்மையுடைய தமிழ் என்று தமிழ்ச் சிறப்புக் கூறியவாறு ; தெருளாவது - சிவனடிமைத் திறம் பற்றிய அறிவு விளக்கம். "ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்" (970).

தமிழ் நாட்டுச் செங்காட்டங்குடி - "செந்தமி ழோர்கள் பரவி யேத்துஞ் சீர்கொள் செங்காட்டங்குடி" (தேவா. பிள். கட்டபாடை - திருமருகலும், செங்காட்டங்குடியும் - 9) என்ற கருத்துக் காண்க. "உத்தரா பதியுள்ளோம்" (3699) ; "வடதேசத்தோம்" (3702) என்பதனால் வடநாட்டினின்றும் வருவாராய்ப்

போந்த இறைவர் தென்றமிழ் நாட்டிற் சேர்ந்தார் என்ற குறிப்பும் காண்க. அன்பும் அதனாற் சிவத்தன்மையும் பெருக நிகழ்வது தமிழ் நாட்டின் சிறப்பாம் என்பது;(46).

இவற்றின் சுருக்கம் : வயிரவக் கோலங்கொண்டு போந்த திறமாவது : தமது சிவந்து நீண்ட சடையினையே மேகம்போல அடர்ந்த கரிய தலைமயிராக்கியது போலக் கருங்குஞ்சி பரப்பி முடித்தனர்; அப்பரப்பினுள் இடையிடை வைத்த தும்பை மலர்கள் அக்கருமேகத்தி னிடையிடை விளங்கும் விண்மீன் போன்றன ; முடியிற் செருகிய பிறையினையே சிறு முழுமதியாக்கிச் சாத்தியது போல நெற்றியில் தனித் திருநீற்றுப் பொட்டுத் திகழ்ந்தது ; சூரிய மண்டலம், சந்திர மண்டலம், தீ மண்டலம் என்ற மூன்றும் ஒருங்கே அணைந்தது போல இரு காதுகளும் சங்கக் குழையும் அவற்றுட் செறித்த செவ்வரத்த மலரும் தோன்றின ; விடமுடைய திருநீலகண்டத்தின் கொடுமையினை மறைக்க அமுதக் குமிழிகளைக் கோவை செய்து கழுத்தில் தரித்தது போல அதிற் பூண்ட வெண்பளிங்கின் வடம் விளங்கிற்று ; அத்திருமேனியிற் போர்த்த கரிய கஞ்சுகம் அத்திருமேனியின் அந்திச் செக்கர் ஒளியினை இருட் பொழுது சூழ்வது போன்றிருந்தது ; பழைய கரியுரிவைப் போர்வை போலத் தோன்றிற்று அக்கஞ்சுகம் ; சன்ன வீரம் - ஆரம் - வடம் - கைச்சரி - அரைச்சரி - காற்சரி இவைகள் அன்பர்களது மிக்கு எழும் அன்பு திருமேனியில் அவ்வவ்விடங் களில் விளைந்தது போல விளங்கின : திருக்காலிற் பூண்ட மறைச்சிலம்பு ஒலித்தல், "பெருமான் திருத்தொண்டர்க்குப் புவிமேல் வந்தருள் புரியும் பெருகு அருளின் திறங்கண்டு பேணி அன்பின்வழி நிற்பீராக" என உலகினர்க்கு எடுத்துச் சொல் வனபோன்றது ; இடது திருக்கையால் அணைத்த திரிசூலத்தினைத் தோளிற் சார்த்தி விளங்க, வலத்திருக் கையிலே கொண்ட தமருகத்தின் ஒலி தழைத்தது ; பாததாமரை நிலம் பொருந்தியது; திருமுகத்தில் முறுவல் நிலவெறித்தது; சூலம் வெயில் வீசிற்று ; இது கண்டு புவி எத்தத் தமிழ் நாட்டுச் செங்காட்டங்குடியிற் சேர்ந்தருளி னார் - என்பதாம்.

இத்திருக்கோலங் காட்டி உலகுய்ய இறைவர் எழுந்தருளி வருதலால், அதனைத் திருமுடி முதல் திருவடி வரை தாம் கண்டு வழிபட்டு நாமும் காணக் காட்டி உய்யச் செய்தல் ஆசிரியரது தெய்வ அருட் கவிநலம். "...இறைவன் கிளர்கின்ற காலமிக் காலம்...", "காலமுண் டாகவே காதல்செய் துய்மின்... பிரான்றன் னடியவர்க்கு, மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே" (5) என்ற திருவாசகங்கள் (பாண்டிப்பதிகம்) ஈண்டு நினைவு கூர்தற் பாலன.

இத்திருக்கோலம் இறைவர் தம் மிச்சையாற் பூண்டது. பசுக்களாகிய ஏனைத் தேவர்களும், மக்கள் முதலிய உயிர்களும் கொள்வன போன்று மாயையிற் றோன்றி வரும் உடல்போல்வதன்று.

"குறித்ததொன் றாக மாட்டாக் குறைவில தை லானும்
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும்
வெறுப்பொடு விருப்புத் தன்பான் மேவுத லிலாமை யானும்
நிறுத்திடு நினைந்த மேனி நின்மல னருளி னாலே" (சித்தி. 1. 65)

என்பதும், (சிவப்பிரகாசம் - 15ம்) பார்க்க. திருவிளையாடற் புராணத்துள் இறைவன் மேற்கொண்ட பற்பல திருமேனிகளையும் இவ்வாறே கண்டுகொள்க. இவ்வாறு வருவன அவ்வப் பெருந் தொண்டர்க் கருள்புரிய வெளிப்பட்டுத் தோன்றிவரினும், (அவர் காரணமாக) தவப்பயனாலே அவ்வவ் விடங்களில் அவ்வக்காலத்து நிகழும்

ஏனை மக்களும் காண வருவனவாம். " கண்டாரைச் சிறுத்தொண்டர் மனைவினவி" (3695) என மேல்வருவது காண்க; ஆயின் இவ்வாறு அவர் திருமேனி புறக் கண்ணாற் காண வரும்போது, அவர் இறைவர் தாமாந் தன்மை அறியவாராது அத் திருக்கோலம் மறைந்த பின்னரே அறிய நிற்பது இதன் தன்மையாதலும் கண்டு கொள்க. 35

3695. தண்டாத தொருவேட்கைப் பசியுடையார் தமைப்போலக்
கண்டாரைச் சிறுத்தொண்டர் மனைவினவிக் கடிதணைந்து
" தொண்டனார்க் கெந்நாளுஞ் சோறளிக்குந் திருத்தொண்டர்
வண்டார்பூந் தாரரிம் மனைக்குள்ளா ரோ ?"வென்ன, ௩௬

3696. "வந்தணைந்து வினவுவார் மாதவரே யா"மென்று
சந்தனமாந் தையலார் முன்வந்து தாள்வணங்கி
" அந்தமில்சீ ரடியாரைத் தேடியவர் புறத்தணைந்தார்;
எந்தமையா ளுடையவரே! யகத்துளெழுந் தருளு"மென, ௩௭

3697. மடவரலை முகநோக்கி "மாதரார் தாமிருந்த
இடவகையிற் றனிபுகுதோ" மென்றருள வதுகேட்டு
" விடவகல்வார் போவிருந்தா " ரெனவெருவி விரைந்துமனைக்
கடனுடைய திருவெண்காட் டம்மைகடைத் தலையெய்தி, ௩௮

3698. "அம்பலவ ரடியாரை யமுதுசெய்விப் பாரிற்றைக்
கெம்பெருமா னியாவரையுங் கண்டிலர்தே டிப்போனார் ;
வம்பெனநீ ரேழுந்தருளி வருந்திருவே டங்கண்டாற்
றம்பெரிய பேறென்றே மிகமகிழ்வ ; ரினித்தாழார், ௩௯

3699. "இப்பொழுதே வந்தணைவ ரெழுந்தருளி யிரு"மென்ன,
" ஒப்பில்மனை யறம்புரப்பீ !; ருத்தரா பதியுள்ளோஞ் ;
செப்பருஞ்சீர்ச் சிறுத்தொண்டர் தமைக்காணச் சேர்ந்தனம்யாம் ;
எப்பரிசு மவரொழிய விங்கிரோ" மென்றருளி, ௪0

3700. கண்ணுதலிற் காட்டாதார் "கணபதீச் சரத்தின்கண்
வண்ணமலர் ராத்தியின்கீ ழிருக்கின்றே ; மற்றவர்தா
நண்ணினா ரயிருந்த பரிசுரைப்பீ" ரென்றருளி
அண்ணலார் திருவாத்தி யணைந்தருளி யமர்ந்திருந்தார். ௪௧

3695. (இ - ள்) தண்டாதது...போல - தணியாததாகிய ஒரு பெரும் பசியினையுடையவர் போல; கண்டாரை...அணைந்து - கண்டார்களை நோக்கிச் சிறுத் தொண்டரது மனையைக் கேட்டறிந்து விரைவில் அங்கு வந்தணைந்து; " தொண்டா னார்க்கு உள்ளாரோ ?" என்ன - சிவபெருமானது தொண்டரானார்க்கு எந்நாளிலும் சோறு அளிக்கின்ற திருத்தொண்டராகிய, வண்டுகள் மொய்க்கும் பூமாலையினை அணிந்த சிறுத்தொண்டனார் இம்மனைக்கண் உள்ளாரோ ? என்று கேட்க, ௩௬

3696. (இ - ள்) வந்தணைந்து...வணங்கி - வந்து சேர்ந்து கேட்கின்றவர் மாதவராகிய அடியவரே யாவர் என்று உட்கொண்டு சந்தனத்தாதியார் என்ற அம்மையார் முன்னால் வந்து அவரது திருவடிகளை வணங்கி; அந்தமில்... அருளும் என - எல்லையில்லாச் சிறப்பினையுடைய அடியவர்களைத் தேடும் பொருட்டு அவர் புறத்தே சென்றனர்; எம்மையாளுடைய முதல்வரே? அகத்துள்ளே எழுந் தருளுவீராக என்று சொல்ல, ருஎ

3697. (இ - ள்) மடவரலை...என்றருள - அவ்வம்மையாரைப் பார்த்துப் "பெண்கள் தாம் தனியே இருந்த இடத்தில் நாம் தனியே புகுத மாட்டோம்" என்று அருளிச்செய்ய; அது கேட்டு...எய்தி - அதனைக்கேட்டு அவர் அவ்விடம் விட்டுச் சென்று விடுவார்போல இருந்தார் என அஞ்சி விரைந்து மனையின் கடமை முற்றும் உடையவராகிய திருவெண்காட்டு அம்மையார் உள்ளிருந்து மனையின் முன்கடை யில் வந்து, ருஅ

3698. (இ - ள்) அம்பலவர் அடியாரை...போனார் - திருவம்பலமுடைய இறைவரடியார்களைத் திருவமுது செய்விக்கும் நியமமுடைய அவர், அந்நியம முடித்தற்கு, எமது பெருமானே! இன்று அடியார் எவரையும் காணாமையால்தேடிச் சென்றார்; வம்பென...மகிழ்வர் - புதிதாக நீர் எழுந்தருளி வரும் இத்திருவேடத் தினைக் கண்டால் தமது பெரும் பேறென்றே மிகவும் மகிழ்ச்சி யடைவர்; இனித் தாழார் - இனித் தாமதிக்க மாட்டார், ருகூ

3699. (இ - ள்) இப்பொழுதே...என்ன - இப்போதே விரைவில் வந்து அணைகுவர்; அவ்வளவும் தேவரீர் இங்கு எழுந்தருளி யிருக்கவேண்டும் என்று கூற; ஒப்பில் மனை...என்றருளி - ஒப்பற்ற இல்லறத்தை வழுவாது காத்து நடத்து கின்றவர்களே! வடதேசத்தில் உள்ளோம்; சொல்லுதற்கரிய சிறப்பினையுடைய சிறுத்தொண்டரைக் காணும்பொருட்டு இங்கு வந்து சேர்ந்தோம் யாம்; எவ்வகை யாலும் அவர் இல்லாதபோது இங்கு இரோம் என்று அருளிச் செய்து, சுO

3700. (இ - ள்) கண்ணுதலிற் காட்டாதார் - நுதற்கண்ணை மறைத்து வந்த அவர்; கணபதீச்சரத்தின்கண்...என்றருளி - கணபதீச்சரத்திலே அழகிய மலர்களை உடைய திருவாத்தியின் கீழே சென்று அமர்கின்றோம்; அவர் வந்தால் நாம் அங்கிருக்கும் தன்மையினைச் சொல்வீராக என்றருளிச் செய்து; அண்ணலார்... இருந்தார் - இறைவனார் திருவாத்தி மரத்தினடியிற் சேர்ந்தருளி விரும்பி எழுந் தருளியிருந்தனர். சுக

இந்த ஆறுபாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

3695. (வி - ரை) தண்டாதது ஒரு வேட்கை - பெரும்பசி: தண்டாத - தணி யாத; ஒரு - ஒப்பற்ற; அளவற்ற.

போல - பசியில்லாராயினும் பசியுடையார் போல நடித்தனர் என்க. சோறிடுவர் மனை வினவும் தொழில் பற்றி வந்த உவமம்.

கண்டாரை - தம்மாற் காணப்பட்டார்களை; தம்மைக் கண்டுவினவும் பேறுபெற் றாரை என்றலுமாம்,

தொண்டானூர்க்கு...திருத்தொண்டர் - இவ்வாறு அழைத்துக் கூறுதல் அவரது தன்மையறிந்த நிலையும், சோறு வேட்ட தமது பசியினையும் புலப்படுத்தலாம்.

இம்மனைக் குள்ளாரோ? - இங்கு மனையில் இருக்கின்றாரோ? என்று வினவிய படி. மனைக்கு - மனையில்; நான்கனுருபு ஏழன்பொருட்டு; உருபு மயக்கம்.

சோறளிக்குஞ் சிறுத்தொண்டர்—என்பதும் பாடம். 36

3696. (வி - ரை) வந்து...என்று - இது அவர் வினவுதல் கேட்டுத் தாதியார் கொண்ட கருத்து; மாதவர் - அடியார்; தவம் - சிவனடிமைத் திறத்தின்நிலை; சிவ வழிபாடு; மாதினை ஒரு கூறுடைய சிவனேயாம் என்ற குறிப்புமாம்.

சந்தனமாம் தையலார் - சந்தனத்தார் என்னும் பெயருடைய தாதியார். "சந்தனத்தாரெனும் தாதியார் (3734); முன்வந்து - வெளியிலிருந்து உசாவி வந்தவர்களுக்கு விடை கூறி அறிவிப்பது முதலில் தாதியார் கடமை என்பது.

தாள் வணங்கி - அடியாரை வணங்கி விடை கூறும் மரபு.

அந்தமில் சீர் அடியாரைத் தேடி - அடியார் பெருமைகளை அக்குடும்பம் அறிந்து ஒழுகிய நிலை புலப்படக் கூறிய திறமும் மரபும் காண்க.

எந்தமை ஆளுடையவரோ - இஃது அடியார்களிடத்து அவர்கள் பத்தியுடன் ஒழுகும்நிலை காட்டியபடி; இங்கு வந்தவர் இறைவரோ என்பதும், அவர் இத்தாதியாரை யுள்ளிட்டு இக்குடும்ப முழுமையும் அன்று ஆட்கொள்ள வந்தவர் என்பதும் உட்குறிப்புப் படத் தாதியார் வாக்கில் அவரை அறியாமலே போந்தவாறும் கண்டுகொள்க.

அகத்துள் எழுந்தருளும் - எம் அகம் (மனம்) நீங்காதுறையும் என்ற குறிப்பும் காண்க.

மாதவரேயோ வென்று—என்பதும் பாடம். 37

3697. (வி - ரை) "மாதரார்...தனிபுகுதோம்" - இஃது சிறப்புடையதோர் உலகியல் நீதி: உலகர் பின்பற்றி ஒழுகத்தக்க பெருநீதியும் நாகரீகத்தன்மையுமாம்.

னிபுகுதோம் - நமது அருட்சத்தியாகிய தேவியுடனும் திருமகனுருடனும் பின்னர் வரவுள்ளோம் என்பது குறிப்பு.

விட அகல்வார் போலிருந்தார் என வெருவி - விட - அவ்விடத்தை விட்டு நீங்கிவிட; அகல்வார் - வேறிடம் சென்று விடுவார்; வெருவி - அன்று அடியாரைக் காணாது தேடியிருந்த நிலையில் தாமாகவே போந்தவரையும் நழுவவிட நேருமோ என்று அஞ்சி; விரைந்து - விரைவு - இல்லறம் வழுவாதியற்றுதலின் ஆர்வம்; அவர் அகன்று விடும் முன்பே வரும் விரைவுமாம்.

மனைக்கடனுடைய-இல்லறப் பாரம் முழுமையும் தாமே கடமையாகப்பூண்ட; திருக்குறள் பார்க்க. "மனையறத்தின் வேராகி" (3676).

கடைத்தலை எய்தி - முற்றத்தின் முன்வாயிலில்; மனைப்புறம் போகாது இயல்பினாலே மனையினுள் இருந்து ஏவலர் மூலம் மனையின் நிகழ்ச்சிகளைச் செலுத்துவது, உயர்ந்த வாழ்க்கைத் திறமுடைய மனைக்கிழத்தியாது நிலைமை; இங்கு முன் கூறியபடி வெருவுதலால் அதனை நீக்கத் தாமே வெளிப்போந்தனர் என இச்செயலால் அவ்வில்லறத்தினும், அடியார் பணியில் வழுவாவகை வைத்த உறைப்புப் புலப்படுதல் காண்க.

மடவரல் - பெண்மை நாற்குணங்களுள் மடமையுடையவள். 38

3698. (வி - ரை) இப்பாட்டு முழுதும், மேலும் வருவன, திருவெண்காட்டு நங்கையம்மையார் வயிரவ சங்கமரை நோக்கிக் கூறும் விண்ணப்பம்; அவரை அங்கு நின்றும் அகலாதிருக்கும் வகையாற் கூற வேண்டிய உயர்ந்த பொருளும், சிறந்த ஏற்ற சொல்லாற்றலும் பொருந்திய உயர்குடிப் பண்பாடு கண்டுகொள்க. இப் பாட்டினில் " வளவ நின்புதல்வன் " (116) என்ற பாட்டினிற் போலச் சிறந்த மந்திரித் தன்மையாகிய அறிவு நுட்பமும் புலப்படுதல் காண்க.

அமுது செய்விப்பார் - இற்றைக்குக் கண்டிலர் போனார் - தேவரீர் விரும்பி வந்த காரியமே அவர் தேடிப் போயின காரியம் என்றது அவரது விருப்பத்தைக் கவரச் செப்பியபடி ; இற்றைக்கு யாவரையுங் கண்டிலர் - இஃதோர் புதுமை என்றதனோடு உமது அருமைப்பாடு மிகுவதாம் என்றதும் குறிப்பு.

வம்பேன - வம்பு - புதுமை ; வம்பேன - உலகியலினில்லாத சழக்கு என்ற குறிப்பும் காண்க. " வம்ப மாரியைக் காரென "

பெரிய பேறு - பெறுதற்கரிய பெரும் பேறு.

தாழார் - பயிரவர் அகன்று விடாமைக்குரிய காரணங் காட்டியபடி ; இவ் வேளைக்குள் அறிந்திருப்பர் ஆதலின் தாழார் என்பது குறிப்பு. 39

3699. (வி - ரை) இப்பொழுதே வந்தணைவர் - " இனித் தாழார் " என முன்பாட்டிற் கூறியதனைத் தொடர்ந்து கூறியது அக்கருத்து.

ஒப்பில் மனையறம் புரப்பீர் - சரிதமேல் நிகழ்ச்சிக் குறிப்பு.

உத்தராபதி - வடதேயம். " வடதேசத்தோம் " (3702) ; " உத்தராபதி யார் " என்று இக்கோயிலில் இம்மூர்த்தி இன்றும் வழங்கப்படுதல் காண்க.

காண - " அன்பு நுகர்ந் தருளுதற்கு " (3684) ; உலகத்தார்க்கு வெளிப்படக் காட்டும் பொருட்டுத் தாம் காண என்ற குறிப்பும் காண்க. " கண்டு காட்டலின் " (போதம்) ; அறியச் செய்ய - காட்ட - என்னும் பொருட்டு.

எப்பரிசும் - நீவிர் கூறிய எக்காரணங் கொண்டும். 40

3700. (வி - ரை) கண்ணுதலிற் காட்டாதார் - நுதற் கண்ணை மறைத்துவந்த வயிரவ சங்கமக் கோலத்தர்.

இருக்கின்றேம் - இருப்போம் ; தங்குவோம் ; எதிர்காலம் நிகழ்காலமாய் வந்தது.

இருந்த - இருக்கும் ; எதிர்காலம் இறந்தகாலப் பொருளில் வந்தது.

திருவாத்தி - இம்மரம் இன்றும் இச்கோயிலிற் காணவுள்ளதாம். அதன்கீழ் உத்தராபதியார் சந்நிதியும் உண்டு. இஃது ஆத்தியின் ஒருவகை. காட்டாத்தி என்பர்.

இந்த ஆறு பாட்டுக்களாலும், முன் பாட்டுக்களாலும் சிவனருளும் தசகாரியங் களுள் சிவரூபம், சிவதரிசனம் என்ற காரியங்கள் நிகழ்ந்தமை குறிப்பு. 41

வேறு

3701. நீரார் சடையா ரடியாரை நேடி யெங்குங் காணாது
சீரார் தவத்துச் சிறுத்தொண்டர் மீண்டுஞ் செல்வ மனையெய்தி
ஆரா வின்ப மனைவியார்க் கியம்பி யழிவெய் திட,வவரும்
பாரா தரிக்குந் திருவேடத் தொருவர் வந்த படிபகர்ந்தார். ௪௨

(இ - ள்) நீரார்...எய்தி - கங்கையினைச் சூடிய சடையவரது அடியார்களைத் தேடி எங்கும் காணப்பெறாமையால் சிறந்த தவத்தினையுடைய சிறுத்தொண்டர் மீட்டும் தமது செல்வம் பொருந்திய திருமனையினிடத்தே வந்து சேர்ந்து ; ஆரா... அழிவெய்திட - அளவு பெறாத இன்ப மனைவியார்க்குச் சொல்லி வருந்த ; அவரும் ...பகர்ந்தார் - அவரும், உலகம் அன்பு கூரும் திருவேடம் பூண்ட ஒருவர் வந்த படியினை அவர்க்குச் சொல்லினர்.

(வி - ரை) நேடி - தேடி ; எங்கும் நேடியும் - என்று உம்மை விரிக்க.

காணாது - காணாமையால் ; காரணப் பொருளில் வந்த வினையெச்சம்.

சீரார் தவத்து - அற்றை நாள் அதுவரை அடியாரைக் காணாமையும் தவமே என்பது குறிப்பு. என்னை ? அடியவர் ஒருவரும் வாராது செய்தருளி இறைவர் தாமே வந்து அருள்புரிய எழுந்தருளப் பெற்றது இவரது பெருந்தவப் பயனும் என்பதாம்.

மீண்டும்...எய்தி-மீண்டும் என்றதனால் முன்னரும் இவ்வாறு போவதும் மீள்வது மாயினர் என்பது குறிப்பு. செல்வமனை - சிவனருட் செல்வம் நிறைந்த திருமனை ; அரனுக்கும் அடியார்க்குமாக உலகியற் செல்வங்களும் அவ்வியல்பிலே நிறைந்த ; மனமொழி மெய்களாகிய கரணங்களும் அருள்பற்றி நிறைந்த குறிப்புமாம்.

ஆரா இன்ப மனைவியார் - ஆர்தல் - நிறைதல் ; ஆரா - நிறைவுபடாத-அளக்கலாகாத; இன்பம் - இன்பத்துக்குக் காரணமாகி வயிரவச் சங்கமரை வரக் கண்டமையால் அளவில்லா மகிழ்ச்சி யடைந்திருந்த என்றுரைப்பாரு முண்டு.

அழிவெய்திட - அமுது செய்விக்க அற்றைக்கு அடியார் எவரையும் காணப் பெறாமையால் மனமழிந்து வருந்த.

பார் ஆதரிக்கும் திருவேடம் - உலகிற் கண்டார் எவரும் அன்பு கூரும் அழகிய திருவேடம் ; அத்திருவேடத்தின் அழகு முன்னர்க் கூறியவாற்றா னறிக. " உளங் கொள்பவர் கரைந்துடனு முயிருமுரு கப்பெருக " (3689) என்றும், " அருள்பொழியுந் திருமுகத்தி லணிமுறுவ னிலவெறிப்ப " " புவி ஏத்த " (3694) என்றும் வருவன காண்க. பாரிலுள்ளோரை ஆதரிக்கும் என்பதும் குறிப்பு.

திருவேடத்து ஒருவர் - திருவேடம் உலகர் காணத் தாங்கியவரே யன்றி, அவர் " ஒன்றே பதி " என மறைகள் பேசும் ஒருவராகிய சிவபெருமானே என்ற குறிப்பும் காண்க ; ஒருவரோ - தேற்றமும் பிரிநிலையும் படநின்ற ஏகாரம் தொக்கது. பலரின்றி ஓர் அடியவர் வந்தார் என்ற எண்ணுக் குறிப்புமாம்.

ஆரா அன்பின்—என்பதும் பாடம். 42

3702. "அடியே னுய்ந்தே! னெங்குற்றா ருரையா" ரென்ன, வவர்மொழிவார்
"வடிசேர் சூல கபாலத்தார் ; 'வடதே சத்தோ' மென்றார்; வண்
டுடிசேர் கரத்துப் பயிரவர்யாஞ் சொல்ல விங்கு மிராதேபோய்க்
கடிசேர் திருவாத் தியினிழற்கீ ழிருந்தார் கணப தீச்சரத்து; " ௪௩

3703. என்று மனைவி யாரியம்ப, வெழுந்த விருப்பால் விரைந்தெய்திச்
சென்று கண்டு திருப்பாதம் பணிந்து நின்றார் சிறுத்தொண்டர்;
நின்ற தொண்டர் தமைநோக்கி "நீரோ பெரிய சிறுத்தொண்டர் ?"
என்று திருவாய் மலர்ந்தருள,விறைவர் தம்மைத்தொழுதுரைப்பார்,

3704. "பூதி யணிசா தனத்தவர்முன் போற்றப் போதே னாயிடினும்
நாத னடியார் கருணையினா லருளிச் செய்வர் நானென்று;
கோதி லன்பர் தமையமுது செய்விப் பதற்குக் குலப்பதியிற்
காத லாலே தேடியுமுன் காணேன் றவத்தா லுமைக்கண்டேன்,"

3705. "அடியேன் மனையி லெழுந்தருளி யமுது செய்ய வேண்டு"மென,
நெடியோ னறியா வடியவர்தாம், "நிகழுந் தவத்தீ ருமைக்காணும்
படியால் வந்தோ; முத்தரா பதியோ; மெம்மைப் பரிந்தூட்ட
முடியா துமக்குச் செய்கையரி தொண்ணா" தென்று மொழிந்தருள;

3706. "எண்ணா தடியேன் மொழியேனி லமுது செய்யு மியல்பதனைக்
கண்ணார் வேட நிறைதவத்தீ! ரருளிச் செய்யுங் கடிதமைக்கத்,
தண்ணா ரிதழி முடியார்தம் மடியார் தலைப்பட் டாற்றேட
ஒண்ணா தனவு முளவாகு; மருமை யில்லை" யெனவுரைத்தார். ௬௭

3702. (இ-ள்) அடியேன்...என்ன - அடியேன் உய்தி பெற்றேன்; அவர் எங்கு இருக்கின்றார்! சொல்வாயாக! என்று கூற; அவர் மொழிவார் - அவ்வம்மையார் மொழிவாராகி; வடிசேர்..கணபதீச்சரத்து - வடித்த கூர்மையுடைய சூலத்தினையும் கபாலத்தினையும் ஏந்தியவர்; நாம் வடதேசத்திலுள்ளோம் என்றார்; அவர் வளமையுடைய துடியினை ஒரு கையினிற் பிடித்த வயிரவச் சங்கமர்; நாங்கள் மனையில் எழுந்தருளி யிருக்கும்படி சொல்லி வேண்டவும் இங்குத் தங்கி இருக்காமல் சென்று கணபதீச் சரத்தில் மணமுடைய திருவாத்தியின் நிழற்கீழ் இருந்தார். ௬௩

3703. (இ-ள்) என்று...கூற - என்றிவ்வாறு மனைவியார் சொல்ல (அது கேட்டு); எழுந்த...சிறுத்தொண்டர் - சிறுத்தொண்டர் மேன்மேல் எழுந்த விருப்பத்தினாலே விரைந்து சென்று சேர்ந்து அவரைக் கண்டு திருப்பாதங்களிற் பணிந்து நின்றார்; நின்ற...திருவாய் மலர்ந்தருள - (அவ்வாறு) நின்ற தொண்டரை நோக்கி "நீர்தாமோ பெரியவரரய்ச் சொல்லப்படுகின்ற சிறுத்தொண்டர் என்பவர்?", என்று திருவாய் மலர்ந்தருளி வினவியருள; இறைவர்...உரைப்பார் - (அவர்) இறைவரை வணங்கி உரைப்பாராகி, ௬௪

3704. (இ-ள்) பூதி...நான் என்று - திருநீற்றுத் தொண்டர்களின் முன் சென்று துதிக்கவும் நான் தகுதியில்லேனாலும் சிவனடியார்கள் தங்கள் கருணையினால் அப்பெயருடையவன் நான் என்று சொல்லுவார்கள்; கோதில்...காணேன்-குற்றத்தினை இல்லையாகச் செய்யும் அடியார்களை அமுது செய்விப்பதற்காக இப்பழமையாகிய பதியில் பெருவிருப்பத்தாலே எங்கும் தேடியும் இதன்முன் கண்டிலேன்; தவத்தால் உ(ம்)மைக் கண்டேன் - முன்னைத் தவத்தின் பயனாலே உம்மைக் கண்டேன்; ௬௫

3705. (இ-ள்) அடியேன்...என - அடியேனது மனையில் தேவரீர் எழுந்தருளி வந்து திருவமுது செய்தல் வேண்டும் என்று வேண்ட; நெடியோன்...மொழிந்தருள - நீண்ட மாலும் அறிய மாட்டாத அவ்வடியவர்தாம் விளங்கும் தவத்தினை உடையவரே! உம்மைக் காணும் பொருட்டாக வந்தோம்; வடநாட்டில் உள்ளோம்; எம்மை அன்புடன் அமுது ஊட்டுவதற்கு உமக்கு முடியாது;

அச்செய்கை செய்தல் அரிதாகும் ; ஆதலின் உம்மால் செய்யவொண்ணாது என்று மொழிந்தருள, ௬௬

3706. (இ - ள்) எண்ணாது...அடியேன் - அடியேன் தீர ஆலோசியாமற் சொல்லமாட்டேன் ; நீர்...கடிதமைக்க - கண்ணிறைந்த அழகினை உடைய நிறைந்த தவத்தினை யுடையவரே ! தேவரீர் திருவமுது செய்யும் இயல்பினை, விரைவில் அமைப்பதன் பொருட்டு, அருளிச் செய்வீராக ! ; தண்ணார்...என உரைத்தார் - குளிர்ந்த கொன்றை மாலையை முடியில் தரித்த இறைவரது அடியார்கள் கிடைக்கப் பெற்றால் தேடினும் கிடைக்காதனவும் கிடைக்க உள்ளனவாகும் ; எனக்கு அருமை யில்லை என்று சொன்னார். ௬௭

இந்த ஐந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

3703. (வி - ரை) அடியேன் உய்ந்தேன் - எனது நியமம் பிழையாது செய்யப் பெறுதலின் உய்தி பெற்றேன். இறந்தகாலம் விரைவு குறித்தது. சரிதவினை வின் முற்குறிப்புமாம்.

வடிகோள்...கணபதீச்சரத்து - இத்துணையும் நிகழ்ந்தவற்றை யெல்லாம் சுருக்கி வடித்து அம்மையார் தமது நாயகனார்க்குக் கூறியது. கவிநயமும் பொருளமைதியின் அழகும் கண்டு களிக்க.

வடிகோள் சூல கபாலத்தர் - "வயங்கொளிமூ விலைச்சூலம்...பொலிய" (3693) "மருள்மொழியும் மலஞ்சிதைக்கும் வடிச்சூலம் வெயிலெறிப்ப" (3694) என்று கூறியபடி, அது காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது. சூலமும் கபாலமும் வயிரவ சங்கமர் என்பதனை அறிவிக்கும் அடையாளங்கள். முன்னர்த் "திருவேடத்து ஒருவர்" (3701) என்றது அவரது சிவனடியார் வேடத்தைப் பொதுமையி லுணர்த்தியது.

துடிசேர் கரத்துப் பயிரவர் என்றது அவர் இதுவரை வந்த அடியார்களின் வேறாய், அகப்புறச் சமயத்து வைரவ சமயச் சார்புடைய சங்கமர் என்று முடித்துக் கூறி அறிவித்த நயம் கண்டுகொள்க. 43

3703. (வி - ரை) எழுந்த...நின்றார் - அடியாரைக் காணுதற் கிருந்த பேரார் வத்தினை, விரைந்து எய்திச் சென்று - கண்டு - பணிந்து - நின்றார் என்று கூறிய செறிவும் விரைவும் பற்றி விளக்கிய கவிநயம் காண்க. நின்றார் சிறுத்தொண்டர் என்று எழுவாயைப் பின் வைத்த நிலையும் வினை முடிபின் விரைவு குறித்தது.

நின்ற - அவ்வாறு பணிந்து நின்ற.

நீரோ பெரிய சிறுத்தொண்டர் ?-பெரிய - சிறு - முரண் தொடைச்சுவை படக் கூறியது நயம் ; பெருமை புகழாலும் அடிமைப் பண்பினாலுமாம் ; அவற்றுடனே சிறுத்தொண்டர் - என்ற அவர் பெயரால் அறிந்தமை புலப்படக் கூறியபடி ; "தொண்டானார்க் கென்நாளுஞ் சோறளிக்கும் திருத்தொண்டர்" (3698) என முன்னர் அறிவித்தமையும் காண்க.

திருவாய் மலர்ந்தருள - பெரியவர்கள் முன், தாம் முன்னே பேசாது, அவர்கள் வாய்மொழியை எதிர்பார்த்து வணங்கி நிற்றலும், வந்த நிலையைக் குறிப்பாலுணர்த்தலும், கேட்டவற்றிற்கு அவ்வளவில் விடைமொழிந்து நிற்றலும் மரபு ; இங்கு வயிரவர் வினவியபின்பே நாயனார் விடைமொழிந்து தமது கருத்தினை உணர்த்தும் நிலை கண்டுகொள்க. "கைதொழு தவருமுன் னிற்ப" (2556) ; 44

3704. (வி - ரை) பூதி அணி சாதனத்தவர்...போதேன் - பூதி அணி சாதனத்தவர் - திருநீறணிந்த சிவனடியார்கள் ; சாதனம் - சிவசாதனம் ; அணி - அணி

யும்; அழகிய என்றலுமாம். பூதியாகிய அணி- சாதனம் : சாதனம் - உருத்திராக்கம் என்று கொண்டு பூதியும் அணி-அக்கமணியும் என்று உம்மைத் தொகையாக உரைத்தலுமாம் ; " திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி" (தேவா); பூதி - ஐசுவரியம் ; விபூதி - திருநீறு ; இவையே அடிமைத் தன்மையைக் காட்டும் திருஅடையாளங்கள் எனக்கொண்டு அவ்வாறே தாம் வழிபட்டு வந்த நிலையினைக் குறித்தபடி.

முன் போற்றப் போதேன் - முன்னின்று துதிக்கவும் தகுதியில்லேன் ; போதுதல் - தகுதி பெறுதல்.

நாதன்...என்று கருணையினால் - தகுதி யில்லாதாரையும் தக்கவர்களாக ஆக்கும் கருணை நோக்கம் செய்து உய்விக்கும் அருள் காரணமாக.

கோதில் - கோது - குற்றம், தீமை ; தீமையை இல்லையாக்கும் ; தொல்பதி - இந்தப் பழம்பதி ; சிறந்த இப்பதி என்றலுமாம்.

காதலாலே தேடியும் - காதலாலே என்றது முயற்சியின் மிகுதி குறித்தற்கு.

தவத்தால் கண்டேன் - முன்புசெய் தவத்தி னீட்ட"த்தின் பயனாக ; உண்மை! உண்மை !! முற்றும் உண்மை !!! ; இவரது "அன்பு நுகர்ந் தருளுதற்குச் சித்தநிகழ் வயிரவராய்த் திருமலை நின்று " இறைவர் தாமே வருதற்கும், புவிவாழக் காண்பதற்கும் மிகப் பெருந்தவம் வேண்டும் ! இவரைப் போலத் தவப்பெருந் தொண்டு செய்தாரும் மிகப்பெரிய அருள் பெற்றாரும் அரிது ! அரிது ! என்க. 45

3705. (வி - ரை) அடியேன்...வேண்டும் - இது சிறுத்தொண்டர் செய்து கொண்ட விண்ணப்பம்.

நிகழும் தவத்தீர் - நிகழ்தல் - விளங்குதல்; காண - காணும் பொருட்டே ; பிரிநிலை ஏகாரம் தொக்கது. காணுதல் - விளக்கங் காணச் செய்தல். உலகுக்குக் காட்டக் காணுதல் என்க ; " தொண்டரை விளக்கங் காண...உய்யுமந் நெறிகாட்டு மாற்றால் " (369); " காட்டுவான் வந்தார் " (407); " வல்லரென் றறிவிக்கவே " (445) என்பன முதலியவை காண்க.

உத்தரா பதியோம் - வடநாட்டில் வாழ்விடம் உடையோம் : இம்மூர்த்தியார் இப்பெயராலே இப்பதியில் இன்றும் வழங்கி வழிபடப் பெறுகின்றார்.

எம்மைப் பரிந்தூட்ட உமக்கு முடியாது என்க. ஊட்டுதல் - அமுது உண்ணச் செய்தல் ; பரிவு - அன்பு ; உமக்கு - உம்மால்; உருபு மயக்கம். செய்கை உமக்கு அரிது - என்று பின்னரும் கூட்டி உரைக்க நின்றது.

பரிந்தூட்ட உமக்கு முடியாது ; செய்கை அரிது ; ஒண்ணாது - அரிது - உமக்கு மட்டிலன்றி இச்செய்கை வேறு எவர்க்கும் அரிது ; ஆதலின் எவர்க்கும் ஒண்ணாது என்று முடித்தவாறு ; மும்முறை கூறிய உறுதிப்பாடுமாம். 46

3706. (வி - ரை) எண்ணாது - தீர ஆலோசியாமல் ; அரசாங்க சேனைத் தலைவராயிருந்த நிலைக்குறிப்பும் காண்க ; " எண்ணித் துணிக கருமம் " (குறள்) என்பது அரசநீதியுமாம்.

இயல்பதனை அருளிச் செய்யும் என்று கூட்டுக. இயல்பு - அமுதுக்குரிய சாதனமும் அமைக்கும் பிற இயல்புகளுமாம்.

கடிதமைக்க - ஆர்வத்தின் அளவு குறித்தது.

தண்ணார்...இல்லை - தலைப்பட்டால் - தலைப்படுதல் - கிடைக்கப் பேறு பெறுதல் ; தேட ஒண்ணாதனவும் உளவாதும் - அஃது அடியார் பெருமையாலாவதொன்றன்றித் தற்போத முனைப்பாற் கூறுவதன்று என்றபடி.

ஒண்ணுதனவு முளவாதும் - "ஒண்ணுத" (3705) என்று அவர் கூறியதனைத் தொடர்ந்து கொண்டு விடை கூறியபடி ; தலைப்பட்டால் - அருமையில்லை என்று பின்னும் கூட்டுக. முடியாது-அரிது-ஒண்ணுது - என்று மும்முறை கூறிய உத்தரா பதியாரை மறுத்துக் கூறுதல் அடியார் பெருமைக்கும், தமது சிறுத்தொண்டராம் தன்மைக்கும் பொருந்தாதாதலின், அதற்கு விடை,அடியார் தலைப்படும் அருமையின் பாலும் அவர்தம் பெருமையின் பாலும் சார்த்திக் கூறி மறாது மறுத்து விண்ணப் பித்த மரபு நுட்பம் கண்டுகொள்க.

கண்ணுர் வேட நிறை தவத்தீர் - "பாராதரிக்கும் திருவேடத் தொருவர்" (3701); தவநிறை வேடத்தீர் என்க; இறைவரே தவவேடம் தாங்கி வந்தவர் என்ற குறிப்பும் போதருதல் காண்க.

ஒண்ணுதனவும் - நீர் கூறியபடி ஒண்ணுதன என்பதுண்மையாயினும் என உடன்பட்டு, மறுமொழி கூறியவாறு; ஒண்ணுதனவும் - உளவாதும் - அருமையில்லை- என்பன முடியாது - அரிது - ஒண்ணுது என்று அவர் கூறிய மூன்றிற்கும் முறையே விடையாவதும் கண்டுகொள்க. 47

3707. "அரிய தில்லை" யெனக்கேட்ட பொழுதி லழகு பொழிகின்ற
பெரிய பயிர வக்கோலப் பெருமா னருளிச் செய்வார்"யாம்,
பரியுந் தொண்டீர்! மூவிருது கழித்தாற் பசுவீழ்த் திடவுண்ப ;
துரிய நாளு மதற்கின்று ; ஊட்ட வரிதா முமக்" கென்றார். ௪அ

(இ - ள்) அரியதில்லை...பொழுதில் - அருமையில்லை என்று சிறுத்தொண்டர் சொல்லக் கேட்ட பொழுதிலே ; அழகு...அருளிச் செய்வார் - அழகினைச் சொரி கின்ற பெரிய வயிரவத் திருக்கோலங்கொண் டெழுந்தருளிய இறைவர் அருளிச் செய்வாராய் ; யாம்...என்றார் - பரிவுடைய தொண்டரே ! நாம் மூன்று இருதுக் காலம் கழித்தால் ஒருபோது பசுவினை வீழ்த்து அமுது இட உண்பது நியமம் : அவ்வாறு உண்பதற்குரிய நாளும் இன்றைய நாளே யாகும். ஆனல் உமக்கு அவ்வாறு எம்மை ஊட்டுதல் அரிதாகும் என்று அருளிச் செய்தார்.

(வி - ரை) அழகு பொழிகின்ற...பெருமான் - முன் "கண்ணுர் வேடம்" "பாராதரிக்கும் திருவேடம்" என்றவை காண்க.

அருளிச் செய்வார் - அருளிச் செய்வாராய் ; முற்றெச்சம் ; அருளிச் செய்வா ராய் - என்றார் என்று முடிக்க.

பரியும் தொண்டீர் - பரிவு - சிவனடியாரை அமுது செய்வித்தலின்கண் மிக்க அன்பு ; பரியும் - எம்மை ஊட்டுவித்தலின் மிகப்பரிவு பூண்ட என்ற குறிப்புமாம்.

மூவிருது - இருது - இரண்டுமாத எல்லையுடைய காலக் கூறு ; மூவிருது - ஆறு மாத எல்லை.

பசு வீழ்த்து இட உண்பது - பசுவினை வீழ்த்து அமுதாக்கி இட அதனையே நாம் உண்பது நியமம் என்க ; பசு - இங்குப் பயிரவ சமயத்தார் அமுது செய்யும் உணவுப் பொதுமை குறித்தது. "யாகப் பசு" என்பது போலக் கொள்க. ஆன் (பசு) என்பதன்று. வைரவம் என்பது அகப்புறச் சமயங்களாறனுள் ஒன்று. இது "பெரும்பாலும் வாம மதத்தோ டொத்துச், சிறுபான்மை ஆசாரங்களால் வேறு பட்டு, வைரவனே பரம்பொருள் எனக்கொண்டு வைரவ மதத்திற் சேர்தலே முத்தி என்பதாம்" (மாபாடியம்) ; இதனுள் ஒரு ஒருசார் மாமிச உணவும் உடன் படுவர் ; வாமிகளுள் ஒருசாரார் கள்ளுண்ணுதல் போல ; வயிரவர் கபாலத்தில் விட்டுணு வின் இரத்த பிச்சை ஏற்ற புராண வரலாறு இங்கு நினைவு கூர்தற்பாலது ; ஆன்

புலால் உணவு எவ்வகை அகச் சமயத்துக்கும் உடன்பாடன்று; இங்குப் பசு என்பது ஆன் என்றுரைப்பாரு முண்டு ; "அமுதாம் பசுத்தான் இன்னதென" "மேல், நரப் பசுவாம்" என்பனவும் பசு என்பதன் பொதுமைப் பொருளை விளக்குதல் காண்க. யாம் உண்பது என்று கூட்டுக ; நியமம் என்பது குறிப்பெச்சம்.

அதற்கு உரிய நாளும் இன்றே - என்க ; அதற்கு - அவ்வாறு மூவிருது கழித் துண்பதற்கு ; இன்றே - தேற்றேகாரம் விரிக்க ; ஆல் அசை.

ஊட்ட உமக்கு அரிதாம் - இதனை மீண்டும் சொன்னது தொண்டரது ஆசை யினையும் ஆர்வத்தினையும் உறுதிப்பாட்டினையும் மிகுவித்தற்கு. 48

3708. "சால நன்று! முந்நிரையு முடையேன் ; தாழ்விங் கெனக்கில்லை ;
ஆல முண்டா ரன்பருமக் கமுதாம் பசுத்தா னின்னதேன
ஏல வருளிச் செயப்பெற்றால் யான்போ யமுது கடிதமைத்துக்
காலந் தப்பா மேவருமே" னென்று மொழிந்து கைதொழுதார். சகூ

(இ - ள்) வெளிப்படை. (அதுகேட்ட சிறுத்தொண்டர்) "மிகவும் நன்று ; அடியேன் மூன்றுவகை நிரைகளையும் உடையேன் ; எனக்கு இங்குக் குறைவில்லை ; விடத்தினை உண்டருளிய சிவபெருமா னன்பர் உமக்கு அமுதாகின்ற அந்தப் பசுத் தான் இன்னதென்று பொருந்தும்படி அருளிச் செய்யப் பெற்றேனேல் அடியேன் சென்று விரைவில் அமுது அமைத்து உணவுக்குரிய காலம் தப்பாமே வருவேன்" என்று கைதொழுது உரைத்தனர்.

(வி - ரை) சால நன்று - பசு வீழ்த்திட உண்பது என்றாராதலின், தாம் பசு வின் நிரைகளாற் குறைவின்றி உடையாராதலின் மிக நன்று என்று மகிழ்ந்தார்.

முந்நிரை - நிரை ; பசுக்கூட்டம், ஆட்டுக் கூட்டம், எருமைக் கூட்டம் என்ற இவை முந்நிரை எனப்படும்.

இங்கு எனக்குத் தாழ்வில்லை - என்க. தாழ்வு குறைவு.

ஆலமுண்டார் அன்பர் உமக்கு அமுதாம் பசுத்தான் - ஆலால முண்ட பெருமா னடியாராதலின் நீர் பசுப்படுத்துப் பெறும் அமுது உண்பதில் குறைவில்லை என்ற தும் குறிப்பு. பசு - உணவுப்பொதுமை குறித்தது. அன்பர் - அன்பராகிய ;

இன்னது என - அந்தப் பிராணி வகையுள் எது என்று.

கடித்மைத்துக் காலம் தப்பாமே வருவேன் - அடியாரை அமுதூட்டும் ஆர்வ மும் பெருமுயற்சியும் குறித்தது.

முந்நிரையும் உடையேன் - இங்கு வடநாட்டு அடியார் மாமிசம் உண்பவர்கள் என்றும், கோமாம்சம் கேட்பதற்கென்றே வடநாட்டு அடியார் வேடம் பூண்டு இறைவர் வந்தனர் போலும் என்றும், பசுவூன் இதுவரை எந்த அடியாரும் கேட்ட தில்லை என்றும், இப்போது இது கேட்டபோது இது தகாதென்று மறுத்திருப்பின் அடியார் வேண்டிய தளித்து அமுதூட்டும் நியமம் தவறிவிடும் என்றும், ஆதலின் அதனை மறுது முந்நிரையும் உடையேன் என்றார் என்றும் இங்கு, விசேட ஆராய்ச்சி செய்வாருமுண்டு; இங்குப் பசு என்பது ஆன்-(கோ) என்ற பொருள்பட வந்ததன்று என்பது முன் உரைக்கப்பட்டது. நாயனார், தமது மாமாத்திரர் குலமரபின் றன்மை யால் புலாலுணவு விலக்கிய வரல்லர் என்பது, புலாலுணவைத் தாமே அமைக்கும் திறத்தானும், சந்தனத் தாதியார் தலையிறைச்சி யமைத்த திறத்தானும், இவை பற்றியே உத்திராபதியார் இவர்பால் பசுப்படுத்த (புலால்) அமுது வேண்டினர் என்ற நிலையாலும் கருத உள்ளன.

கடிதமைத்து - என்றதனாலும் இவரது மரபின் உணவு வழக்கம் புலப்படுமாறு காண்க. இங்கு, இறைவர் கண்டு, உலகுக்குக் காட்டி உய்யச் செய்யப் போந்த உண்மையாவது, பசு மாம்சப் புலால் உணவுபற்றிய தன்மையன்று ; உலக நிலையில் மக்கள்பாற் கொள்ளும் திணிந்த பற்றுச் சிவன் அடியார் பணியின் முன் நில்லா தொழியும் பேரன்பு மீதூர்ந்த நிலையேயாம் என்க.

காலம் தப்பாமே - காலம் - உணவு கொள்ளுதற்குரிய காலம்; "உரிய நாளும் அதற்கு இன்று" என்று உத்திராபதியார் உணவு கொள்ளும் காலம் குறித்தா ராதலின் அந்நியமம் தவறாமே என்க. 49

3709. பண்பு மிக்க சிறுத்தொண்டர் பரிவு கண்டு பயிரவரும்,
"நண்பு மிக்கீர்! நாமுண்ணப் படுக்கும் பசுவு நரப்பசுவாம்;
உண்ப தஞ்சு பிராயத்துள் ளுறுப்பின் மறுவின் றேலின்னம் ;
புண்செய் நோவில் வேலெறிந்தாற் போலும் புகல்வதோன்"றென்றார்.

(இ - ள்) பண்பு...கண்டு - அடிமைப் பண்பின் மிகுந்த சிறுத்தொண்டரது அன்பினைக் கண்டு; பயிரவரும் - பயிரவச் சங்கமாகி வந்த இறைவரும் ; நண்பு மிக்கீர் !...ஒன்று என்றார் - அடியவர்பால் அன்பு மிகுந்தவரே ! நாம் உண்பதற்குச் சேதிக்கப் படுகின்ற பசுவும் மானிடப் பசுவாகும் ; அஞ்சு வயதாயும் உறுப்பில் மறு இல்லையேல் நாம் உண்பது ; நோய் செய்யும் புண்ணிலே வேலினைப் பாய்ச்சி யதுபோல மேலும் சொல்லலாவது ஒன்று உண்டு என்றார்.

(வி - ரை) இது நீர் உண்ணும் பசு இன்னதென்று அருள்வீர் என்று விண்ணப் பித்த தொண்டருக்கு உத்தராபதியார் கூறும் விடை.

உண்ணப் படுக்கும் பசுவும் நரப்பசுவாம் - உண்ண - உண்ணும் பொருட்டு ; உண்பதற்காக ; படுத்தல் — சேதித்தல், கொல்லுதல் ; நரப்பசு - மனித வகை யுள்ளே பட்டது

அஞ்சு பிராயத்துள் உறுப்பில் மறு இன்றேல் உண்பது - அந்த நரப்பசுவின் இலக்கணம் கூறுகின்றார். அஞ்சு — ஐந்து என்பதன் மரூஉ ; பிராயம் - வயது ;

உறுப்பில் மறு - மறு - அங்கங்களிற் கேடு, குற்றம் முதலியவை; குறை இன்றேல் - உண்பதாம் - என்க ; வெளியில் காணும் மறு வடு முதலியவை உள்ளே உள் தசையினும் அவ்வவற்கு ஏற்ற குறைபாடுகளை உளதாக்குவன என்பது உடற் கூற்று நூலார் துணிபு ; இது புலாலுண்போர் பார்க்கும் உண்மைகளுள் ஒன்று ;

நோ(தல்) செய் புண்ணில் என்று விகுதி பிரித்து மாற்றிப் பொருள் கொள்க. முன்னமே நோதலைச் செய்யும் புண்ணினுள்; வேல் எறிதல் - வேலினாற் குத்துதல்.

புண் செய்...போலும் - இஃது உவமை ; புண்ணின் நோய் ஒன்றும், அதன் மேலும் அதனுள் வேலெறிதலால் உளதாம் நோய் மற்றொன்றும் ஆக மிகத் துன்பந் தரும் இருநிலைகள் ஒன்றன்மேல் ஒன்றாக மிகுதல் உவமை. ஈண்டு நரப்பசு - ஐந்து பிராயம் - மறுவிலா உறுப்பு என்றவை நோவு செய்யும் புண்ணாக உவமிக்கப்பட் டன, இனி, மேல்வரும் பாட்டில், ஒரு குடிக்கு நல்ல ஒரு மகனைத் தாய் பிடிக்கத் தந்தை தம்மில் உவந்து அரிந்து அமைத்தல் அப்புண்ணில் கூரிய வேலினை எறிவ தாக உவமிக்கப் படுதல் கண்டு கொள்க. "நின்சிறுவர் நால்வரினுங் கரிய செம் மல் ஒருவனைத்தந் திடுக" என, "அருந்தவத்தோன் (விசுவா மித்திரன்) இயம்பிய சொல் மருமத்தி னெறிவேல் பாய்ந்த, புண்ணிலாம் பெரும்புழையிற் கனலுழைந்தா

லென" என்று கம்பன் இவ்வரிய உவமையினை எடுத்துப் புதுப் பொன்னே போற் புதுக்கிப் போற்றி வைத்த திறம் இதன் அருமையினை விளக்குவதாம்.

பிராயத்தில்—என்பதும் பாடம். 50

3710. "யாது மரிய தில்லையினி யீண்ட வருளிச் செய்யு"மென,
நாதன் றானு "மொருகுடிக்கு நல்ல சிறுவ னொருமகனைத்
தாதை யரியத் தாய்பிடிக்கும் பொழுதிற் றம்மின் மனமுவந்தே
ஏத மின்றி யமைத்தகறி யாமிட் டுண்ப" தெனமொழிந்தார். ௫௧

(இ - ள்) (அது கேட்ட தொண்டனார்) யாதும்...என - யாதும் அடியேனுக்கு அரியதில்லை; இனி, விரைவாக அருளிச் செய்யும் என்று கூற; நாதன் தானும் - இறைவரும்; ஒரு குடிக்கு...என மொழிந்தார் - ஒரு குடிக்கு நல்ல சிறுவனாய் ஒரே மகனாயுள்ள அவனைத் தந்தை அரியவும் அப்போது தாய் பிடிக்கும் பொழுதில் இருவரும் தம்மில் மனமகிழ்ந்தே குற்றமின்றி அமைத்த கறியே நாம் இட்டு உண்பதாம் என்று மொழிந்தருளினர்.

(வி - ரை) இனி ஈண்ட அருளிச் செய்யும் - இனியும் தாமதமின்றி விரைவில் அருள் செய்யும் என்றது இதுவரை "ஒண்ணாது" (3705) என்றும், "ஊட்ட அரிதாம்" (3707) என்றும், "புகல்வதொன்று" (3709) என்றும் அங்கங்கும் உலகியலுக்கு மாறான கொடிய செய்தியாதலிற் றாழ்த்துத் தயங்கி உரைப்பார் போன்று ஒன்றொன்றாக மேன்மேல் ஏற்றிக்கூறி வருதலின், இனி அவ்வாறு ஒன்றும் அஞ்சாதே விரைந்து கூறுவீர் என்ற குறிப்பு; இறைவர் அவ்வாறு தயங்கிக் கூறியது உலகியல் நிலையில் இத்தகைய பெருஞ் செயலுக்கு ஒருவர் மனத் துணிவு கொள்ளப் படிப்படியாய்க் கொளுத்தும் முறையிற் கூறியபடி.

ஈண்ட - அணிமையாக - விரைவாக.

ஒரு குடிக்கு...இட்டு உண்பது - தாம் உண்ணும் இயல்பினை, வயதும் அங்கக் கூறும் பற்றி முன்பாட்டிற் கூறினார்; இங்கு மேல் உள்ள பேரியல்பினை முடித்துத் தொகுத்துக் கூறுகின்றார். குடி - குடும்பம். தம்மில் - தாதை, தாய், மகன் மூவருள்ளும்.

ஏதம் - துன்பம் - மனவருத்தம் முதலிய எவ்வகைக் கேடுகளும். 51

3711. அதுவு முனைவர் மொழிந்தருளக் கேட்ட தொண்ட "ரடியேனுக்
கிதுவு மரிதன் றெம்பெருமா னமுது செய்யப் பேறு"வென்று
கதுமென் விரைவி லவரிசையப் பெற்றுக் களிப்பாற் காதலொடு
மதுமென் கமல மலர்ப்பாதம் பணிந்து மனையில் வந்தணைந்தார். ௫௨

(இ - ள்) அதுவும்...தொண்டர் - அதனையும் முதல்வர் சொல்லியருளக் கேட்ட சிறுத்தொண்டர்; அடியேனுக்கு...என்று-எமது பெருமானாராகிய தேவரீர் திருஅமுது செய்யும் பேறுபெற்றால் அடியேனுக்கு இதுவும் அரிதன்று என்று கூறி; கதுமென்...பெற்று - கதும் என விரைவினோடும் அவரது விடைபெற்று; களிப்பால்...வந்தணைந்தார் - பெருமகிழ்ச்சியினாலே ஆசையோடும் அவரது தேன்பொருந்திய மெல்லிய தாமரை போன்ற பாதங்களைப் பணிந்து போந்து தமது திருமனையில் வந்து அணைந்தனர்.

(வி - ரை) அதுவும் - அத்தகைய பெருந் துன்பச் சொல்லினையும் ; முனைவர் - தலைவர்.

அமுது செய்யப் பேறில் இதுவும் அரிதன்று என்க. இதுவும் - செய்கையரிது - ஒண்ணுது - ஊட்ட அரிது என்று எடுத்துக்கூறிய இதுவும் என அண்மைச் சுட்டு ; இது - இறுதியாய் மிக அரிதெனக் குறித்து முடித்த இது என்க. கேட்ட அப்போதே நாயனார் தமது மகனாரை அமுதாக்க உறுதி கொண்டனராராதலின் அரிதன்று எனத் திண்ணமாகக் கூறினர் என்க. (3715) பார்க்க.

பேறில் அரிதன்று - பெறுதலே மிக அரிது ; அதனைப் பெறில் ஏனையவழி அரிதாம் இதுவும் அரிதன்றாய் எளிதில் கைவரும் என்றபடி.

கதுமேன் விரைவு-மிக்க விரைவு; ஒருபொருட் பன்மொழி; மிகுதி குறித்தது.

மதுமேன் கமலம் - புதிதின் மலர்ந்த தாமரை ; அழகு, செம்மை, மென்மை, இனிமை, நறுமை முதலிய எல்லாம் பொருந்தியதென்பது ; எல்லாம் தருவது என்ற குறிப்புமாம். சிவானந்தத் தேனை யளிக்கும் மலர் என்பது குறிப்பு.

எம்பெருமான் ! - அண்மைவிளி ; உண்மைக் குறிப்பும்பட நின்றது. 52

3712. அன்பு மிக்க பெருங்கற்பி னணங்கு திருவெண் காட்டம்மை
முன்பு வந்து சிறுத்தொண்டர் வரவு நோக்கி முன்னின்றே
இன்பம் பெருக மலர்ந்தமுகங் கண்டு பாத மிசையிறைஞ்சிப்
பின்பு கணவர் முகநோக்கிப் பெருகுந் தவத்தோர் செயல் வினவ,

3713. வள்ள லாரு மனையாரை நோக்கி " வந்த மாதவர்தாம்
உள்ள மகிழ வமுதுசெய்ய விசைந்தார்; குடிக்கோர் சிறுவனுமாய்க்
கொள்ளும் பிராய மைந்துளனு யுறுப்பிற் குறைபா டின்றித்தாய்
பிள்ளை பிடிக்க வுவந்துபிதா வரிந்து சமைக்கப் பெறி"னென்றார்.டுச

3712. (இ - ள்) வெளிப்படை. அன்பு மிகுந்த பெரிய கற்பினிற் சிறந்த தெய்வத்தன்மை வாய்ந்த திருவெண்காட் டம்மையார் மனையின் முன் வாயிலில் வந்து சிறுத்தொண்டரது வரவை எதிர்நோக்கி முன்னே நின்றே, இன்பம் பெருக மலர்ந்திருந்த அவரது திருமுக விளக்கத்தினைக் கண்டு, அவரது திருவடிகளில் வணங்கிப் பின்னர்த் தமது கணவராகிய அவரை முகம் நோக்கி மாதவரது செயலைப் பற்றி வினவுதலும் ; டுஈ

3713. (இ - ள்) வள்ளலாரும்...மனையாரை நோக்கி - வள்ளலாராகிய சிறுத்தொண்டரும் மனைவியார் திருவெண்காட் டம்மையாரைப்பார்த்து; வந்த... பெறின் என்றார் - வந்தெழுந்தருளிய மாதவர் தாம், ஒருகுடிக்கு ஒரு மகனாக ஐந்து வயதுள்ளவனாய், உறுப்புக்களிற் குறைவு எவையும் இல்லாதவனாகிய பிள்ளையைத் தாய்பிடிக்க மகிழ்வுடன்தந்தை அரிந்து அமுது சமைக்கப் பெற்றால் ; உள்ள மகிழும் படி திருவமுது செய்ய இசைந்தருளினர் என்றனர். டுச

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

3712. (வி - ரை) அன்பு...அம்மை - அன்பு - சிவனடியார் அடிமைத் திறத்தின் அன்பு ; கற்பு - கணவனார் வழிநின் றொழுகும் திறம் ; முன்னையது தம்மியல்பால் வருவதும், பின்னையது கணவர் சார்பு பற்றி வருவதுமாம் ; அணங்கு - தெய்வத்தன்மை குறித்தது,

முன்பு வந்து...முகநோக்கி - அடியாரை அமுதூட்டுதலின் அம்மையாருக் கிருந்த ஆர்வமும் உறைப்பும் குறித்தது ; முன்பு வந்து - முன் கடைவாயிலின் வந்து நின்று ; கணவனார் மனைக்குள் வந்தபின் வினவி அறிதற்குரிய காலத்தாழ்வும் நேராது அறியும் அவாவினால் முன்கடையில் நின்றார் என்க. " வந்தபின் மனைவி யாரும் வாய்தலி னின்று வாங்கி "(4581).

வரவு நோக்கி முன்னின்றே - காத்து ; " முன்நின்று " என்பதும் அக்கருத்து ; மலர்ந்த முகம் கண்டு-அவர் சொல்வதற்கு முன் முகக் குறியினால் அகக் குறிப்புணரும் ஆர்வம். " அகத்தி னழகு முகத்திற் றெரியும் " (பழமொழி) ; " அடுத்தது காட் டும் பளிங்குபோ னெஞ்சம், கடுத்தது காட்டும் முகம் " (குறள்). " முன்னம், முகம் போல முன்னுரைப்ப தில். "

முகம் கண்டு - என்றது தாமாகக் கருதலளவையாற் குறிப்பினா லறிதற்கும், முகநோக்கி (வினவ) என்றது தாம் அறிந்ததனை உறுதியாக்குதற்கு அவர் வாக்கினாற் கேட்பதன் பொருட்டு நோக்குதற்கும் வந்தன வாதலின் கூறியது கூறலன்மை யுணர்க.

தவத்தோர் - அடியவர் ; இங்கு வயிரவ மாதவக் கோலச் சங்கமர் திறம் குறித்தது.

அன்பின் மிக்க— என்பதும் பாடம்.　53

3713. (வி - ரை) வந்த...இசைந்தார் - என்று முன்னர்க் கூறி மேல்வரு வனவற்றைப் பின்வைத்தது அவரது இசைவினை முன்கூறி அம்மையாரது பேர் ஆர்வத்தினை அமைவுபடுத்தற் பொருட்டு ; சமைக்கப் பெறின் - இசைந்தார் - என்று கூட்டுக. இசைந்தார் - இசைவேன் என்றார்.

குடிக்கோர்...பெறின் - மாதவர் முன் (3709 - 3710) கூறியவற்றின் சார மாய்ச் சுருக்கி உரைத்த திறம் காண்க.

கோள்ளும் - நிரம்பும் ; இன்றி - இல்லாதவனாய் ; உள்ள பிள்ளை என்க ; பிள்ளை - பிள்ளையை, உவந்து - தாய் - பிதா என்ற இருபாலும் சார்வதனால் இடை யில் வைத்தார் ; " தம்மில் மனமுவந்தே " (3710).

பெறின் - என்றார் இவ்வளவும் பெறுதற்கருமை குறித்தற்கு ; " அகனமர்ந்து... முகனமர்ந் தின்சொல னாகப்பெறின் " (குறள்) என்புழிப்போல.　54

3714. அரிய கற்பின் மனைவியா ரவரை நோக்கி யுரைசெய்வார்
" பெரிய பயிர வத்தொண்ட ரமுது செய்யப் பெறுவதற்கிங்
குரிய வகையா லமுதமைப்போ மொருவ னாகி யொருகுடிக்கு[னும்;
வருமச் சிறுவன் றனைப்பெறுமா றெவ்வா?"றென்று வணங்குத

3715. மனைவி யார்தம் முகநோக்கி "மற்றித் திறத்து மைந்தர்தமை
நினைவு நிரம்ப நிதிகொடுத்தாற் றருவா ருளரே !; நேர்நின்று
தனையன் றன்னைத் தந்தைதா யரிவா ரில்லைத் ; தாழாதே
எனையிங் குய்ய நீபயந்தான் றன்னை யழைப்போம் யா"மென்றார். ருசு

3714. (இ - ள்) அரிய...உரை செய்வார் - அருமையாகிய பெருங் கற்பினை யுடைய மனைவியார் அவ்வாறுரைக்க அவரைப் பார்த்து உரை செய்வாராகி ; பெரிய...அமைப்போம் - பெருமையுடைய பயிரவத் தொண்டர் திருஅமுது செய் யும் பேறு பெறுவதற்காக உரிய வகையினாலே திருவமுது அமைப்போமாகிய நாம் ;

ஒருவனாகி...வணங்குதலும் - ஒரு குடிக்கு ஒரே மகனாகி வரும் அந்தச் சிறுவனை நாம் பெறுவது எவ்வாறு ? என்று சொல்லி வணங்குதலும், ருரு

3715. (இ - ள்) மனைவியார் தம் முகநோக்கி- (அது கேட்ட நாயனார்) மனைவியாரது முகத்தினை நோக்கி ; மற்றித் திறத்து...உளரே - மற்று இத்தன்மை வாய்ந்த மைந்தர்களை அவ்வவர் எண்ணம் நிரம்பும் அளவு நிதியம் கொடுத்தால் கொடுப்பாரும் உளராவர் ; நேர் நின்று...இல்லை (ஆனால்) நேரே எதிரில் நின்று தமது மைந்தனைத் தந்தையும் தாயரும் அரிவார்கள் (இவ்வுலகத்தில்) இல்லை; தாழாமே... யாம் என்றார் - (ஆகையினால்) இனியும் தாமதிக்காமல் இங்கு என்னை உய்யச் செய்தற்கு நீபெற்ற மகனைநாம் (இதன் பொருட்டு) அழைப்போம் என்றுகூறினார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

3714. (வி - ரை) இது மாதவர் கருத்தினை நாயனார் கூறக்கேட்ட மனைவியார் சொல்லியது. தாய்த்தன்மையின் தண்ணளி கூர்ந்தறிந்த அம்மையாராதலின் "ஒருவனாகி வரும் அச்சிறுவனைப் பெறுவதெவ்வாறு?" என்ற ஒன்றே தமது உள்ளத்தில் முன்வந்து நிற்கப்பெற்று வினவியபடி; அதன்மேல் அரிய வினை செய்யும் நிலையளவு அவர் மனம் மேற்சென்றிலது ; ஆனால், மனத்திண்மை பெற்றாராதலின், நாயனார் உள்ளம் அதன்மேலும் அவ் அரிய வினையின்பாற் சென்று அது பிறரொவர் பாலும் எவ்வாற்றானும் கிடைத்தற் கருமையினை எண்ணித் தாமே துணிந்தமை மேல்வரும் பாட்டிற் கூறப்படுதல் காண்க ; அடியாரை ஊட்டும் அன்பின் திறம் இவ்விருவர் பாலும் ஒன்றுபோல நிகழப்பெறினும் உலகியலிற் பெண்பாலாரின் அன்பின் திறமும் ஆண்பாலாரின் அவ்வன்பினுடன் திண்ணிய உறைப்பின் திறமும் ஈண்டு விளங்கக் கிடத்தல் கண்டு கொள்க.

அழுதமைப்போம் - அமைப்போமாகிய ; அமைக்க ஒருப்பட்டோமாகிய யாம் ; வினைப்பெயர். அமைப்போமாகிய யாம் பெறுவதெவ்வாறு? என்று கூட்டுக ; வினைமுற்றாகவே கொண்டு உரைத்தனர் முன் உரைகாரர்.

என்று வணங்குதலும் - அதுகேட்டு - என்றார் என வரும் பாட்டுடன் முடிக்க.

3715. (வி - ரை) மற்றித் திறத்து...உளரே - மற்று - உலகியலுக்கு மாறுபட்ட என்பதாம். ஏகாரம் - தேற்றம்

நினைவு நிரம்ப - தாம் எண்ணிய அளவும் நிரம்ப ; மனம் நிரம்ப எனினுமாம்.

உளரே - உளராவர் ; ஏகாரம் - இதனைச் செய்வாரும் உளராவர் என்று சிறப்பின்கண் வந்தது.

நேர் நின்று - நேரே முன்னர் நின்று ; மைந்தனைப் பிறர் அரிய நேரிடினும் அப்போது நேர் நிற்றலும் பெற்றோர்க்கரிது என்பதாம்.

அரிவார் இல்லை - இவ்வுலகில் இல்லை ; ஆதலின் என்பது குறிப்பெச்சம்.

உயிய - உய்யச் செய்ய - உய்விக்க என்ற பிறவினை விவ்விகுதி தொக்குத் தன் வினையாய் வந்தது.

எனை உய்ய - என்னை உய்விக்கும் பொருட்டு ; உய்யப்-பயந்தான் என்க. எனை என்று ஒருமையாற்கூறினார் தாம் உய்வதனால் நாயகநாயகி நிலைமையால் அம்மையாரும் உய்வதற் கேதுவாதல் பற்றி; நீ பயந்தான்-எனது உய்தி நீ பயந்ததனாலாயிற்று என்று அவரையும் உளப்படுத்தியவாறு மாயிற்று;"நான் இங்குய்ய நீபயந்தோனை.

அழைப்போம் - இக்காரியத்தில் பயிரவர்க்குத் திருவமுதாக்கப் பசுவாய்ப் பயன் படுவதற்காக என்பது குறிப்பெச்சம். அழைப்போம் யாம் - என்று தம்மோடு

அவரையும் உளப்படுத்திக் கூறியதனால் தம்மில் மனமுவந்தே (3710) என்றபடி காதல் இருவர் கருத்தும் ஒருமித்து இச்செயல் செய்ய வேண்டி நின்ற தன்மை குறிப்பிடப்பட்டது. மேல் " இசைந்து - நயந்து - கொண்டுவாரும் " என்று தமது உடன்பாட்டினை அறிவித்தவாறு காண்க. "அழைப்போம் யாம்" என்றது அதற்கு உனது உடன்பாட்டினை அறியவேண்டும் என்ற குறிப்புடன் கூறியதும் காண்க.

பயந்தான் - பெற்றெடுத்தவன் ; சீராளதேவர் ; உய்ய - " பிழைக்குநெறி தமக்குதவ " (876) என்ற கருத்தும் ஈண்டுக் கருதற்பாலது. 56

3716. என்று கணவர் கூறுதலு மதனுக் கிசைந்"தெம் பிரான்றொண்டர்
இன்று தாழா தமுதுசெய்யப் பெற்றிங் கவர்த மலர்ந்தமுகம்
நன்று காண்ப " தென நயந்து, " நம்மைக் காக்க வருமணியைச்
சென்று பள்ளி யினிற்கொண்டு வாரு" மென்றார் திருவனையார். ௫௭

(இ - ள்) என்று கணவர் கூறுதலும் - முன் கூறியவாறு தமது கணவனார் சொல்லுதலும் ; அதனுக்கு இசைந்து - அதற்குத் தாமும் உடன்பட்டு ; எம்பிரான்... காண்பது என நயந்து - எமது சிவபெருமானார் திருத்தொண்டர் இன்று கால தாமதமின்றி அமுது செய்யப் பெற்று இங்கு அவருடைய மகிழ்ச்சி மலர்ந்த திருமுகத்தை நன்று நாம் காண்பது செய்யத்தக்க கடமையாம் என்று விரும்பி ; திருவனையார் திருவைப் போன்றவராகிய திருவெண்காட்டு நங்கையார் ; நம்மை... கொண்டு வாரும் என்றார் - (கணவரை நோக்கி) நம்மைக் காக்க வரும் மணி போன்ற மகனைப் பள்ளியிற் சென்று கொண்டு வாருங்கள் என்றார்.

(வி - ரை) இசைந்து - தாமும் உடன் பட்டு ; தாய் தந்தைய ரிருவரும் மனம் ஒருப்பட்டு உவந்து இவ்வரிய வினை செய்தல் வேண்டுமென்றா ராதலின் தாம் உடன் பட்டார் என்க. " அழைப்போம் யாம் " என்று தமது இசைவினைக் கணவனார் எதிர்நோக்கிய குறிப்பும் கண்டாராதலினாலும் " இசைந்து " என்றார்.

மலர்ந்த முகம் நன்று காண்பது - உண்பவர் இனிதுண்டபின் அவரது இன் முகம் காணுமளவே விருந்தின் பயனு மென்பர் ; அவ்வாறே இங்கு அமுது செய்யப் பெற்ற அவரது மலர்ந்த முகங் காண்பதே தமது பேறாகக் கருதினார். காண்பதுவே நமது செயத்தக்க கடமை என்பது குறிப்பெச்சம் ; பிரிநிலையேகாரம் தொக்கது. இஃது அம்மையார் மனத்திற் கண்ட துணிபு.

நம்மை...கொண்டு வாரும் - மனத்துணிபினைத் தொடர்ந்த புறநிகழ்ச்சி.

மணி - மணிபோன்ற மகனார் ; " உலாத்தருமிந் நடைமணி" (கோவை-385).

நம்மைக் காக்கவரும் - " எனை யிங்குய்ய நீ பயந்தான் " என்ற கருத்தினைத் தொடர்ந்து மனைவியாரையும் உளப்படுத்திக் கூறியது.

காக்க - உய்ய என்றதுபோல அடியார்க் கமுதூட்டும் நியமந் தவறாதிருக்க உதவுதலால் அச்சிவ புண்ணியப் பேற்றுக்குத் துணையாய் வீடுபேறு தரும் சாதனமாதல் குறிப்பு ; சரித முற்குறிப்புமாம். நாயனார், கோயிலினின்று நேரே பள்ளிக்குச் சென்று தாமே சீராளரை அழைத்துவாராமல் மனைக்கு வந்து அம்மையை வினவியது அவரிசைவு பெறுதற் பொருட்டாம்.

பள்ளியினிற் சென்று - என்க. சென்று பள்ளியினின்றும் என்பதுமாம்.

திருஅனையார் - திரு - முத்தித் திருவுக்கு முதல்வியாகிய ஞானம்பிகை; இங்குத் தமது இசைவினால் அனைவருக்கும் வீடு தருவதற்கு மூலமாகும் சரித வினைவுக்குறிப்புமாம். திரு - இலக்குமி என்பாருமுண்டு. 57

3717\. காதன் மனையார் தாங்கூறக் கணவ னாருங் காதலனை
ஏத மகலப் பேற்றபே றெல்லா மெய்தி னார்போல
நாதர் தமக்கங் கமுதாக்க நறுமென் குதலை மொழிப்புதல்வன்
ஓத வணைந்த பள்ளியினி லுடன்கொண் டெய்தக் கடிதணைந்தார்.

(இ - ள்) காதல்...கூற - காதலுடைய மனைவியார் முன்கூறியவாறு கூற; கணவனாரும்...போல - கணவனாராகிய சிறுத்தொண்டனாரும் குற்றம் நீங்கப் பெற்ற எல்லாப் பேறும் அப்போதே பெற்றுவிட்டனர் போல (மகிழ்ந்து); நாதர்... கடிதணைந்தார் - நாதருக்கு அங்குத் திருஅமுதாக ஆக்குதற்கு நறிய மெல்லிய குதலை மொழி பயிலும் புதல்வர் கல்வி பயில அணைந்த பள்ளியினின்றும் உடன் கூடக் கொண்டு வருதற் பொருட்டு விரைந்து சென்றனர்.

(வி - ரை) காதல் மனையார் - கணவனாரும் - காதலனை - இல்லறத்தின் நிலையில் மிக்க காதல் கொண்ட ஒழுக்கமுடையோர்; மகன்மீதும் மிக்க காதலை உடையோர் என்றது இங்குக் கொண்ட துணிபின் நிகரற்ற அருமை குறித்தற்கு; காதலன் - காதல் - ஊன்றிய - அழுந்திய - காதலுக்குப் பற்றுக்கோடாகிய இருப்பிடமானவன். கணவர் - பங்குடையவர்; மனையார் - "மனையறத்தின் வேர்"; இப்பொருட்கள் எல்லாம் பொருந்த வைத்து இச்செய்கையின் ஏற்றம் அறிவித்தபடி.

ஏதம் அகல - அமுதூட்டும் நியமம் பிழைக்காது.

பேறு எல்லாம் - நியமமும் அதனால் வரும் பயனும் ஆகிய எல்லாம்.

எய்தினார் போல - ஈண்டு அம்மையாரது இசைவுபெறப் பெற்றதனாலே மற்று எல்லாம் பெறுதல் உறுதி என்பார் இறந்த காலத்தாற் கூறினார். அப்போதே அடைந்துவிட்டார் போல எண்ணி.

நறுமென் குதலை மொழிப் புதல்வன் - "திருவாய் நீரின், உண்ணனைந் தமுதமூறி யொழுகிய மழலைத் தீஞ்சொல்" (671); நறுமை - திருவாயின் பால்மாறு மணம்; மென்மை - மெல்லிய குரல். குதலை - மழலை மாறுத இன்மொழி; அவர்பால் இவரது காதல் மிகுதிகொள்ள நின்ற தன்மையும் இச்செயலி னருமையும் புலப்படக் கூறிய குறிப்பு.

பள்ளி - இது வடக்கில் நகர்ப்புறத்தில் அணிமையில் ½ நாழிகை யளவில் உள்ள கிராமத்தில் இருந்ததென்பது கர்ணபரம்பரை. அந்நினைவுக் குறிகுறியாக அங்குச் சீராளதேவருக்கு ஒரு சிறு ஆலயமும் வகுத்து, அதில் அவரது அரிய அழகிய குழந்தைத் திருவுருவம் தாபித்து வழிபடப் பெறுகின்றது.

கடிது - ஆர்வத்தின் மனவிரைவுக் கேற்றபடி உடல்வேகமும் ஒன்றித்து நிகழ. 58

3718\. பள்ளி யினிற்சென் றெய்துதலும் பாதச் சதங்கை மணியோலிப்பப்
பிள்ளை யோடி வந்தெதிரே தழுவ வெடுத்துப் பியலின்மேற்
கொள்ள வணைத்துக் கொண்டுமீண் டில்லம் புகுதக் குலமாதர்
வள்ள லார்தம் முன்சென்று மைந்தன் றன்னை யெதிர்வாங்கி, ௫௧

3719\. குஞ்சி திருத்தி முகந்துடைத்துக் கொட்டை யரைஞாண் டுகணீக்கி
மஞ்ச ளழிந்த வதற்கிரங்கி மையுங் கண்ணின் மருங்கொதுக்கிப்
பஞ்சி யஞ்சு மெல்லடியார் பரிந்து திருமஞ் சனமாட்டி
எஞ்ச லில்லாக் கோலஞ்செய் தெடுத்துக் கணவர் கைக்கொடுத்தார்.

3718. (இ - ள்) பள்ளியினில்...தழுவ-பள்ளியில் போய்ச் சேர்தலும் பாதத்தில் அணிந்த சதங்கை மணிகள் சத்திக்கப் பிள்ளை அவர் எதிரே ஓடிவந்து தழுவிக் கொள்ள ; எடுத்து...புகுத - அவரை எடுத்துத் தோளில் மேல்வைத்துப் பொருந்தும் படி அணைத்துக்கொண்டு மீண்டு வந்து தமது திருமனையினுள்ளே (நாயனார்) புகுதவும் ; குலமாதர்...வாங்கி - குலமாதாராகிய திருவெண்காட்டு நங்கையார் வள்ளலார் சிறுத்தொண்டரின் முன்பு சென்று அம்மைந்தன் றன்னை எதிரில்தாம் வாங்கிக் கொண்டு, ருகூ

3719. (இ - ள்) குஞ்சி...ஒதுக்கி - தலைமயிரினைத் திருத்தி, முகத்தைத் துடைத்து, கொட்டையிலும் அரைஞாணிலும் படிந்த துகளை நீக்கி ; அணிந்த கலவைச் சாந்தம் அழிந்ததற்கு வருந்தி, கண்ணில் அணிந்த மையினையும் கண்ணிற் படாமல் ஒழுங்காகப் பக்கத்தில் நிற்கும்படி ஒதுக்கி ; பஞ்சி...அடியார் - பஞ்சும் அஞ்சத்தக்க மென்மையுடைய அடியினையுடைய அம்மையார் ; பரிந்து...எடுத்து - அன்புடனே திருமஞ்சனம் ஆட்டுவித்துக் குறைதலில்லாத கோலத்தினைச் செய்து எடுத்து ; கணவர் கைக்கொடுத்தார் - கணவராகிய நாயனார் கையிலே கொடுத்தனர். சா௦

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

3718. (வி - ரை) பாத...தழுவ - ஓடிவந்து தழுவுதல் - இது, வேற்றிடங்களில் தாய் தந்தையர் வரக் கண்டபோது சிறுவர் செய்யும் செயல் ; தன்மையணி ; பாதச் சலங்கை மணி ஒலிப்ப - ஓடி வருவதலால் சலங்கை மணிகள் ஒலித்தன ; பாதம் - இங்குச் சரிதப் போக்கிலே ஆசிரியர் அத்திருப்பாதங்களைப் போற்றி வணங்கிக்கொள்ளும் உட்குறிப்பும் கண்டுகொள்க ; இது தெய்வக் கவிநயம் ; வேறு நிலைகளாற் கூறுத இதுபற்றிக் கூறியதுமிக்கருத்து ; இவ்வாறு இங்கு ஓடிவந்து தழுவியதுடன் முடிந்த இவ்வோட்டமே, பின்னர்த் திருவருளால் மீள உயிர்பெற்ற போது "பள்ளியினின் றோடி வருவான் போல்வந்த" (3741) ஓட்டமாகத் தொடர்ந்து வரும் தன்மையும் உட்குறிப்பினு லுணர்த்தியவாறும் கண்டுகொள்க.

பியல் - தோள் ; தோளின்மேல் வைத்து அணைத்துக்கொண்டு மீண்டது திருவமுதாக்குதற்குக் காலம் தாழ்த்தாது விரைந்துகொண்டு சேறும் பொருட்டாம் ; அன்றியும் அடியவரது திருஅமுதுக்குரிய பண்டமாதலின் அவ்வுடல் நடந்துவரச் செய்து வருந்தின் உடல் நைந்து தன்மை மாறுமாதலின் அதன் பொருட்டுமாம். "எந்தை பியன்மே விருந்து" (தே - பின்)

குலமாதர் - குலநலம் பெரிதும் படைத்த அம்மையார் ; குலம் - இல்வாழ்க்கைக்குரிய குணநலங்களும் குறித்தது.

வள்ளலார் - செயற்கரிய செய்து வரையாது கொடுக்கும் இத்தன்மை குறிக்க இங்கு இப்பெயராற் கூறினர்.

முன் சென்று எதிர் வாங்கி - முன் செல்லுதல் - அம்மையாரின் ஆர்வ மிகுதியும் மேலும் காலந்தாழ்த்தலைத் தவிர்க்கும் கருத்துமாம்- "முன் வந்து" (3712) என்றவிடத் துரைத்தவை பார்க்க.

எதிர் வாங்குதல் - அவர் தருதற்கு முன் தாமே வாங்குதல் குறித்ததும் அக்கருத்து.



3719. (வி - ரை) அடியார், திருத்துதல் முதலியவற்றைச் செய்து, எடுத்துக் கணவர் கையிற் கொடுத்தார் என்று கூட்டி முடிக்க.

**துஞ்சி திருத்துதல்** முதலியவை குழந்தைகளைத் தாய்மார் கண்டுழிப் பரிந்து செய்யும் செயல்கள் என்பர் ; இவை தன்மையணி நயம் ; அவ்வியல்பு பற்றி இவை செய்தார் திருவெண்காட்டு நங்கையார் என்பாருமுண்டு; அடியார்க் கமுதாக ஆக்கும் பண்டமாக அம்மைந்தாது திருவுடம்பு அப்போது கொள்ளப்பட்டமையால் அப்பண்டத்தினைக் கழுவிச் செப்பமாக்கும் வகையால் அவ்வெண்ணத்துடன் இவை செய்யப்பட்டன என்பதாம். "அச்சமெய்திக் கறியமுதா மென்னு மதனால் - உச்சிமோவார் - அணைத்தே - முத்தந்தாமுண்ணார்" என மேற்கூறுமாற்றால் இக்கருத்துப் புலப்படுமாறறிக.

துஞ்சி - ஆண் மக்களின் தலைமயிர் ; முகந்துடைத்தல் - வியர்வையினையும், படிந்த மாசுகளையும் போக்குதற்கு ; "குஞ்சியழகும்...மஞ்சள் அழகும்" (நாலடி) என்பதுங் காண்க. துஞ்சி - குடுமி. துஞ்சி - முகம் - உம் வேற்றுமைத் தொகை.

கோட்டை - அரைநாண் - கோட்டை - கடுக்கன் - காதணி: உம்மைத் தொகை; கொட்டையிலும் அரைஞாணிலும்.

மஞ்சள் — குங்குமப்பூக் கலந்த கலவைச் சாந்து ; அழிதல் - முன்னர்ப் பூசினபடியன்றி விளையாட்டு. வியர்வை முதலிய காரணத்தாற் கோலம் சிதைதல்.

மையும் - மஞ்சளோடு அவ்வாறே தீட்டிய கோலம் சிதைந்த மையினையும் என உம்மை இறந்தது தழுவியது ; மருங்கு ஒதுக்குதல்- கண்ணிற்படாமல் இமைகளின் பக்கமே இருக்கும்படி ஒதுக்குதல்.

பஞ்சி அஞ்சும் மெல் அடியார் - அம்மையார் ; இவ் அடை மொழிகள் அவாது திருவடியின் மெல்லிய தன்மை குறித்தன ; இத்தகைய மென்மை தனக்கில்லை என்று இலவம்பஞ்சும் அஞ்சி ஒதுங்கக் கூடியபடி உள்ள மெல்லிய அடி என்க ; அஞ்சுதல்- உடைந்து வெட்குதல் ; தற்குறிப்பேற்றம். பஞ்சியிற் படினும் வருந்தும் அடி என்றலுமாம். "பஞ்சிதனின் மெல்லடி பதைப்ப" (கந்தபு - தெய்வ - மண - 231)

**பரிந்து** - என்பதனை எல்லாவினைகளுடனும் கூட்டுக.

எஞ்சலில்லாக் கோலம் - எவ்வாற்றாலும் ஒரு குறையும் இல்லாதவாறு செய்யும் அலங்காரம் ; இவ்வாறு குறைபாடில்லாக் கோலஞ் செய்ததனை இங்கு இவ்வளவும் விரித்துக் கூறியது, இக்கோலத்தோடும் தாமில் வனப்பில் தனிப் புதல்வர் உயிர் பெற்று மீள வருதலும், இத்திருக்கோலத்துடனே என்றும் பிரியாதே இறைஞ்சி, இறைவர் - மலைமகளார் - சரவணத்துத் தனயர் - இவர்களுடனே திருக்கயிலையில் வீற்றிருக்கப் பெறுவாராதலும் குறித்தற்கு.

**எடுத்துக் கணவர் கைக்கொடுத்தார்** - பள்ளியினிற் சென்று கணவனார் எடுத்துக் கொடுவந்த பிள்ளையை அம்மையார் தாமே அவரிடமிருந்து எதிர் வாங்கினார் ; கோலம் செய்தார் - மீள அவர் கையிற் கொடுத்தார் என்றது அம்மைந்த னுடலினைக் கழுவித் திருவமுதாக்குதற்குத் தக்கபடி செய்யவேண்டிய நிலை மனைவியாராகிய தமது கடமை என்றதனாலும், அமுதுக்குத் தக்கதாக ஆக்கவேண்டுமென்ற தமது அன்பினாலும் ஆம் என்றதாம். அன்றியும் இக்கோலங்கள் செய்து திருத்துதல் மெய்த்தாயர் தொழிலாதலும் காண்க. இவ்வாறு கோலஞ்செய்து எடுத்துக் கணவர் கைக்கோடுத்தது அம்மையாரது உலகியல் கடந்த சிவனடிமைத் திறம் பற்றிய போன்பின் நிலை குறித்தது. இனிப், பின்னர்த், தாம் அழைக்கத் தம் மகனை மீள உயிர் பெற்று ஓடிவந்தபோதும் அம்மையார் "எடுத்துத் தழுவித் தம் காமுன் அணைத்துக் கணவனார் கையிற் கொடுப்ப"க் காண்கின்றோம் ; அந்நிலை வேறு ; அது தமது புதல்வன் என்ற தன்மையாற் மேற்கொண்ட உலகியல் அன்புநிலை ; இங்குக் கணவர்

கைக்கொடுத்தது ஆண்மக்கள் செய்யும் மேல்வினை செய்தற்கு ; அங்குக் கணவர் கையில் கொடுத்தது வைரவர் “ நாமிங் குண்ப தவன்வந்தால் ” என்றாராதலின் அவன் வந்தமையை அவர் அடியார்க்குக் காட்டி அவரை உண்ணச் செய்தற்கு ; முன்னர் அம்மைந்தன் உடல் அடியவரது திருவமுதுக்குரிய கறிப்பண்டம் ; பின்னர் அவ்வுடல், அவர் காணக்காட்டும் தம் புதல்வன் ; என்றிவ்வாறு இவற்றின் வெவ்வேறாயின தன்மைகளைக் கண்டு கொள்க. 60

3720. அச்ச மெய்திக் கறியமுதா மென்னு மதனா லரும்புதல்வன்
உச்சி மோவார் ; மார்பின்கண் ணணைத்தே முத்தந் தாமுண்ணார் ;
பொச்ச மில்லாத் திருத்தொண்டர் புனிதர் தமக்குக் கறியமைக்க
மெச்சு மனத்தா லடுக்களையின் மேவார் ; வேறு கொண்டணைவார்,

3721. ஒன்று மனத்தா ரிருவர்களு “ முலக ரறியா ” ரெனமறைவிற்
சென்று புக்குப் பிள்ளைதனைப் பெற்ற தாயார் செழுங்கலங்கள்
நன்று கழுவிக் கொடுசெல்ல நல்ல மகனை யெடுத்துலகை
வென்ற தாதை யார்தலையைப் பிடிக்க விரைந்து மெய்த்தாயர், ௬௨

3722. இனிய மழலைக் கிண்கிணிக்கா லிரண்டு மடியின் புடையிடுக்கிக்
கனிவாய் மைந்தன் கையிரண்டுங் கையாற் பிடிக்கக் காதலனு
“ நனிநீ டுவகை யுறுகின்றா ” ரென்று மகிழ்ந்து நகைசெய்யத்
தனிமா மகனைத் தாதையார் கருவி கொண்டு தலையரிவார், ௬௩

3723. “பொருவில் பெருமைப் புத்திரன்மெய்த் தன்மை யளித்தா” னெனப் [பொலிந்து
மருவு மகிழ்ச்சி யெய்த,“வவர் மனைவி யாருங் கணவனார்
அருமை யுயிரை யெனக்களித்தா ” னென்று மிகவு மகமலர
இருவர் மனமும் பேருவகை யெய்தி யரிய வினைசெய்தார். ௬௪

3720. (இ - ள்) அச்சம்...அதனால் - திருத்தொண்டர்க்குஆக்கும் அமுதுக்காக உதவும் பண்டம் என்ற அதனால் பயமெய்தி ; அரும் புதல்வன்...தாம் உண்ணார் - அரிய புதல்வனை உச்சிமோவார் ; மார்பில் அணைத்தே முத்தந் தாம் உண்ணார்; பொச்சமில்லா...மேவார் - குற்றமற்ற திருத்தொண்டராம் நாயனார் புனிதராகிய அடியவருக்குக் கறியாக்குதற்கு விரும்பும் மனத்தாலே அடுக்களையில் மேவாராகி ; வேறு கொண்டு அணைவார் - வேறு தனியிடத்திற் கொண்டு சேர்வாராய், ௬௧

3721. (இ - ள்) ஒன்றும்...புக்கு - ஒன்றித்த மனமுடைய அவ்விருவர்களும் உலகத்தார்கள் இதன் உண்மைத் தன்மையினை அறியமாட்டார்கள் என்று எண்ணி மறைவாகிய இடத்திற் சென்று புகுந்து ; பிள்ளைதனை...செல்ல - பிள்ளையைப் பெற்ற தாயார் திருவெண்காட்டு நங்கையார் செழிய கொள்கலங்களை (பாத்திரங்களை) நன்றாகக் கழுவிக் கொண்டு செல்ல ; நல்ல மகனை...பிடிக்க - நல்ல திருமகனாரை எடுத்து உலகியலை முற்றும் வென்ற தாதையாராகிய நாயனார் தலையைப் பிடித்துக்கொள்ள ; விரைந்து மெய்த்தாயர் - மெய்த்தாயாராகிய அம்மையார் விரைந்து ; ௬௨

3722. (இ - ள்) இனிய...பிடிக்க - இனிய மழலை ஓசைதரும் கிண்கிணியை அணிந்த கால்கள் இரண்டினையும் மடியின் இடையே இடுக்கிக்கொண்டு கனிபோன்ற வாயினையுடைய மகனது கைகளிரண்டினையும் கையாற் பிடித்துக் கொள்ள ; காதல

னும்...நகை செய்ய - மைந்தனும் தனது பெற்றோர்கள் மிகவும் பெரிய மகிழ்ச்சி யடைகின்றார்கள் என்று மகிழ்ந்து நகைக்க ; தனி...அரிவார் - ஒப்பற்ற பெருமை யுடைய மகனாரைத் தாதையாராகிய சிறுத்தொண்டர் கருவியினால் தலையினை அரிவாராகி, ௯௩

3723. (இ - ள்) அவர் - அத்தந்தையார் ; பொருவில்...மகிழ்ச்சி யெய்த - ஒப்பற்ற பெருமைப் புத்திரன் மெய்யாந் தன்மையினை எனக்கு அளித்தான் என்று விளங்கிப் பொருந்திய மகிழ்ச்சியினை அடைய ; மனைவியாரும்...அகமலர - அவரது மனைவியாராகிய அம்மையாரும் கணவனாரது அரிய உயிரை எனக்கு இப்புதல்வன் அளித்தான் என்று மிகவும் மனம் மலர்ந்து மகிழ ; இருவர்...எய்தி- இவ்வாறு இருவருடைய மனங்களும் பெருமகிழ்ச்சி பொருந்தி ; அரியவினை செய்தார் - அரிய செய்கையினைச் செய்தனர். ௯௪

இந்த நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

3720. (வி - ரை) கறியமுதாம் என்னும் அதனால் அச்சம் எய்தி - என்க. அச்சமாவது அரனுக்கும் அடியார்க்கும் ஆக்கும் பொருள்களை எவ்வாற்றானும் தாம் நுகராமைக் காத்தல் வேண்டுமென்ற நியமங்காத்தலான் வரும் பயம். நுகர்தல் மூக்கினால் முகர்தல், கண்ணால் இச்சைகொண்டு நோக்குதல், அவ்வாற்றாற் பரிசித்தல் என்ற எவ்வாற்றானும் நேரும் ; ஆதலால் அந்த எவ்வழியேனும் நுகர்தலின்றிக் காக்க அச்சம் வேண்டுவதாயிற்று ; இங்கு அக்காரணத்தால் தமது மகனாரை உச்சி மோத்தல் - மார்போடு அணைத்தல் - முத்த முண்ணுதல் என்ற இவை தானும் செய்தாரிலர் என்பதாம்.

உச்சி மோத்தல் - மார்பில் அணைந்தல் - முத்தம் உண்ணல் - இவை மகப்பெற்றோர் குழவிகளைப் பாராட்டி மகிழ்வுறும் செயல்கள் ; முத்த முண்ணல் - முத்தந் தரக் கொண்டு மகிழ்தல் ; "முத்தந் தருகவே" என்பது பிள்ளைத் தமிழ் வழக்கு ; இங்கு அம்மகனாரைத் தமது மகனார் என்ற நிலையினை மாற்றி அடியார்க்காகக் கறியமுதாம் என எண்ணி விட்டாராதலின் இவ்வாறு மகிழும் முன்னை நிலையும் மாறிற்று; போச்சம் - குற்றம் ; தவறு ; பொய் ; போச்சமில்லா என்றது மிக்குறிப்பு. தாம் உச்சி மோந்தும் அணைத்தும் முத்தம் உண்டும் நுகர்ந்தால் கறியமுதாம் அப்பண்டம் எச்சில்படும் என்பது அச்சமெய்தி என்ற கருத்து. வேறு - மற்றோரிடத்தில் :

மேச்சு மனம் - மகிழும் உள்ளம். இல்லா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

புனிதர்க்குக் கறியமைக்க - அடுக்களையின் மேவார் - வேறு கொண்டணைவார் - புனிதர் - தூய்மை செய்பவர் ; தூயர் ; ஆதலின் அவருக்கு அமுது அமைக்கும் இடம் புனிதமாக இருத்தல் வேண்டும். மைந்தனாரைச் செய்யும் அரியவினைகள் அங்குச் செய்யின் புனிதத் தன்மைக்கு இழுக்காகும் என்று அடுக்களையில் அவற்றைச் செய்யாது வேறு தனியிடத்துக் கொண்டனர் என்பதாம். அடுக்களை - அடுதல் - அமுது சமைத்தல் - செய்யும் இடம்.

61

3721. (வி - ரை) ஒன்றும் மனம் - ஒன்றும் - ஒன்றித்த ; ஒன்றாகிய ; ஒரு தன்மைப்பட்ட ; "ஒன்றி யிருந்து நினைமின்கள்" (தேவா) ; இருவர் - நாயனாரும் மனைவியாரும்.

உலகர்...புக்கு - இதனை உலகர் பார்க்கில் இதன் உண்மையினை அறியாமையால் பழித்தும் தடுத்தும் பிறவாறு இடையூறு விளைத்தும் செயல் செய்தல் கூடும்.

அதனால் காலத்தாழ்வு முதலியனவும் நேர்ந்து அடியார் திருவமுது செய்ய இடையூறும் என்பது மறைவிற் கொண்டு வினைசெய்யச் சென்றதன் கருத்து. எவ்வாற்றானும் மகனது உடம்பினைத் திருவமுதுக்கு விரைவில் ஆக்க வேண்டுமென்பது ஆர்வம்; பின்னர்ப் பிள்ளை பிழைத்து ஓடிவந்தபோதும் அதற்காக மகிழாது "அடியவர் உண்ணப்பெற்றோம் எனும் பொலிவால்" மகிழ்ந்தார் (3741) என்னும் கருத்தினை இங்கு வைத்துக் காண்க.

செழுங் கலங்கள் - இறைச்சி முதலிய வகைகளை ஏற்கத்தக்க நல்ல கொள் கலங்கள்; பாத்திரங்கள்; செம்மை - செம்பொன் - வெண்பொன் முதலிய உயர்ந்த உலோகங்களால் இயலுதல். தூயனவாதல்.

நன்று கழுவி - திருவமுதுக்கு உரிய பண்டங்களை வைக்கும் கலங்கள் நன்கு கழுவித் தூய்மை செய்யப் பட்டிருத்தல் வேண்டும். இன்றேல் மாசுபடிந்தும் களிம்பு முதலிய குற்றங்கள் சேர்ந்தும் திருவமுது பழுதுபட்டு விடத்தன்மை யடையும் என்பது மருத்துவநூல் பாகநூல்களின் உண்மைகள்; சரிதம் செல்லும் நிலையில் இவ்வுலகியலின் போதனைகளையும் கூறிச் செல்லுதல் உயர்ந்த கவிமாண்பு. "நீரிற் சேற்றினை யலம்பி யூற்றி" (458), "கறிகளாய்ந்து புனலிடைக் கழுவித் தக்க புனித பாத்திரத்து" (461) என்பன முதலியவை காண்க.

நல்ல மகனை - நன்மை - இறைவர்க்குத் திருவமுதாக்க உதவும் தன்மையும், பெற்றோர்கள் கொண்ட அடியார்க் கமுதூட்டும் விரதங் குலையாமற் காத்து மேனிலை எய்த உதவும் தன்மையும், ஆளுடைய பிள்ளையார் திருவாக்கில் வந்த பெருந்தன்மையும், பிறவுமாம். "சீராள தேவரெனுந் திருமைந்தர்" (3676); பெற்றோர்க்குப் பேறு தர வரும் மகனே நல்ல மகன் எனப்படுவது உலகியல்புமாம். "சீராளன்" (தேவா)

உலகை வென்ற தாதையார் - உலகு - உலகியலிற் றிணிந்த புத்திர வாஞ்சை என்னும் கடத்தற்கரிய காதல்; தசரதன் சரிதம் முதலியவை இங்கு நினைவு கூர்தற்பாலன. "உருநாட்டுஞ் செயல் காமனொழிய" (3660) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. "அடியேனுக் கிதுவு மரிதன்று" (3711) எனத் துணிவு கொண்டபோதே அவ்வெற்றி போந்ததாதலின் வென்ற என இறந்த காலத்தாற் கூறினார். அரியவினை முதலிய ஏனைப் பின்னிகழ்ச்சிகள் அதன் பயனாகப் போந்தனவேயாம்.

தலையைப் பிடிக்க - அரிய வினைக்கு முதற்கண் செய்யும் வினை இதுவாம்.

மெய்த்தாயர் - இடுக்கி - பிடிக்க - என மேல்வரும் பாட்டுடன் கூட்டுக. 62

3722. (வி - ரை) மழலைக் கிங்கிணி - மழலை - மகார்களின் சொற்போல ஒலிக்கும் என்ற பொருளில் வந்தது. மதலை - (கிங்கிணிக்) கால் என்பது பாடமாயின் (மதலை - மகன்) மதலையின் கால் என்க. மதலை - தூண்; தூண்போலக் குலத்தைத் தாங்குதலின் மகனுக்கு வரும்; ஆகுபெயர்;

மடியின் புடை இடுக்கி - மடியின் இடையே மகனது இரண்டு கால்களையும் பிறழாமல் இடுக்கிக் கொண்டு; இடுக்குதல் - இருபிடிப்புட் படுத்தி அமிழ்த்தி வைத்தல். காதலன் - (காதல் விருப்பம்). ஈண்டு மகன் என்ற பொருளில் வந்தது.

கையால் - தமது கையினாலே; காலினை இடுக்குதலும் கைகளிரண்டினையும் பிடித்துக் கொள்ளுதலும், தலையை அரியவினை செய்தற்கண் உடல் பிறழ்ந்து அவ் வினைக்கு இடையூறு விளைக்கா வண்ணம் செய்யும் எச்சரிக்கைத் தொழில்கள். கருவியினா லறுத்தல் செய்யும் மருத்துவர் இவ்வாறு உடல் அசையாமல் முன்னர்ச் செய்துகொள்ளும் எச்சரிக்கைச் செயல்களாதல் காண்க.

தனிமாமகன் - " நல்ல மகன் " என முன் கூறியதனைத் தொடர்ந்து, ஈண்டு இந்நிலையின் முடித்துக் கூறியது, இவரை இனிப் பேசும் நிலை, இவர், மேல், உயிர் பெற்றுவரும் நிலையில் அமைதல் குறிக்க; " மாறின்மகவு—மைந்தன் " (3738) என்று இறைவரும், " மைந்தா, செய்யமணியே சீராளா " (3740) என்று பெற்றோரும் " தாமில் வனப்பிற் றனிப்புதல்வன் " (3741) " மகனார் " (3746) என்று ஆசிரியரும் மேற் பாராட்டும்நிலைகள் கண்டுகொள்க.

நனி...நகை செய்ய - இது மகனார் உள்ளத்து மகிழ்ந்த கருத்து. இதனால் மகனாரது உள்ளத்தில் தம்மைப் பெற்றோரது முகத்துவகை கண்டு இவர் தம்பால் பேருவகை கொள்கின்றார் என்று தாமும் நகை செய்து மகிழும் அளவு அவர்கள் மனங்கள் மகிழ்ந்தன என்பது குறிப்பு. " தம்மில் மனமுவந்தே " (3710) என்ற நிலை உள்ளபடி விளங்கக் காணப்பெற்ற தென்பது. கருவி - தலை அரியும் வாள்-கத்தி. மகிழ்ச்சி - அகத்தும், நகை — அது காரணமாகப் புறத்தும் நிகழ்வன.

அரிவார் - அரிவார் என்று எதிர்கால வினைமுற்றாற் கூறி, மேற், செய்த செயலைத் தாம் எடுத்துச் சொல்லாமலே கருதி யறிந்துகொள்ள வைத்த கவிநயம் கண்டு கொள்க. மேல் அரியவினை செய்தார் - என்றது அதன்மேல் நிகழ்ந்த அறுத்தல், கூறுபடச் சேதித்தல் முதலியவற்றையும் உள்ளடக்கி நின்றது.* 63

---

*குறிப்பு :—ஈண்டுக் " குடியர்கள் வெறியால் தங்களை மறந்து செய்யும் செயல்களை ஈண்டுக் கருதிக் கொள்க" என்றும், "இங்கே இவர் கொண்ட வெறி அன்புக்குடியினால் எழுந்தது" என்றும், "அடியவர்மீது கொண்ட அன்பு வெறி மேலிட்டு நின்று அவ்விருவரையுஞ் செயற்கருஞ் செய்கையைச் செய்ய உந்துகின்றது. அது மேலு மேலும் களிப்பு ஊட்டிக்கொண்டே போகிறது " என்றும், இவ்வாறு விசேட ஆராய்ச்சி செய்வாருமுளர். இவ்வாராய்ச்சியின் பொருந்தாமை சிறிது ஊன்றி உண்மை காண்பார்க்கும் விளங்கும்; முதலாவது கட்குடியர்கள் கீழ்நோக்கிய நிலையில் நின்று, ஐம்பெரும் பாதகங்களுள் ஒன்றாகிய கள்ளைப் பயின்று தம்மையும் தாம் செய்யும் செயலையும் அறியாது மயங்கிக் கீழாயின பாதகச் செயல்களைச் செய்வர்; நாயனாரும் மனைவியாரும் அவர் போன்ற பெரியார்களும் அவ்வாறு கீழ்மைத் தன்மையில் பயின்றாரிலர். தம்மையும் தாம் செய்யும் செயலையும் நன்கு அறிந்து கொண்டவாறே ஞானநூன் முடிபுகளாகிய மேம்பட்ட செயல்களைச் செய்தனர். " மற்றித்திறத்து மைந்தர் தமை, நினைவு நிரம்ப நிதிகொடுத்தாற் றருவா ருளரே; நேர்நின்று, தனயன் றன்னைத் தந்தைதா யரிவா ரில்லை " (3715) என்றும், " உலகறியாரென மறைவிற் கொண்டு புக்கு " (3721) என்றும் வருவனவாற்றால் நாயனாரும் மனைவியாரும் தமது அரிய ஞான நூற்றுணிபின் வந்த செயலையும் உலகியல் மாக்களதனை அறியாநிலையினையும் நன்கு அறிந்தே வினை செய்தமை தெளியப்படும். (2) " உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை " என்ப திலக்கணமாதலின் உயர்ந்த பொருளுக்குத் தாழ்ந்த பொருளை உவமித்தல் பிழையாம். (4) இங்கு இவ்விருவரும் செய்த வினை உலகீ இயலில் கொலையே போற் காணப்படினும் அது கொலையாகாது அருளின் வழிச் செய்யப்படும் ஞான சாதனச் செயலாம் என்பது உண்மை அறிவோர் துணிபு; என்னை? இம்மகனார் இச்செயலின் அரியவினைக் குட்படாது நின்றிருப்பின் ஏனைமாந்தர் போலச் சிலநாள் வாழ்ந்து, பின் இறந்து, பின்னும் பிறந்திறக்கும் நிலையே பெற்றிருப்பர்; ஆனால் இவ்வரிய வினையினால் பிறவியினின்றும் நீங்கி என்றும் பிரியாதே உடனிருக்கும்படி கொள்ளும் மீளா நிலைபெற்றனர். இவ்வரிய வினையால் உலகில் வரும் மக்கட் பந்தம் நீங்கி இவ் இருவரும் அந்நிலையினைப்

3723. (வி - ரை) அவர் - நாயனார்; அவர் - மகிழ்ச்சி - எய்த என்று கூட்டுக. அவர் மனைவியாரும் - என்று கூட்டி அவருடைய என்றலுமாம். இப்பொருளில் நாயனார் என்பது வருவித்து முடிக்க.

பேர்நவில்...அளித்தான் - இது நாயனார் கருதி உண் மகிழ்ந்தது ; மெய்த் தன்மை - மண்ணினிற் பிறந்தார் பெறும் உறுதியாகிய உண்மைநிலை. அடியார்க் கமுதூட்டும் விரதந் தவறாத தன்மை. மெய் - மெய்ம்மையைத் தரும் ; இது சிவத்தன் மையாகிய செம்மை ; அளித்தான் - உரிய சாதனமா யமைந்து பெறுவித்தான்.

கணவனார்...எனக் களித்தார் - அடியாரை ஊட்டும் நியமமும் தமது வாக்கும் தவறின் கணவனா ருயிர் வாழாராதலின் அவ்வாறு நிகழாமற் காத்து அவரது உயிரைத் தமக்கு இப்புதல்வன் அளித்தான் என்று அம்மையார் மகிழ்ந்தனர். அரி வாட்டாயர் — கலியர் முதலிய நாயன்மார்களது சரித நிகழ்ச்சிகள் காண்க.

அரிய வினை - பிறர் எவராலும் செய்தற்கரிய செயல். இத்தகைய வல்வினைகளை வெளிப்படக் கூறாமல் இவ்வாறு கூறுதல் ஆசிரியரது மரபு ; இதுபற்றி " வரங்

---

பெற்றனர். இதுபோழ்து செய்யாது நின்றிருப்பின் வாளா பிறந்திறந் துழலும் ஏனை மாந்தரின் வேறல்லாராவார் என்பதும் காண்க. இயற் பகையார் முதலாகிய எல்லா நாயன்மார்களது வரலாறுகளையும் இவ்வாறே சிந்திக்க. (4) மனித உடலைத் துன்பத் துட் படுத்துவதும் உயிர் பிரித்தலும் எஞ்ஞான்றும் சீவ இம்சையும் கொலையுமேயாம் என்ற போலிச் சமண பௌத்த கொள்கையினை மேற்கொண்டு அதனை அடிப்படை யாகக் கொண்டு எழுந்தது இவ்வாராய்ச்சி; இவ்வுலகில் பலரும் இம்மயக்க வுணர்வே கொள்கின்றார்கள். மக்கட் கூட்டத் தலைவர்களாய் அறிவாளிகள் எனப்படுவோரும் இவ்வாறே மயங்குகின்றனர். இதன் உண்மைநிலை முன்னர்ப் பலவிடத்தும் எடுத்துக்காட்டப்பட்டது ; ஈண்டும் சிறிது விளக்குவாம் ; உடலில் நோய் கண்ட போது அவ்வவ் வுறுப்புக்களைக் கருவிகொண்டு மருத்துவன் அறுத்தும் சிதைத்தும் வேறு கூறுபடுத்தித் துண்டித்தும் வினை செய்கின்றான் ; மக்களையும் மனைவியரையும் தம்மையும் இவ்வாறு துண்டிக்க மருத்துவனுக்கு மகிழ்ந்து பெருநிதியும் தருகின்றார்கள். மகப்பேற்றுக் காலத்தில் இயல்பிற் பெற இயலாதபோது மகவைச் சிதைத்துத் துண்டித்துத் தாயரைக்காக்க முற்பட்டு மகிழ்வதையும் காண்கின்றோம். " எந்நாளிலோ ஒருநாள் இறந்தே படும் உடலினைப் பின்னும் சிலநாள் உலகில் வைத்திருக்கவே இவை உலகியலில் மனம் ஒப்பிச் செய்யப்படுவன ஆகில், என்றும் மீளா இன்பத்தினை உயிர் பெறுதற்கு இவ்வகை அரியவினை செய்தல் எவ்வளவும் பொருந்துவன வாகுமன்றோ ? இவ்வுண்மைநிலை யறியாத போலிச் சீவகாருணி யம் கைக்கொள்வதனால் எத்தனை உயிர்கள் வீணே இறந்து கழியக் காண மனம் வருந்தாமலிருக்க முடியுமா ? (5) இனி, இறைவன்பாலும், அடியார் பாலும் செய்யத்தகும் பணிவிடைகளில் வருவன உத்தமச் சிவபுண்ணியமாயும் அவ்வுயிர்க் கும் அவற்றை இறக்கச் செய்த அவ்வுயிர்க்கும் வீடுபேறும் தருவனவாயும் கொலை என்ற பாதகப் பகுதியில் வாராது அருட்செயல் என்ற சாதகப்பகுதியில் வருவன வாயும் உள்ளன என்பதும் அறிவோர் கொள்கை ; " ஒருவழிநின் றேறுதுறை ஒளிநின்று கோன்றநுளி " (791) என்று கண்ணப்ப நாயனார் சிவ பூசைக்குத் திருவமுதாக்கப் பிராணிகளைக் கொன்றமை அருட் செயலாகக் கோன் றநுளி எனப்பட்டமை காண்க. ஆண்டுரைத்தவையும் பார்க்க. தண்டியடிக ளாயனார் இறைவருக்குத் தீர்த்தக் குளங் கல்லக் கண்ட அமணர் பொருது " மண்ணைக்

கடருஞ் செய்ய வயிரவர்க்குத் தங்கள், கரங்களினு லன்றுகறி யாக்க - விரங்காதே, கொல்வினையே செய்யுங் கொடுவினையே யானவற்றை, வல்வினையே யென்றதுநா மற்று " (18) என்றும், " வல்வினையே யென்ன வருமிரண்டுஞ் சொல்லிற் சிவ தன்மமாம் (16) என்றும் (களிறு) வரும் ஞானசாத்திரமும் காண்க.

இருவர் மனமும் பெருவகை எய்தி – " தம்மில் மனமுவந்தே " (3710) என்ற நிலையைக் கூடியதன்மை.

மனைவியார் - கணவனுர் - புதல்வர் - என்ற உடற் சுற்றத் தொடர்பு பற்றிக் கூறினுர், " மகனைத் தாதை யரியத் தாய்பிடிக்கும் பொழுது " (3710) என்றது இறைவர் கட்டளையாதலின் அந்நிலையினை மனத்துட் கொண்டு வைத்தவாறே நிறை வேற்றிய குறிப்புத் தருதற்கு. 64

---

கல்லிற் பிராணிபடும். வருத்தவேண்டா " என்றபோது, " பூசு நீறு சாந்தமெனப் புனைந்த பிரானுக் கானபணி, யாசி லாநல் லறமாவ தறிய வருமோ வுமக்கு " (3598) என்றதும் அங்கு உரைத்தவையும் இங்கு நினைவு கூர்தற்பாலன. (6) இனி, ஒரு பொருளால் வரும் நன்மை தீமை அப்பொருள் கொண்டு செய்யப்படும் செயல் களின் நன்மை தீமையைப் பற்றியே விளைகின்றன என்றதும் மறுக்கலாகாத உண்மை; (7) " முன்னுடிக், கண்டு கடன்கழித்தல் காரியமா மென்றெண்ணிக், கொண்டுவரு நேர்யின் குறிப்பறிவார்—மண்டெரியிற், காய்ச்சிச் சுடவறுக்கக் கண்ணுரிக்க நன்னிதியம் ஈத்துத்தாய் தந்தைதம ரின்புறுதல் - வாய்த்தநெறி, ஓடியதே ரின்கீ ழுயிர்போன கன்றலே, நீடுபெரும் பார்வமின்றே நீந்துமேன— நாடித்தன், மைந்தனையு மூர்ந்தோன் வழக்கே வழக்காக, நஞ்சனைய சிந்தை நமன் றூதர், வெஞ்சினத்தால், அல்ல லுறுத்து மருநரகங் கண்டுநிற்க, வல்ல கருணை மறம் போற்றி" (48 - 54 போற்றிப் பஃறெருடை) என்ற ஞானநூற் கருத்துக்களும் ஈண் டுக் கருதத் தக்கன. (8) ஈண்டு, நாயனுரும் மனைவியாரும், உலகப் பொருள்களும் உட லுயிர்களும் இறைவன துடைமை; இவற்றை நம்மதென் றெண்ணுவது மருள்; இவை அரனுக்கும் அடியார்க்குமே உடைமையா மென்ற உண்மை கண்டு அவர்க்கு ஆக்குதல் ஞானமுடிபு; அதுவே உயிர்க்குறுதி செய்வன என்ற பேரறி வொளி விளங்கப் பெற்று அவ்வழி ஒழுகியவர்கள். (9) எந்தமது பெருமக்களாகிய உண்மை நாயன்மார்களெல்லாரும் அவ்வாறே வாழ்ந்த சீவன் முத்தர்கள். அவர்க ளது அருட் செயல்களை உலகியற் கண்ணுகிய அளவுகோல் கொண்டு அன்புப் பித்தென்றும் அன்புக் குடிவெறி யென்றும் களிப்பு என்றும் கூறுதல் கூறு வோரது பிழைப்பட்ட மருளினைப் புலப்படுத்துவதேயாமன்றி உண்மைத் தத்துவ நெறியினைப் புலப்படுத்தாது. " பித்த னென்றெனை யுலகவர் பகர் வதோர் காரண மிதுகேளீர் " (திருவா) என்றும், " பித்துப் பத்தரினத்தாய் " (போதம் - 12) என்றும், " பாலருட னுன்மத்தர் பசாசர்குண மருவிப், பாட லுட னுடலிவை பயின்றிடினும் பயில்வர் " (சித்தி - 8 32) என்றும் வருவனவும் அவைபோல்வனவும் கூறும் பித்தர் நிலை என்னும் நிலை வேறு; அவையெல்லாம் அவ்வவ் பண்புகளை விளக்க எழுந்தனவும் உலகர் அவரைப் பற்றிக் கொள்ளும் நிலை களை மறுத்து உண்மை உணரக் கொளுத்த எழுந்தனவுமாம். ஈண்டு நாயனுர் மனைவி யார் செய்கைகள் இத் தன்மை யுட்படாத வேறு நிலையினவாதல் கண்டுகொள்ளத் தக்கது. நாயன்மார்களது அருள் ஞானச் செயல்களை வெறி என்று கொண்டொதுக்கி ஞல் அவை உலகுக்கு ஞானசாதன இலக்கியங்களாய் விளங்குதல் யாங்ஙன மென்க. இவைபோல இன்னும் பலவும் கண்டுகொள்க.

3724. அறுத்த தலையி னிறைச்சிதிரு வமுதுக் காகா தெனக்கழித்து
மறைத்து நீக்கச் சந்தனத்தார் கையிற் கொடுத்து மற்றையுறுப்
பிறைச்சி யெல்லாங் கொத்தியறுத் தெலும்பு மூளை திறந்திட்டுக்
கறிக்கு வேண்டும் பலகாய மரைத்துக் கூட்டிக் கடிதமைப்பார், ௬௫

3725. மட்டு விரிபூங் குழன்மடவார் அடுப்பி லேற்றி மனமகிழ்ந்தே
அட்ட கறியின் பதமறிந்தங் கிழிச்சி வேறோ ரருங்கலத்துப்
பட்ட நறையாற் றாளித்துப் பலவு மற்றுங் கறிசமைத்துச்
சட்ட விரைந்து போனகமுஞ் சமைத்துக் கணவர் தமக்குரைத்தார்.

3724. (இ - ள்) அறுத்த...கழித்து - கூறுபடுத்தி எடுத்த தலையின் இறைச்சி திருவமுதுக்கு ஆகாது என்று கழித்து; மறைத்து நீக்க...கொடுத்து - அதனை மறைத்து ஒதுக்கும் பொருட்டுச் சந்தனத்தாரது கையிலே கொடுத்து; மற்றை... கடிது அமைப்பார் - மற்றை உறுப்புக்களின் இறைச்சி எல்லாவற்றையும் கொத்தியும் அறுத்தும் எலும்பினுள்ளே உள்ள மூளைப்பகுதியைத் திறந்து எடுத்து இட்டும் கறியாக்குதற்கு வேண்டும் பலவாகிய காயவகைகளை அமைத்துக் கூட்டியும் விரைவில் திருவமுது அமைப்பாராகி, ௬௫

3725. (இ - ள்) மட்டு...இழிச்சி - மணம் வீசும் கூந்தலினையுடைய அம்மையார் அவற்றை ஒருபாத்திரத்தில் இட்டு அடுப்பில் ஏற்றி மனமகிழ்ந்தே சமைத்த கறியினைப் பக்குவம் தெரிந்து அடுப்பினின்றும் இறக்கி வைத்து; வேறோர்...தாளித்து - வேறு ஓர் அரிய பாத்திரத்தில் உரிய பண்டங்களாலே தாளிதம் செய்து; பலவும் மற்றும் கறிசமைத்து - மேலும் பலவாகிய கறிகளையும் சமைத்து; சட்ட...அமைத்து - செப்பமாக விரைந்து சோற்றினையும் சமைத்து; கணவர் தமக்கு உரைத்தார் - கணவராகிய நாயனாருக்கு அறிவித்தார். ௬௬

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

3724. (வி - ரை) அறுத்த...கொடுத்து - அரிவார் - (3722) அரியவினை செய்தார் - (3723) என்று அவ்வினையைக் கூறாமற் கூறிய ஆசிரியர், அறுத்த - என்று இறந்தகாலத்தாற் கூறிய நிலையினாலும், அச்செயல் நிகழ்ந்ததனை அறிவித்த மாபும் கவிநயமும் கண்டுகொள்க.

தலையிறைச்சி திருவமுதுக் காகாது எனக்கழித்து - இது புலால் உணவின் பொது நியமம் போலும். ஆதலின் அம்மையார் அதனைக் கழித்தனர் என்பது கருதப்படும்; தலையில் உள்ள எலும்புக்கூடும் ஏனைய அவயவங்களின் அமைப்பும் உள்ளீடும் பற்றி இவ்வாறு கொள்வர் என்பது கருதப்படும்; ஆட்டிறைச்சி முதலிய வற்றைக் கொள்வோரும் இறைச்சியுடன் சேர்க்காது தலையினை வேறு ஏக தேசத் திற் கொள்வதும் காணத்தக்கது. ஆனால் ஈண்டு வயிரவ அடியார் "அதுவுங் கூட நாமுண்பது" (3733) என்பது சிறப்பு விதிபோலும், சந்தனத் தாதி யம்மையார் இங்குத் தலையிறைச்சி "இனைக்க வருமென்றே, முந்த வமைத்தேன் கறியமுது" (3734) என்று கூறுவதனாலும் சிறு பான்மை சிறப்பு விதியாக அதுவும் உணவு வகையுட் படும் என்பது கருதப்படும்.

மற்றை உறுப்பு இறைச்சி எல்லாம் கொத்தி அறுத்து எலும்பு மூளை திறந் திட்டு - இதனால் கைகால் மார்பு முதலிய பல உறுப்புக்களிலும் உள்ள இறைச்சித்

தசைப் பகுதிகளைச் சேகரிக்கும் தன்மை கூறப்பட்டபடி ; கோத்துதல் - தசை பற்றியிருக்கும் எலும்பு முதலிய பற்றுக்களிலிருந்து பிரித்தற் பொருட்டும், அறுத்தல் பின்னர் வேறு படுத்தி எடுத்தற் பொருட்டும் ஆம். " தசைகள் வெவ்வே றம்பினி லீர்ந்து கொண்டு", (766) " மிருகங்கள் கொந்தியயி லம்பாற் குட்டமிட்டுக் கொழுப்பரிந்து" (794) என்பன முதலியவை காண்க. எலும்பு மூளை திறந்திடுதல்-எலும்புகள் குழாய்கள் போன்றிருக்கும் ; அவற்றின் உள்ளே நடுவில் மூளைப்பகுதி உண்டு. அது உணவுக்குரியதாம் என்ப ; எலும்பினைத் திறந்து அப்பகுதியினை எடுத்து. " என்பு திறந்து மூளை புல்லும்படி " (988).

கறிக்கு வேண்டும் - பலகாயம் - காயம் - இறைச்சிக் கறிக்குக் கூட்டும் பெருங்காயம், சோம்பு, இலவங்கப்பட்டை முதலாகிய வாசனைப் பண்டங்கள் காயம் எனப்படும் என்ப.

கடிதமைப்பார் - நாதனடியார் பசியினை விரைவில் தீர்க்கும் ஆவல் குறித்தது ; " காலந் தப்பாமே வருவேன் " (3708) ; " பசியினாலே அழிவுறுமையன் " (460) " இனிய வெம்பிரானுர் சாலப் பசிப்ப ரென்றிரங்கி யேங்கி, நனிவிரைந்து " (771), " நாதன்ற னடியாரைப் பசிதீர்ப்பேன் " (1734) என்பன காண்க.

அமைப்பார் - அமைப்பாராகி ; முற்றெச்சம் ; அமைப்பாராகி - மடவார் - ஏற்றி, இழிச்சித், தாளித்துச், சமைத்து, சமைத்து உரைத்தார் என மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க. 65

3725. (வி - ரை) அம்மையாரது ஆர்வத்துக் கேற்ப இப்பாட்டால் திருவமுது ஆக்கிய வகை யெல்லாம் விரைவில் கூறி முடித்த கவிநயம் கண்டுகொள்க.

மட்டு - மணம் ; விரி - என்றதனால் இங்கு இயற்கை மணங் குறித்தது.

பதம் - கறி அடப்பட்டு உணவுக்குரியதாகிய பக்குவம். இழிச்சி - அடுப்பினின்றும் கீழே இறக்கி.

வேறோர்...தாளித்து - தாளிதம் வேறு கலத்திற் செய்து உணவுடன் கூட்டும் சமையல் முறை குறித்தது.

நறையால் - நறுமணப் புகை கமழ ; தாளிதம் வறுபடாமை, முறுகுதல், கருகுதல் முதலியன இன்றிப் பதத்தில் மணம் பொருந்தும் நிலை குறித்தது.

சட்ட - செப்பமாக. " சட்ட என்பது செப்பப் பொருட்டாயதோர் அகர வீற்றிடைச் சொல் ; அது சட்டம் என மரீஇயது " (போதம் - மாபாடியம் - 9 - 2 வெண்பா).

மற்றுங் கறி பலவும் என்க. இவை பொரிக் கறி முதலிய கூட்டுணவு வகைகள்.

கணவர் தமக்கு உரைத்தார் - " கணவனார் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி " (462) ; மனைவியார் தமது செயல்கள் முற்றின என்றும், இனி அடியாரை அழைத்துத் திருஅமுது செய்விக்க வேண்டுவன செய்தல் வேண்டுமென்றும் குறித்தபடி. 66

3726. உடைய நாத ரமுதுசெய உரைத்த படியே அமைத்தவதற்
கடையு மின்ப முன்னையிலு மார்வம் பெருகிக் களிகூர
விடையின் வருவார் தொண்டர்தாம் விரைந்து சென்று மென்மலரின்
புடைவண் டறையு மாத்தியின்கீ ழிருந்த புனிதர் முன்சென்றார். ௬எ

(இ - ள்) உடையநாதர்...களிகூர-ஆளுடைய நாதர் திருவமுது செய்வதற்குச் சொன்னபடியே அமைத்ததற்குப் பெற்ற மகிழ்ச்சி முன்னிருந்ததனினும் மிக ஆசை மேன்மேலும் பெருகி ஆனந்தம் மிகவும் அடைந்து; விடையின்...சென்று - இடபத்தின் மேல்வருவாராகிய சிவபெருமான் திருத்தொண்டராகிய சிறுத்தொண்டர் தாம் விரைவாகப் போய்; மென்மலரின்...சென்றார் - மெல்லிய பூக்களின் பக்கங்களில் வண்டுகள் சத்தித்தற் கிடமாகிய திருவாத்தியின் கீழே வீற்றிருந்தருளிய புனிதராகிய வயிரவரிடம் சென்றனர்.

(வி - ரை) உடைய நாதர் - அடியாரை ஆண்டவனுகவே கொள்ளும் மரபு பற்றி நாதர் என்றார்; இங்கு அப் பாவனை அவ்வாறே பலித்ததும் காண்க; அன்றியும் அடியாரை அமுதூட்டும் போது அவர்களுக்குள்ளே நின்று பரமரே உண்டருளுகின்றார் என்பதும் துணிபு.

உரைத்தபடியே - அவர் கூறியபடியே.

அமைத்த அதற்கு முன்னையினும்...பெருகி - அவர் உரைத்ததும், தாம் எண்ணியதுமாகிய இன்பத்தினும் அவ்வாறே செயலில் செய்தும் முடித்ததன் பொருட்டு மேலும் பெருகிய இன்பமடைந்து.

விடையில் வருவார் தொண்டர் - சிறுத்தொண்டர். வருவார் - வினையாலணையும் பெயர்.

மென்மலரின்...ஆத்தி - ஆத்தி மலர்களின் பக்கம் வண்டுகள் அத்தேனை உண்ணும் பொருட்டு அவை மலரும் பருவம் பார்த்துப் பக்கத்தே ஊதி, அவை மலர்தற்குதவி புரிகின்றன என்பது.

புனிதர் - இறைச்சி யுண்பது - அதனினும் மனிதர் இறைச்சி உண்பது - அதனினும் ஐந்து வயதுச் சிறுவன் கொலைக்குக் காரணமாவது - அதனினும் அவனைப் பெற்றோரே பிடித்து அரியவினை செய்யும் கொடுமையினை ஏவுவது - என்றின்னோரன்ன புனிதமற்றனவாய்க் காணப்படும் செயல்களைச் செய்யினும் அவர் புனிதத் தன்மைக்கு இழுக்கில்லை; புனிதர் புனிதரே என்பது குறிக்க இங்கு இப்பெயராற் கூறினார். புனிதத்தை விளைப்பவர். 67

3727. அண்ண லிருமுன் பணைந்திறைஞ்சி யன்பர் மொழிவா "ரடியேன்பால்
நண்ணி நீரிங் கமுதுசெய வேண்டு"மென்று நான்பரிவு
பண்ணி னேனாய்ப் பசித்தருளத் தாழ்த்த தெனினும் பணிசமைத்தேன்
எண்ணம் வாய்ப்ப வெழுந்தருள வேண்டு" மென்றங் கெடுத்துரைப்பார்,

3728. "இறையுந் தாழா தெழுந்தருளி யமுது செய்யு" மென் றிறைஞ்சக்
கறையுங் கண்டத் தினின் மறைத்துக் கண்ணு நுதலிற் காட்டாதார்
"நிறையும் பெருமைச் சிறுத்தொண்டர்! போது" மென்ன, நிதியிரண்டுங்
குறைவ னொருவன் பெற்றுவந்தாற் போலக்கொண்டு மனைபுகுந்தார்.

3727. (இ - ள்) அண்ணல்...மொழிவார் - இறைவரது திருமுன்பிற் சார்ந்து வணங்கி அன்பராகிய சிறுத்தொண்டர் மொழிவாராய்; "அடியேன்பால் ...வேண்டும்" என்று அங்கு எடுத்துரைப்பார் - அடியேனிடத்து எழுந்தருளி நீர் இங்குத் திருவமுது செய்தருள வேண்டுமென்று அடியேன் அன்பு செய்து விரும்பி வேண்டினேனாக, அதன் பொருட்டுத் தேவரீர் பசித்தருளிக் காலந்தாழ்க்க இதுவரைக் காத்திருக்க வேண்டி வந்ததென்றாலும், தேவரீர் பணியின்படி சமைத்தேன்;

அடியேனது விருப்பம் நிறைவேறும்படி எழுந்தருள வேண்டும்" என்று கூறி, மேலும் உரைப்பாராகி, ௬அ

3728. (இ - ள்) இறையும்...இறைஞ்ச - இனிச் சிறிதும் தாழ்க்காது தேவரீர் எழுந்தருளித் திருவமுது செய்தருளுதல் வேண்டும் என்று கூறி வணங்க; கறையும்...காட்டாதார் - கண்டத்திலே விடத்தின் கருமையினை மறைத்தும் நுதலில் உள்ள கண்ணினையுங் காட்டாது மறைத்தும் வந்தவராகிய இறைவர்; நிறையும் ...போதும் என்ன - நிறைவாகும் பெருமை பொருந்திய சிறுத்தொண்டரே! போதும் என்று அருள; நிதியிரண்டும்...மனைபுகுந்தார் - வறியவன் ஒருவன் இரண்டு நிதிகளையும் ஒருங்கே பெற்றுவந்தாற் போல உடன் அழைத்துக் கொண்டு தமது மனையினிற் புகுந்தனர். ௬௯

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

3727. (வி - ரை) பரிவு பண்ணினேனாய் - பரிவு - அன்பு; பரிவு...தாழ்த்தது - உமது பசி தீர்க்க வேண்டு மென்று பரிந்து கொண்டதனால் அதற்கு நீர் இணங்கி நிற்க, அதற்கு மாறாக பசியினை அதிகப்படுத்திய செயலேயாய்க் காலம் தாழ்த்தது.

எனினும் - என்றது, காலத்தாழ்வாயினும் காரியம் நிறைவேறியது ஆறுதல் என்பது குறிப்பு.

பணி சமைத்தேன் - பணி - பணித்தபடி; கட்டளை யிட்டபடி; அமுதூட்டும் திருப்பணியாக என்ற குறிப்புமாம்.

எண்ணம் வாய்ப்ப - தேவரீரை எவ்வாற்றாலும் திரு அமுதூட்டுதல் வேண்டு மென்ற அடியேனது எண்ணம் நிறைவேறும் பொருட்டு; தேவரீர் எங்களை யாட் கொள்ளச் சங்கற்பித்து எழுந்தருளிய திருவுள்ளக் கருத்துப்படி அருள் எங்களுக்கு வாய்க்கும் பொருட்டு என்ற பிற்சரித வினையின் உண்மைக் குறிப்புமாம்.

உரைப்பாராகி - இறைஞ்ச - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க; உரைப்பார் - முற்றெச்சம். 68

3728. (வி - ரை) இறையும் - ஒரு சிறிதும்.

கறையும்...காட்டாதார் - இறைவர் காட்டி வந்தருளிய திருவடிவக் குறிப்பு; கறையும் கண்டத்தினின் மறைத்து - இதனை முன் (3689) விரித்தருளியதனை ஈண்டு நினைவு கூர்க. வயிரவர், தலையினின்று திருவடிவரையும் கொண்ட திருவேடத்தினை (3685 முதல் 3694) பத்துத் திருப்பாட்டுக்களால் விரித்துக் கூறிக் காட்டித் தரிசனம் செய்வித்தருளினாராதலின் ஈண்டு அவற்றை நினைவுகூர்தற் பொருட்டு அவற்றுட் சிறந்த இரண்டு நிலைகளைக் காட்டுவித்தருளுகின்றார்; மறைத்து - "விட மறைத்தருள" (3689); விடத்தினை மறைத்து அமிழ்தக் குமிழி நிரைத்தனர் எனக் கூறிய குறிப்பின்படித், திருநீலகண்டம், "வெவ்விட முன்றடுத் தெம்மிடர் நீக்கிய வெற்றியினா, லெவ்விடத் தும்மடி யாரிடர் காப்பது கண்ட மென்றே" (2233) என்றபடி அருள் புரிவதற் கடையாளமாம்; திருநீலகண்ட நாயனார் புராணம் பார்க்க. (363); கறையும் - கண்ணும் - உம்மைகள் எண்ணும்மைகள்.

கண்ணும் நுதலிற் காட்டாதார் - நெற்றிக் கண்ணை மறைத்து வந்தவர் என்பது; காட்டாதார் - வெளியே தெரியாது மறைத்தவர்; "திருநுதன்மேற் றிருநீற்றுத் தனிப்பொட்டுத் திகழ்ந்திலங்க" (3687); திருநீலகண்டம் மறைத்தமை பொதுவும், நுதற்கண் மறைத்தமை சிறப்பும் ஆகிய அருட்குறிப்புக்கள் பெற இவற்றை ஈண்டு விதந்து எடுத்தோதியருளினர். நுதற்கண்ணின் அருள் இச்சரித

விளைவுக்குரிய சிறப்புடைய தென்பது இப் புராணத் தொடக்கத்தில் "செயல் காம ணெழியவிழி பொழிசெந்தீ, வருநாட்டத் திருநுதலார்" (3660) என்று உரைத் தமை காண்க. "கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி, மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும்" (இருபா-1) என்ற ஞானநூலினும் இவ்விரண்டுமே எடுத்துக் கூறி யருளியது காண்க. இனம்பற்றி ஏனையவும் கொள்ளப்படும்.

முன்னர் விரித்துக் கூறியவையே அமையும்; இவற்றை மீண்டும் இங்குக் கூற வேண்டிய தென்னை? எனின், முன் கூறியவை அருள்புரிய வந்த நிலை; இங்குக் கூறுவது அன்பு நுகர்ந்து அருளினைச் செய்ய எழுந்தருளும் நிலை; "அன்பு நுகர்ந்தருளுதற்குத்...திருமலைநின் றணைகின்றார்" (3684).

நிறையும்...போதும் - நிறையும் - இப்போது உமது பெருமை நிறைவாகும் நிலையில் உள்ளது என்பது. போதும் - போதுவோம் - போவோம் என்று எழுந்து சென்ற குறிப்பு; போதும் - அமையும்; அன்பு செலுத்திய எல்லை இவ்வளவே சாலும் என்ற குறிப்பும் காண்க. நுறைவன் ஒருவன் இரண்டு நிதியும் பெற்று வந் தாற் போல - என்க. நுறைவன் - வறியவன். குறைவு உடையவன். ஒருவன் - இரண்டும் எண்ணணிச்சுவை.

நிதி இரண்டும் - "சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து" (தேவா); உம்மை முற்றும்மை.

பெற்று வந்தாற்போல - பெற்று எடுத்துக் கொண்டு வந்தது போல வயிரவரை அழைத்துக் கொண்டு என்க. வினையும் பயனும் பற்றிவந்த உவமம். "இகத்தும் பரத்தும் இனியார்" (3736) என்றபடி இருபயனும் தாவருவது நிதி யிரண்டும் என்றதன் குறிப்பு.

கொண்டு - உடன் அழைத்துக் கொண்டு. 69

3729. வந்து புகுந்து திருமனையின் மனைவி யார்தா மாதவரை
முந்த வெதிர்சென் றடிவணங்கி முழுது மழகு செய்தமனைச்
சந்த மலர்மா லைகள்முத்தின் றாம நாற்றித் தவிசடுத்த
கந்த மலரா சனங்காட்டிக் கமழ்நீர்க் கரக மெடுத்தேந்த, எ0

3730. தூய நீராற் சிறுத்தொண்டா சோதி யார்தங் கழல்விளக்கி,
ஆய புனிதப் புனல்தங்க டலைமே லாகத் தெளித்தின்ப
மேய வில்ல மெம்மருங்கும் வீசி விரைமென் மலர்சாந்தம்
ஏயுந் தூப தீபங்கண் முதற்பூ சனைசெய் திறைஞ்சுவார், எக

3731. பனிவெண் டிங்கட் சடைவிரித்த பயில்பூங் குஞ்சிப் பயிரவராம்
புனிதர் தம்மைப் போனகமுங் கறியும் படைக்கும் படிபோற்பின்
வனிதை யாருங் கணவருமுன் வணங்கிக் கேட்ப மற்றவர்தாம்
இனிய வன்ன முடன்கறிக ளேல்லா மொக்கப் படைக்க"வென, எஉ

3732. பரிசு விளங்கப் பரிகலமுந் திருத்திப் பாவா டையிலேற்றித்
தெரியும் வண்ணஞ் செஞ்சாலிச் செழும்போ னகமுங் கறியமுதும்
வரிசை யினின்முன் படைத்தெடுத்து மன்னும் பரிக லக்கான்மேல்
விரிவெண் டுகிலின் மிசைவைக்க விமலர் பார்த்தங் கருள்செய்வார்,

3733. "சொன்ன முறையிற் படுத்தபசுத் தொடர்ந்த வுறுப்பெல் லாங்கொண்டு
மன்னு சுவையிற் கறியாக்கி மாண வமைத்தீ ரே?"யென்ன
" அன்ன மனையார் தலையிறைச்சி யமுதுக் காகா தெனக்கழித்தோம்"
என்ன, "வதுவுங் கூடா முண்ப" தென்றா ரிடர்தீர்ப்பார். எச

3729. (இ - ள்) வந்து...திருமனையில் - அவ்வாறு வந்து புகுந்து தமது திருமனையிலே; மனைவியார்தாம்...காட்டி - மனைவியார் தாம் வயிரவ அடியாரை முன்பு வந்து எதிர்கொண்டு சென்று திருவடிகளில் வீழ்ந்து வணங்கி முற்றும் அழகு செய்வித்த அந்த மனையில் மணமுடைய மலர் மாலைகளும் முத்தினாலியன்ற மாலைகளும் தொங்கவைத்து மணமுடைய மலர்கள் பரப்பிய இருக்கையாகிய ஆசனத்தை அமைத்துக் காட்டி (அமரச் செய்து); கமழ் நீர்க் கரகம் எடுத்து ஏந்த - மணம் கமழும் நீர் நிறைந்த கரகத்தினை எடுத்து ஏந்தி நின்று நீர்வார்க்க; எo

3730. (இ - ள்) தூய...விளக்கி - அவ்வாறு மனைவியார் வார்த்த தூய நீரினால் சிறுத்தொண்டர் சோதியாருடைய திருவடிகளை விளக்கி; ஆய...வீசி - அவ்வாறு விளக்குதலாற் பெறலாகிய தூய தீர்த்தத்தினைத் தங்கள் தலையின்மேல் நிறையத் தெளித்துக் கொண்டு, இன்பம் பொருந்திய மனையின் எப்பக்கத்தினும் வீசி இறைத்து; விரை...செய்து - மணமுடைய மெல்லிய மலர்களால் அருச்சித்துச் சந்தனக் கலவை சாத்திப் பொருந்தியவாறு தூப தீபங் காட்டி, இவை முதலாகிய பூசனை விதிகளை எல்லாம் செய்து; இறைஞ்சுவார் - வணங்குவாராகி, எக

3731. (இ - ள்) பனி வெண்...புனிதர் தம்மை - குளிர்ந்த வெண்பிறையினைச் சூடிய சடையினையே குஞ்சியாக ஆக்கி விரித்த அழகிய விளக்கமுடைய பூச்சூடிய தலைமயிரினை உடைய வயிரவராம் தூயபெருமானை; போனகமும்...படி - சோற்றினையும் கறிவகைகளையும் படைக்கும் படியினை; பொற்பின்...கேட்ப - அழகிய மாதராரும் கணவனாரும் வணங்கிக் (இன்னவாறென்றருள் செய்யவேண்டுமென்று) கேட்க; மற்றவர்தாம்...படைக்க என - மற்று அவர்தாம் இனிய சோறுடனே கறிகளையும் எல்லாவற்றையும் ஒரு சேரவே படைப்பீராக என்று கூற, எஉ

3732. (இ - ள்) பரிசு...ஏற்றி - பண்புவிளங்கும்படி உண்கலத்தை விளக்கி அதனைப் பாவாடையின் மேல் வைத்து; தெரியும்...எடுத்து - அமுதுவகைகள் வெவ்வேறாகத் தெரியும்படி செந்நெல்லரிசியாலாகிய செழுஞ் சோற்றினையும் கறியமுது வகைகளையும் வரிசையாக முன்னே படைத்து அப்பரிகலத்தினை எடுத்து; மன்னும்...வைக்க - நிலையானமுக்காலியின்மேல் விரித்த வெண்மையான ஆடையின் மீது வைக்க; விமலர்...அருள்செய்வார் - விமலராகிய இறைவர் பார்த்து அப்போது அருள் செய்வாராகி, எங

3733. (இ - ள்) சொன்ன முறையில்...அமைத்தீரே? என்ன - யாம் சொன்ன முறையிலே படுத்த பசுவினது தொடர்ந்த உறுப்புக்கள் எல்லாவற்றினையும் கொண்டு பொருந்தும் சுவைபெறச் சிறப்பாக அமைத்தீர்களோ? என்று வினவ; அன்னம் அனையார்...என்ன - அன்னம் போன்ற அம்மையார் தலையிறைச்சி திருவமுதுக்கு ஆகாது என்று எண்ணி அதனை நீக்கினோம் என்று கூற; இடர் தீர்ப்பார் - அடியார்களின் இடர்களை எல்லாம் தீர்ப்பவராகிய இறைவர்; அதுவும்...என்றார் - அதனையும் நாம் உண்பது ஆம் என்றருளினார். எச

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு வினை முடிபுகொண் டுரைக்கின்றன.

3729. (வி - ரை) புகுந்து - மனைவியார் - எடுத்தேந்தத் (3729) - தூய நீரால் - விளக்கி - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

மனைவியார்...காட்டி - என்பன வெல்லாம் இடைப் பிறவாலாய் இடையில் மனைவியார் செய்த செயல்களைக் குறித்தன ; இடையில் என்பது நாயனார் - இறைவர் தமைக்கொண்டுவருதலுக்கும், அவர்கழல் நீரால் விளக்குதற்கும் இடையில் ;

முந்த - அவர் மனையுட் புகுத முன்பு ; திருமுன்பு என்றலுமாம்.

முழுதும் அழகு செய்த மனை - முன்னமே எஞ்ஞான்றும் அழகாக அணி செய்யப்பட்ட மனை ; அழகு செய்தல் - ஏனையோர் போலத் தம் பொருட்டன்றி, நாடோறும் அமுதூட்டும் அடியார்களுக் கேற்கும் பொருட்டு.

முழுதும் - எல்லாவகையாலும், எல்லாக்காலத்திலும்.

கந்த மலர்மாலை...நாற்றி - இவை இப்போது வயிரவர் வருகையின் பொருட்டுச் செய்யப்பெற்றன. மணமுடைய பூமாலைகளும் முத்து மாலைகளும் தொங்க வைத்தல் அணிசெய்வகை ; நாற்றி - தொங்க வைத்து.

கந்த மலர் அடுத்த தவிசு ஆசனம் காட்டி - என்க. தவிசினை அமர்தற்குரிய ஆசனமாகக் காட்டி ; தவிசு - இருக்கை ; ஆசனம் காட்டுதல் - ஆசனம் - மூர்த்தி மூர்த்திமான் என்ற பூசையின் அங்கம் மூன்றனுள் ஆசனங் கற்பித்தல் குறித்தது. சிவபூசை ஆகம விதிகள் பார்க்க. இங்கு மூர்த்தி, வயிரவ அடியார் திருமேனியும், மூர்த்திமான் அவ்அடியார் திருவேடத்தினுள் எழுந்தருளிப் பூசை ஏற்றுக்கொள்ளும் சிவபெருமானுமாகப் பாவிக்கப் படுவர்.

கரகம் - சிறிய மூக்குள்ள பாத்திரம் ; குண்டிகை ; சிறிய மூக்கு, நீர், இடையறாது வார்த்தற்குதவுவது. நீர்க்கலம் என்றலுமாம். கமழ் - மலர் - குங்குமப்பூ முதலிய வாசனைப் பண்டங்களிடும் மாபு குறித்தது.

எடுத்து ஏந்த - ஏந்த - என்றது ஈண்டு ஏந்தி நீர்வார்க்க என்ற பொருளில் வந்தது. அடியார்களின் அடி விளக்க மனைவியார் நீர்வார்க்கக் கணவனார் அடியார்பாதம் கழுவுதல் பற்றிக் கலிக்கம்ப நாயனார் புராண வரலாறு பார்க்க.

ஏந்தி வார்க்க அத்தூய நீரால் - என்று மேற்பாட்டுடன் தொடர்ந்து கூட்டியுரைத்துக் கொள்க. 70

3730. (வி - ரை) கழல் விளக்குதல் - பாத்தியம் எனப்படும் பூசைஅங்கம் ;

ஆய - அவ்வாறு கழல் விளக்கியதனால் ஆகிய - பெறப்பட்ட. ஆர - நிறைய - மனம் அமைதி பெறும் அளவும்.

இன்பம் மேய இல்லம்—சிவதருமங்களாகிய அடியார் பூசனைக்கும் அரன்பூசைக்கும் பயன்படுவதாயும், அதற்குரிய இல்வாழ்க்கைக்கு இருப்பிடமாயும் நின்றமையால் இன்பம் பொருந்திய மனை என்பதாம் ; ஏனையோர் எண்ணுவது போலப் பாச பந்தப் போகப் பொருள்கள் நிறைந்த உலகஇன்பங்கள் பொருந்துவது என்பதன்று.

இல்லம் எம்மருங்கும் வீசுதல் - மனையெங்கும் நீண்ட நற்பயன் தந்து விளங்கும் பொருட்டு ; இவைபற்றி அப்பூதி நாயனார் புராணம் (1802 - 1803), இளையான்குடி மாறநாயனார் புராணம் (443) முதலியவை பார்க்க.

விரை...பூசனை செய்து - இவை பூசை செய்யும்முறை ; அருச்சித்தல் - மலர் சாத்தி அலங்கரித்தல், புகைத்தூபம் காட்டுதல், விளக்கேந்துதல் முதலியன. "விதிமுறை தீபமேந்தி" (851) ; "நறைமலி தருமள றொடுமுகை நகுமலர் புகை மிகு வளரொளி, நிறைபுனல் கொடுதனை நினைவொடு நியதமும் வழிபடும் அடியவர்" (பிள் - நட்டபாடை - திருவிரா - சிவபுரம் - 4). விரை - விரை எனப்படும் என்றலு

மாம். "முல்லையிரு வாட்சிபிச்சி முகைநெகிழ்மல் லிகைபன்னீர், நல்லமருக் கொழுந்துவெட்டி வேரிவைநற் சுகந்தங்கள், சொல்லுமிவை யோரேழும்" (பேரூர்ப்புரா - மருதவரை. 35).

இறைஞ்சுவார் - வணங்கிக் கேட்ப - என வரும்பாட்டுடன் முடிக்க நின்ற முற்றெச்சம். 71

3731. (வி - ரை) பனி - குளிர்ந்த ; பனித்தல் - நடுங்குதல் - அசைதல் - எனக் கொண்டு முனிசாபத்தால் நேர்ந்த குறை நோய்க் கஞ்சி நடுங்கி வந்த என்றலுமாம். "பனி வெண்டிங்கள்" (3744) என மேலும் கூறுதல் காண்க. சரண்புக்க மதியினைத் தலையிற்சூடி உயிரளித்த இவ்வருட் பெருமையினையும் எளிமையினையும் விளக்கத்தையும் இங்குக் காணக் குறித்தல் கருத்து.

சடைவிரித்த பயில்பூங் துஞ்சி - சடையினையே இவ்வாறு மாற்றி விரித்து அழகுபடுத்திய தலைமயிர் ; "சடையை வனப்பெய்த...படர்துஞ்சின் கருங்குஞ்சி கொந்தளமாகப் பரப்பி" (3685) என இதனை முன் விரித்தனர் ; விரித்தல் - பரப்பியமைத்தல்.

புனிதர் - "புனிதர் முன்பு" (3726) ; "புனிதர் தமக்கு" (3720).

படைக்கும்படி - படைக்கின்ற படியினை; திறத்தினை, விதத்தை; படி - இயல்புதன்மை ; இரண்டனுருபு தொக்கது. படி(யினைக்) - கேட்ப என்க.

கேட்ப - அறிவித்தருளும்படி கேட்க - அமுது அமைக்கும் வகையினை அவரே சொல்ல அறிந்தாராதலின், படைத்தலிற் பிழை நேராவண்ணம் அதனையும் அவரே சொல்ல அறிந்து அவ்வாறு செய்தல் வேண்டுமென்பது. உலகியலி விதுவரை காண இயலாத நிலையாதலானும் அறியவேண்டியதாயிற்று.

வனிதையார் - அழகுடைய மாதரார் ; திருவெண்காட்டு நங்கையார்.

இனிய அன்னம் - "செஞ்சாலிச் செழும் போனகம்" (3732) என்று மேற் கூறுதல் காண்க. ஒக்க - ஒருசேர.

இனிய வண்ணமுடன்—என்பதும் பாடம். 72

3732. (வி - ரை) பரிசு விளங்க - இவை யிவை இன்ன இன்ன என்ற தன்மை விளங்கும்படி. விளங்குதல் - அவற்றைச் சுவைக்கு ஏற்றபடி இடையிடை கூட்டி உண்பதற்கு உதவுதல்.

பரிகலம் - உண்கலம் ; திருத்துதல் - நன்கு கழுவுதலும் திருந்த அமைத்தலும்.

பாவாடையில் ஏற்றி - பாவாடை - பாவிய - பரப்பிய - ஆடையின் (சீலையில்) மேல்வைத்தல் ; பாவிய நிலையில் அமைத்தலுமாம்.

முன் - பாவாடையில் ஏற்றுதலின் முன்

படைத்து - பரிகலத்தில் வரிசையாகப் படைத்து.

பரிகலக் கால் - பரிகலம் வைத்துண்ணும் ஆசனம் ; மூன்று காலுடைய ஆசனம். முக்காலியில் ஏற்றி வைத்துண்பது வழக்கு. இஃது இன்றும் மக்களின் சிறப்புக்களுள் வழங்குவது.

பரிகலக்கான் மேல் — விரி வெண்துகிலின் மிசை — பரிகலத்திற் வரிசைபெற முன் வைத்துஎடுத்து ஏற்றி என்று கூட்டுக. இந்நாளின் நாகரிகம் படைத்தோர் என்போர் நாற்காலியின்மேல் வெண்டுகில் விரித்து அதில் எச்சிற் பரிகலங்களில் உணவுப் பண்டங்களை வைத்து அமைத்துண்ணும் வழக்கு இதன் வழிவழிப்போலியாய் வந்த எச்ச வழக்குப் போலும்.

விமலர் - புனிதர் என்றதற் கேற்ப உரைத்தது நயம்.

அருள் செய்வார் - முற்றெச்சம். அருளிச் செய்வாராகி - என்ன - என வரும் பாட்டுடன் கூட்டி உரைக்க. 73

3733. (வி - ரை) சொன்ன முறையிற் படுத்த பசு - சொன்ன - முன் உரைத்த பசுவும், அதனைப் படுத்தலும், படுத்தல் செய்யும் முறையும். (3707 - 3709 - 3710.)

தொடர்ந்த உறுப்பெல்லாம் - முடிமுதல் அடிவரை எலும்பினைப் பற்றி நின்ற எல்லா உறுப்புக்களின் இறைச்சி மூளை முதலிய எல்லாம்.

சொன்ன...எல்லாம் - சொன்ன - சொல்லும் நிலை என் பாலும், ஆக்கி அமைத் தீரே? - ஆக்கி யமைக்கும் நிலையும் கடமையும் உங்கள் பாலும் நின்றன என்பதாம். உலகுய்ய மறைக ளாகமம் வகுத்தல் இறைவர் கருணைச் செயல்; அவற்றின் வழி நின்று அவரைச் சார்ந்துய்தல் உயிர்களின் கடமைச் செயல் என்ற குறிப்பும் காண்க.

அமைத்தீரே? - ஏகாரம் வினா; அமைத்தீர்களோ? என்க. உலகர் எவர்க் கும் அரியவாறு அமைத்து முடித்தீர்களே! என்று தாம் அறிந்து கொண்ட நிலை யினை விளக்கம்படச் சிறப்புக் கூறிய உடன்பாட்டுத் தேற்றேகாரப் குறிப்பும் காண்க.

அன்னம் அனையார் - திருவெண்காட்டு நங்கையார்; இருவரையும் நோக்கி வினா எழுந்ததாயினும், அமுது படைத்தல் வினாவிய பொருளாதலானும், அதனை உரைத் தல் அம்மையார் கடனாதலானும் அவ் விருவருள் அவர் விடை பகர்ந்தனர் என்க.

தலை...கழித்தோம் - 3724 பார்க்க.

அதுவும் கூட நாம் உண்பது - உம்மை, நீரும் பிறரும் கழித்து ஒதுக்கும் அதுவும் என்று இழிவு சிறப்பும்மை. உண்பது ஆகும் என்க. ஆகும் குறிப்பெச்சம்.

இடர் தீர்ப்பார் - அதனைக் கழித்தமை பற்றி இருவரும் திகைத் தயர நிற்கும் அவ்விடரும் வாராவண்ணம் முன்னமே சந்தனத் தாதியார்பால் நின்று நினைவூட்டி அதனையும் கறியமைத்து வைப்பாராகிய என்றதும் குறிப்பு; இடர் - அடைந்த அடிய வர்களின் பிறவி நோய் என்பது உள்ளுறை. 74

3734. சிந்தை கலங்கிச் சிறுத்தொண்டர் மனையாரோடுந் திகைத்தயரச்
சந்த னத்தா ரெனுந்தாதி யார்தா "மந்தத் தலையிறைச்சி
வந்த தொண்ட ரமுதுசெயும் பொழுது நினைக்க வருமென்றே
முந்த வமைத்தேன் கறியமு"தென் றெடுத்துக் கொடுக்க முகமலர்ந்தார்.

(இ - ள்) சிந்தை...திகைத்தயர - மனங் கலங்கிச் சிறுத்தொண்டர் மனைவியா ருடனே மயங்கி வருந்த; சந்தனத்தாரெனும் தாதியார் தாம் - சந்தனத்தார் என் கின்ற தாதியார்; அந்த...கறியமுது என்று - அந்தத் தலையின் இறைச்சியானது அருள் புரிய வந்த திருத்தொண்டர் திருவமுது செய்யும் பொழுது நினைக்க நேரிடும் என்று எண்ணியே (எச்சரிக்கையாக) முன்னமே அதனைக் கறியமுதாக அமைத்துள் ளேன் என்று சொல்லி; எடுத்துக் கொடுக்க முகமலர்ந்தார் - எடுத்துக் கொடுக்கக் கண்டு முகமலர்ந்து மகிழ்ந்தார்கள்.

(வி - ரை) சிந்தை...அயர - வயிரவர் சொல்லிய அரிய வினை அத்தனையும் செய்தும் இக்குறையால் திருவமுதூட்டத் தாழ்க்க நேரும் நிலையை எண்ணிக் கலங்கி மயங்கி வருந்தினர்; திகைத்தல் - இனி யாது செய்வ தென்றறியாது மயங்குதல்,

**சந்தனத்தார்...கொடுக்க** - உற்றவிடத் துதவும் ஊன்றுகோல் போலவும், உடுக்கை யிழந்தவன் கை போலவும், வேண்டும்போது அங்கு அந்நேரம் உதவும் நண் பர்களை - ஏவலர்களைப் - பெற்றவர்க்குக் குறைவு வாராது ; ஏவாமே குறிப்பறிந் தும், தாமாகவும் செய்யும்நிலை தொண்டின் அரிய நிலையாம். திருக்குறிப்புத் தொண்ட நாயனார் வரலாறு பார்க்க. " புண்ணியமெய்த் தொண்டனார் குறிப் பறிந்து போற்றுநிலைத், திண்மை." (1189)

**தாதியார்...கொடுக்க** - இவ்வாறு தொண்டர்க் கேவல் குறிப்பறிந்து செய்த திறத்தாலும், சிறுத்தொண்டனாரும் நங்கையாரும் செய்த சிவ புண்ணியங்களில் அவர் கீழ் நின்று பணி செய்த புண்ணியப் பேற்றினாலும், "நின்சீ ரடியார் தஞ்சீ ரடி யார்க், கடிமைபூண்டு நெடுநாட் பழகி, முடலை யாக்கையொடு புடைபட் டொழுகிய வர், காற்றலை யேவலென் னுய்த்தலை யேற்றுக், கண்டது காணி னல்லதொன், றுண்டோ மற்றெனக் குள்ளது பிறிதே " என்று பட்டினத்தடிகள் இந்நிலையினையே விரும்பி வேண்டுவதும் காண்க. ' தொண்டர்தொண் டர்க்குத் தொழும்பாய்த் திரியத் தொடங்கினனே " (கோயினான் - 38) ; " தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே " (அரசு - தேவா) ; " அடியார்க்கு மடியேன் " என்பது முதலிய திருவாக்குக்களின் கருத்தும் காண்க.

இப் பெருமைபற்றி யன்றே நாயனாரும் நங்கையாரும் நீடு மகனாரும் பெற்ற அப்பேற்றினையே இத் தாதியாரும் உடனே பெற்று, என்றும் பிரியாதே யிருக்கத் திருக்கயிலைக்கு உடன்செல்லும் பேறு பெற்றனர். இஃது இவ்வுண்மைக்கு இலக்கிய மாய் விளங்குதல் காண்க.

நாணத்தலை யிறைச்சி—என்பதும் பாடம். 75

3735. வாங்கி மகிழ்ந்து படைத்ததற்பின் வணங்குஞ் சிறுத்தொண் டரை
" ஈங்கு நமக்குத் தனியுண்ண வொண்ணு; நீச னடியாரிப் [நோக்கி
பாங்கு நின்றார் தமைக்கொணர்வீ" ரென்று பாமர் பணித்தருள
ஏங்கிக் "கெட்டே னமுதுசெய விடையூ றிதுவோ?"வெனநினைவார்,

3736. அகத்தின் புறத்துப் போயருளா லெங்குங் காணு ரழிந்தணைந்து
முகத்தில் வாட்ட மிகப்பெருகப் பணிந்து முதல்வர்க் குரைசெய்வார்
" இகத்தும் பரத்து மினியாரைக் காணேன் ; யானுந் திருநீறு
சகத்தி லிடுவார் தமைக்கண்டே யிடுவே"னென்று தாழ்ந்திறைஞ்ச,

3737. உம்மைப் போல நீறிட்டா ருளரோ? வுண்பீர் நீ"ரென்று
செம்மைக் கற்பிற் றிருவெண்காட் டம்மை தம்மைக் "கலந்திருத்தி
வெம்மை யிறைச்சி சோறதனின் மீட்டும் படையு" மெனப்படைத்தார்;
தம்மை யூட்ட வேண்டியவ ருண்ணப் புகலுந் தடுத்தருளி, ௭௮

3738. "ஆறு திங்கள் கழித்துண்போ முண்ணு மளவுந் தாழாது
சோறு நாளு முண்பீர்முன் னுண்ப தென்?நம் முடன்றுய்ப்ப
மாறின் மகவு பெற்றீரேன் மைந்தன் றன்னை யழையு" மென
ஈறு முதலு மில்லாதார்க் "கிப்போ துதவா னவ " னென்றார். ௭௯

3735. (இ - ள்) வாங்கி...நோக்கி - சந்தனத்தார் கொடுத்த தலையிறைச்சியை வாங்கி மகிழ்ந்து படைத்ததன் பின்னே, வணங்கிநின்ற சிறுத்தொண்டரை நோக்கி; ஈங்கு...பணித்தருள - இப்போது தனித்து உண்ண நமக்கு இயலாது ; சிவபெருமானடியார்கள் இப்பக்கத்தில் யாரேனும் இருக்கக் கூடியவர்களை அழைத்து வருவீர் என்று வயிரவர் கட்டளையிட ; ஏங்கி...நினைவார் - மனம் வருந்திக், கெட்டேன் !; இவர் திருவமுது செய்வதற்கு இதுவோ இடையூறாய் வருவது ? என்று நினைவாராகி, ௭சு

3736. (இ - ள்) அகத்தின்...உரை செய்வார் - மனையின்வெளியே போய்த் தேடியும் திருவருட் செயலால் எங்கும் அடியவரைக் காணாது முகத்திலே மிகவும் வாட்டம் பெருக வந்து முதல்வனாருக்கு உரை செய்வாராய் ; இகத்தும்...தாழ்ந்திறைஞ்ச-இகத்தினிலும் பரத்தினிலும் இனியவர்களாகிய சிவனடியார்களைத் தேடியும் கண்டிலேன் ; நான் அறியேனாயினும் உலகிலே திருநீறிடுவார்களைப் பார்த்து நானும் திருநீற்றினை இடுவேன் என்று கூறித் தாழ்ந்து வணங்க, ௭௭

3737. (இ - ள்) உம்மைப்போல...என்று - (அதுகேட்ட வயிரவர்) உம்மைப் போலத் திருநீற்றினைச் சிறக்க இட்ட அடியவர்களும் உண்டோ? நீரே என்னுடனிருந்து உண்பீராக என்று கூறி; செம்மை...என - செம்மை பொருந்திய கற்பினை உடைய திருவெண்காட்டு அம்மையாரை நோக்கிப் பரிகலந் திருத்தி விரும்பத்தக்க இறைச்சியும் சோறும் ஆகிய இவற்றின் ஏனைப் பகுதியை இவர்க்கும் படைப்பீராக என்று இறைவர் கட்டளையிட; படைத்தார்-அவரும் அவ்வாறே படைத்தனர் ; தம்மை...தடுத்தருளி - தம்மை உண்பிக்கவேண்டி அவர் விரைந்து உண்ணத்தொடங்குதலும் தடுத்தருளி, ௭அ

3738. (இ - ள்) ஆறு...அழையுமென - ஆறுமாத காலம் இடைகழிய நாம் ஒருமுறை உண்போம் ; நீர் ஒவ்வொரு நாளும் சோறு உண்பீர் ; அப்படியிருந்தும் நாம் உண்ணுமுன் நீர் உண்ணப்புகுந்த தென்னை ?; நம்முடனே இருந்து உண்பதற்கு ஒப்பற்ற மகனைப் பெற்றீரானால் அம்மகனை அழையும் என்று வயிரவர் கூற ; ஈறும்...என்றும் - அவ்வாறு கூறிய அந்தமுமாதியும் இல்லாத இறைவருக்கு அவன்இப்போது உதவமாட்டான் என்று (தொண்டனார்) விடை கூறினர். ௭௯

இந்த நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

3735. (வி - ரை) வாங்கி - தாதியார் எடுத்துக் கொடுக்க - வாங்கி என முன்பாட்டுடன் தொடர்ந்து கொள்க : கொடுத்தலும் வாங்குதலும் இடையீடின்றி நிகழ்ந்த இருசெயல்கள் ; இவற்றினிடையே முகமலர்வார் என்றது மகிழ்ச்சியினை வைத்து முடித்துக்கூறி இங்குத் தொடர்ந்து அன்பின் செறிவினை உணர்த்தும் கவி நயம்.

படைத்ததன் பின் - அந்தத் தலையிறைச்சிக் கறியமுதினைப் பரிகலத்தினிற் படைத்தபின் என்று வருவித்துரைத்துக் கொள்க.

வணங்கும் - அமுது உண்ணவேண்டும் என்று விண்ணப்பிக்கும் நிலையினை உட்கொண்டு வணங்கும்.

ஈண்டு இவ்வாறு விரித்துக்கொள்ளும் வகையாற் பெருகுத்துக் கூறுதல் சிறுத்தொண்டரின் மனத்தினுட்கொண்ட அவரை ஊட்டுந் தீவிரம் குறித்தது.

நோக்கி - ஓர் குறிப்பினை உட்கொண்டு ஊன்றிப் பார்த்து என்பது.

தனி உண்ண ஒண்ணாது ; ஈசன்...கோணர்வீர் - *தனிமையில் உண்ணலாகாது என்பது உலகியல் அறநூல் விதியும் ஆம். உண்ணுங்கால் சிவன் அடியாருடன் உண்ணுதல் வேண்டும் என்பது வேத சிவாகமங்களாகிய பதி புண்ணியப் பெருநூல் களின் விதி. "கண்ணுதற் கன்பரோடும்" (851) என்றது முதலியவை பார்க்க.*

இப்பாங்கு நின்றார்தமை - *அணிமையில் உள்ளார் யாரேனும் ஒருவரை என்றது தொண்டரது மனவிளைவினைத் தெரிந்துரைப்பார் போன்று விரைந்து பெறு தற் குறிப்புணர்த்தும் வகையாற் கூறியது. அன்றியும் "எவரேனும் தாமாக" (தேவா-அரசு) என்ற குறிப்புமாம்.* இப்பாங்கு - *நாயனாரையே குறிப்பா லுணர்த்து தலும் காண்க.*

ஏங்கி...நினைவார் - *அன்று முன்பு தேடியும் காணா தலைந்துள்ளா ராதலானும், அப்போது பொழுது மேலுங் கழிந்துள்ள நேரமாதலானும் இனிக் கிடைப்பதரிது ஆதலின் இவர் உண்பதும் கூடாதாகிவிடும் என்று நினைந்தமையால் மனத்துள் ஏக்கமும், அதுபற்றிய "கெட்டேன்!" என்று போந்த அவலக் குறிப்பு மொழியும் எழுந்தன. "காத லாலே தேடியுமுன் காணேன்" (3704)*

தனியுண்ணுமை - "*சாட்சி போசனம்*" *என்பது வடமொழி வழக்கு.* 76

3536. (வி - ரை) அகத்தின் புறத்து - அகத்துள்ளே புறம் - *என்ற குறிப் புப் படுவது சொன்னயம் ; மனத்துள் அடியார் காணப்பெறார் என்று மனமாழ்கி னும் அக்கருத்துடனே நின்றுபடாது புறத்துப் போயினர் என்ற குறிப்பும் காண்க.*

அருளால் - *பரமனது ஆணைப்படியே ;* அருள் - ஆணை - *கட்டளை ;* அருளாற் *போய் என்று கூட்டுக ; அடியார்கள் காணக்கிடையார் என்று துணிந்துள்ளாராயி னும், பரமர் ஏவினபடி செய்தல் வேண்டும் என்ற கடப்பாட்டினாலே சென்றனர் என்பதாம். இவ்வாறே கறியாக்கிய மகன் வருவானென்பது கூடாத காரியமென் றுணர்ந்தும், பின்னர்* " அழையும் " (3739) *என்ற ஆணைக்குட்பட்டு* " அருளாற்" *புறம் போய் அழைத்த செயலும் காண்க.*

அருளாற் - காணார் - *என்று கூட்டி, அன்று முன்னரும், அப்போதும் அடியார் காணாராயினமையும் திருவருளால் நிகழ்ந்தன என்ற குறிப்புப்படக் கூட்டி யுரைக்க வும் நின்றது ; என்றும் வரத்தக்க அடியார்கள் காணமையும், கறியாக்கப் பட்டமை யால் மீண்டுவரத் தகாத மகன் வரக் காணப்படுவதுவும் ஒக்கவே திருவருளால் நிகழ்ந்தன என்ற அருட்பெருமை உணர நிற்பதும் காண்க.*

அழிந்து...உரை செய்வார் - *அடியாரை ஊட்டப்பெறாத நிலைபற்றி நேர்ந்த மனவருத்தத்தின் செறிவு.*

இகத்தும் பரத்தும் இனியார் - *சிவனடியார்கள் ; குரு லிங்க சங்கமம் என்ற இறைவரது மூவகைத் திருமேனிகளுள்ளே சங்கமத்தி னியல்பும், சிவனடியார் களின் வழிபாட்டால் வரும் உபகாரமும் சுருக்கி வடித்தெடுத்துக் காட்டப்பட்ட நயம் கண்டு கொள்க ; இதனை ஈண்டுப் பெரிய சிறுத்தொண்டரது திருவாக்கில் வைத்துணர்த்திய சிறப்பும் தகுதியும் காணத்தக்கது ;* இகத்து - இனிமையாவது *"தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்து" (போதம் - 12. வெண்பா) என்றபடி, காணக்கிடையாத இறைவனைக் காணும்படி காட்டிநிற்றலானும்,* பரத்தின் இனிமை *"தன்னுணரத் தன்னுள் இருத்தலால்" என்றபடி அவர்களது சற் பாவனையான திருவுள்ளக்கிடையாற் பெறும் பயனும் பெறப்படும்.* இகத்தும் பரத்தும் - *உம்மை எண்ணும்மை.*

யானும்...இடுவேன் - *திருநீறிடுதல் அடியாரிலக்கணம். "நீறிடுவார் அடியார்" (திருமந். 7 - 159) ; "எவரேனுந் தாமாக விலாடத் திட்ட திருநீறுஞ் சாதனமுங்*

கண்டா - ளுள்கி " (தேவா - அரசு) என்றபடி அடியேனும் திருநீறிடுவே னுதலால் அடியேனை உடனுண்பதற்கு ஏற்றுக்கொள்ளலாமோ? என்ற குறிப்புடன் விண்ணப் பித்தவாறு; பரமர் பணித்தருளிய "ஈசன் அடியா"ருள் (3735) ஒருவராகத் தம்மை எண்ணி வைத்துக்கொள்ளச் சிறுத்தொண்டருக்கு மனமிசையாமல், இவ்வாறு தகுதி யற்றவனுயினும் திருநீறிடுதலால் அடியாருள் ஒருவராகக் கொள்ளத்தகும் என்று கூறிய எளிமை காண்க. "நீரோ பெரிய சிறுத்தொண்டர்?" (3703) எனக் கேட்ட போது "பூசிசா தனத்தவர்முன் போற்றப் போதே னுயிடினும்" (3704) என் றுரைத்தமை இங்கு நினைவு கூர்தற்பாலது. நாயனாரது திருநீற்றின் அன்பு பற்றிப் "பொடி நுகரும் சிறுத்தொண்டன்" "வெந்தநீ றணிமார்பன் சிறுத்தொண்டன்" என்று ஆளுடைய பிள்ளையார் தாமே கண்டு சிறப்பித்தமையும் காண்க. திருநீறே அடியாராந் தன்மைக்கு அடையாளம் எனக் கொள்வது சைவத்திறத்தில் உயர்ந் தோர் மரபு; மெய்ப்பொருள் நாயனார் - ஏனாதிநாத நாயனார் வரலாறுகள் காண்க. "வெண்டிருநீற் றின்பொலிவு மேற்கண்டேன்; வேறினியென்?, அண்டர் பிரான் சீரடியா ராயினர்"; (645); "திருநீற்று நெறி" என்பனவும் காண்க. யானும் - உம்மை இழிவு சிறப்பு.

தாழ்ந்திறைஞ்ச - உடன்உண்ணும் அடியாராய் ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று விண்ணப்பிக்கும் குறிப்புடன் வணங்க.

அகத்தும் புறத்தும்—என்பதும் பாடம். 77

3737. (வி - ரை) உம்மைப்போல நீறிட்டார் உளரோ? - சிறுத்தொண்டர் திரு நீற்றினைப் பேணும் சிறப்பினை இறைவர் திருவாக்கினுற் பாராட்டி எடுத்துக்காட்டிய படி; "பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்க்கு அருள்செய்யும் பொருட்டாக" (தேவா) என்று ஆளுடைய பிள்ளையார் பாராட்டிய திறமும் இங்கு நினைவு கூர்தற்பாலது.

நீர் உண்பீர் - என்க. உடனிருந்து உண்பீர் என்றபடி.

செம்மை - செம்மைதரும் தன்மை; செம்மையாவது " திருநின்ற செம்மையே செம்மை " என்றபடி சிவத்தன்மையினில் விளங்கும் சிறப்பு.

அம்மை தம்மை...என - அம்மையாரை நோக்கி இறைவர் பணித்தருள.

படைத்தார் - அவரும் அவ்வாறே அனைத்தையும் திருந்தப் படைத்தார்; விரைவு பற்றி ஒரு சொல்லாற் சுருங்க உரைத்தது கவிநயம்.

தம்மை ஊட்ட வேண்டி அவர் உண்ணப் புகலும் - இறைவர் உண்ணத் தொடங்கு முன்பே அவர் உண்ணப் புகுந்ததன் கருத்தினை ஆசிரியர் எடுத்துக்காட் டியவாறு. இறைவர் தாமும், புனைவாக வாயினும், சிறுத்தொண்டர்பால் குற்றமாக ஒன்றைச் சொல்லக் கேட்கப் பொறு நிலைமையில், ஆசிரியர், எச்சரிக்கையாக இக் கருத்தினைக் கூற முற்படுகின்ற தெய்வக் கவிநலம் கண்டுகொள்க; தாம் முன் உண்ணப்புக்க நிலையின் காரணத்தைச் சிறுத்தொண்டர் பின் உரைப்பதில்லை; ஆதலின் அது சொல்லப்படாமலும், தாம் காட்டாவிடில் உலகம் காணுமலும் போய் விடு மாதலின் எடுத்துக்காட்டிய படியுமாம்.

தம்மை ஊட்டவேண்டி - புகலும் - உள்ளத்தி னுள்ளிருக்கும் கள்வர் இதனை உணர்ந்தாராயினும் இவ்வாறு மாறுகூறுவார் என்றும், ஆயினும், அது "தடுத்தருளி" என்றவாறு, பழியாகாது பின்வரும் அருளிப் பாட்டுக் கேதுவாவது என்றும் உணர்த் திய நயமும் கண்டுகொள்க.

புகலும் - தொடங்குதலும்; முன் உண்ணப்புகுதல் இறைவரை ஊட்டுதலில் இருந்த ஆர்வத்தின் விரைவு குறித்தது. 78

3738. (வி - ரை) ஆறு திங்கள் ஒழிந்து உண்போம் - "மூவிருது கழித்தாற் பசு வீழ்த்திட உண்பது; உரிய நாளும் அதற்கு இன்று" (3707) என முன் கூறியது காண்க. இங்கு மீண்டும் அதனையே "ஆறு திங்கள் ஒழிந்து" என்று கூறியது அமுது கொள்ளும் இடைக்காலத்தின் நீட்டிப்பை வற்புறுத்துதற்கு; முன்னர் மூவிருது என்றதும், ஈண்டு அதனையே ஆறுதிங்கள் என்றதும் இக்கருத்து; "சோறு நாளும் உண்பீர்" என்று இடித்து இழித்துக் கூறுதல் போலக் கூறுதலும் இக்கருத்துக் காட்டும் கவிநயம். திங்கள் - மாதம்; திங்கள் - சந்திரனைக் குறிக்கும்; சந்திரன் வளர்வதும் மறைவதும் கூடிய முப்பதுநாட்கூறு எல்லை கண்ட கால அளவுபற்றி முதலில் காலக்கணக்கு இட்டு அறியப்பட்டமையின் திங்கள் என்பது ஒருமாத கால எல்லையைக் குறிக்க வழங்குவதாயிற்று; மாதம் என்பதும் அவ்வாறே யாம்; மதியினைப் பற்றி அளவுகொண்ட காலக்கூறு மாதம் என்பர்; ஒழிந்து - கழிய; ஒழிய என்னும் செயவென் வாய்ப்பாட்டு வினையெச்சம் செய்து என்ற எச்சமாய் வந்தது. நாளும் - ஒவ்வோர் நாளும்; உம்மை முற்றும்மை.

முன் - ஆறுமாதம் உண்ணாது பசித்திருக்கும் நாம் உண்பதற்கு முன் என்பது குறிப்பு.

நம்முடன் துய்ப்ப-நம்முடன் கூட இருந்து அமுதுண்ண; துய்த்தல்-உண்ணுதல், உணவுகொள்ளுதல். மக்களுடன் உண்ணுதல் உலகியல் இன்பமாகிய மரபு பற்றியது.

மாறின் மகவு பெற்றீரேல் மைந்தன் றன்னை அழையும் - மகவு -(பின் மைந்தன் என்பதனால்) ஈண்டு இடநோக்கி ஆண் மகவு குறித்தது. பெற்றீரேல் - பெற்றுள்ளீராகில்.

ஈறும் முதலும் இல்லாதார் - என்றுமுள்ளவர். "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி" (திருவா);

அவன் இப்போது உதவான் - என்க; உண்மைக்கு மாறுபடாமற் கூறியநயமும் திறமும் காண்க. "விளைந்த தன்மை, யாதுமொன் றுரையா ரிப்போ திங்கவ னுதவா னென்றார்" (1814) என்ற அப்பூதியார் புராணமும், ஆண்டுரைத்தவையும் பார்க்க.79

3739. "நாமிங் குண்ப தவன்வந்தா ணுடி யழையு" மெனநம்பர்
தாமங் கருளிச் செயத்தரியார் "தலைவ ரமுது செய்தருள
யாமிங் கென்செய் தாலாகு?" மென்பார், விரைவுற்றெழுந்தருளாற்
பூமென் குழலார் தம்மோடும் புறம்போ யழைக்கப் புகும்பொழுது,

3740. வைய நிகழுஞ் சிறுத்தொண்டர் "மைந்தா வருவா! யெனவழைத்
தைய லாருந் தலைவர்பணி தலைநிற் பாராய்த் தாமழைப்பார் [தார்
"செய்ய மணியே! சீராளா! வாராய்! சிவனா ரடியார்யாம்
உய்யும் வகையா லுடனுண்ண வழைக்கின் றா"ரென் றோலமிட,

3741. பரம ரருளாற் பள்ளியினின் றோடி வருவான் போல்வந்த
தரமில் வனப்பிற் றனிப்புதல்வன் றன்னை யெடுத்துத் தழுவித்தங்
கரமுன் னணைத்துக் கணவனார் கையிற் கொடுப்பக் களிகூர்ந்தார்
"புரமூன்றெரித்தார் திருத்தொண்ட ருண்ணப்பெற்றோ" மெனும்பொலிவால்.

3739. (இ - ள்) நாம் இங்கு... அருளிச் செய - அவன் வந்தால் நாம் இங்கு உண்பதியலும்; ஆதலால் அவன் வருகையினை நாடி அழையுங்கள் என்று இறைவர்

அப்போது அருளிச் செய்யவே; தரியார் - தரிக்கலாற்றாதவராகி; தலைவர்... என்பார் - தலைவராகிய அடியார் திருஅமுது செய்தருள இங்கு நாம் என்ன செய்தால் அது முடியும்? என்று ஏங்குவாராகி; விரைவுற்று...புகும் பொழுது - விரைவாக எழுந்து இறைவரது அருள் ஆணைவழியே நின்று பூ முடித்த மெல்லிய மலர்களைச் சூடிய கூந்தலினை உடைய அம்மையாருடனே மனையின் புறத்தே போய் மகனை வா என்று அழைக்கத் தொடங்கும்போது, அ௦

3740. (இ - ள்) வையம்...அழைத்தார் - உலகிலே புகழ் என்றும் நிலவிய சிறுத்தொண்டர் மைந்தா! வருவாய்! என்று கூவி அழைத்தார்; தலைவர் பணி தலைநிற்பாராய் - தலைவரது ஆணையின்படி அதனைத் தலையாற் றாங்கியே ஒழுகுவாராகி; தையலாரும் தாம் அழைப்பார் - அம்மையார் தாமும் அழைப்பாராய்; செய்ய...என்று ஓலமிட - செம்மையுடைய மணியே! சீராளா! சிவனடியார் நாம் உய்யும்படி உடன் உண்பதற்கு அழைக்கின்றார், வாராய்! என்று அழைத்து ஓலமிடவே, அக

3741. (இ - ள்) பரமர்...புதல்வன்தன்னை - அப்போது இறைவரருளினாலே அழைக்கும் ஒலிகேட்டுப் பள்ளிக்கூடத்தினின்றும் ஓடிவருபவர்போல எதிரே ஓடிவந்த ஒப்பற்ற அழகுடன் விளங்கிய ஒப்பற்ற மகனாரை; எடுத்து...கொடுப்ப - (அம்மையார்) எடுத்துத் தழுவிக்கொண்டு தமது கையால் முன்பு அணைத்துக் கணவனாரது கையிலே கொடுப்ப; புரமூன்று...பொலிவால் - திரிபுரங்களையும் எரித்த இறைவர் திருத்தொண்டர் அமுது உண்ணும் பேறுபெற்றோம் என்ற மகிழ்ச்சியாலாகிய துணிபினாலே; களிகூர்ந்தார் - மிகவும் மகிழ் சிறந்தார். அஉ

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

3739. (வி - ரை) அவன் வந்தால் நாம் இங்கு உண்பது என்க; அவன் வந்த பின்பே நாம் உண்ணக்கடவோம்; இதனால் அவன் வருதல் உறுதி என்று உணர்த்தியது குறிப்பு; நாடி - இக்குறிப்பினை நாடி என்ற குறிப்பும் காண்க. நாடி - என்பதற்குத் தேடி என்று இயைபின்றி உரைத்தனர் முன் உரைகாரர்கள். அது பொருந்தாமை, நாயனார் வேறெங்கும் செல்லாது அகத்தின் புறம் போய் அழைத்த செயலானும் காண்க. தாமே அரிந்து அமைத்தாராதலின் தேடுதல் கருத்தன்றாகி, அழைத்தலே கருத்தும் ஆணையுமா மென்க. தேடல் - உடலின் வினை; நாடல் - உளம் கருவியாக அறிவா லாராய்தல்; "நாடி நான்முகன் நாரண னென்றிவர், தேடியுந்திரிந் துங்காண வல்லரோ?" (தேவா - அரசு) என்புழியும் நாடுதல் இப்பொருட்டாதல் அறிக; ஈண்டு நாடலும் தேடலும் வெவ்வேறு பொருட்கண் வந்தமையும் காண்க.

நம்பர் - நம்பி அடைந்தவர்க்கு அருள்பவர் என்ற குறிப்பு. அவர் சொல்வழியே நம்பி அமைந்து நின்று அழைத்தனர் என்பதாம்.

இங்கு அன்பு வெறியாற் களித்து, அதனில் மயங்கி நின்று தம்மையும் செயலையும் அறியாது செய்தனர் நாயனாரும் மனைவியாரும் என்று முன் (3722) பாட்டிற் கண்டவாறே தொடர்ந்து ஆராய்ச்சி செய்வாரு முண்டு; அவ்வாராய்ச்சிகள் பிழையாதல் முன்னரே ஆண்டு விளக்கப்பட்டது; "தம் கையால் அரிந்த புதல்வனை மீட்டும் அழைக்க எவரே புறப்படுவர்...அவர் சொல்வழியே இருவரும் உழன்றது உறுகரியா மென்க" என்பர் இப்பிழையாராய்ச்சியாளர். முன்னர் அடியார்கள் என்று

காணக்கிடையார் என்று தாம் அறிந்திருந்தும் வயிரவர் " பாங்கு நின்றார் தமைக் கொணர்வீர்" என்ற சொல்வழி நின்று புறத்துப்போய்த் தேடிக் காணாது மீண்டனர் என்பதும் காண்க. (3736) ; அவ்வாறு அடியாரைக் காணாதபோது அவர்க்கு ஈடாக நீறிடும் தன்மைபற்றித் தம்மையே அடியவராக ஏற்றுக்கொள்ள வேண்டினர். அதற்கும் வயிரவர் இசையவும் பெற்றனர். அவ்வாறே ஈண்டும், வயிரவர் சொல்வழி நின்று நடப்பது முதற்கடமை ; அது இயல்வதாமோ ? சரியோ ? பிழையோ ? என்றாராய்தல் ஈண்டுச் சிவநெறி யொழுக்கமுறையும் மரபு மன்று. "ஆசையொடு மரனடியா ரடியாரை யடைந்திட் டவர்கரும முன்கருமமாகச் செய்து கூசிமொழிந் தருள்ஞானக் குறியி னின்று கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே" (சித்தி - 12 - 2) என்பது அணைந்தோர் தன்மை. (சீவன் முத்தரியல்பு) ; இங்கு நாயனாரும் மனைவியாரு மிவ்வியல்பினர். இஃது அன்பு வெறியாலாவது என்று கூறுதல் முழுதும் பிழைபாடு. ஈண்டு அடியார் " நாடி அழையும் " என்ற ஆணை பெற்றனர். அதன்படி அவ்வாறே அழைத்தார்; அவன் இங்கு உதவான் என்றுதாமே முடித்துக்கூறிய மகன் வருவானோ ? என்ற எண்ணம் நாயனார் மனத்துள் எழுதலுக்கு இடமேயில்லை ; அவர் குறிப்பின் வழி நிற்போம். பின்னர் நிகழ்வது எவ்வாறாயினும் திருவருள் வழி நிகழட்டும் என்பதே அவர் மனநிலை. ஆணை வழி நின்ற பின்னை முன் வேறு அடியார் காணாதபோது நிகழ்ந்த முறையே இதற்கும் ஏதேனும் ஒருவழி கிடைத்து அடியார் திருவமுதுண்ணும் பேறு பெறுவோம் என்பதொன்றே நாயனாரும் மனைவியாரும் கருதிச் செயல்கள் செய்தனர் என்பது ஈண்டுத் "தலைவ ரமுது செய்தருள யாம் இங்கு என் செய்தாலாதும் என்பார் " - என்றதனால் இஃது இனிது விளங்குதல் காண்க. தரியார் - புறம்போய் அழைக்க - தரியார் - என்றதனாலும், " தலைவர்பணி தலைநிற் பாராய் " " சிவனாரடியார்... அழைக்கின்றார் " என்றவற்றாலும் இக் கருத்து நன்கு விளங்குதல் காண்க.

அருளால்-இறைவரது அருள் ஆணைவழியே நின்றுபோய் அழைத்தனர் என்பதனாலும் நாயனாரது கருத்து விளங்கும் ; அவ்வாறு அழைத்தலே மகன் வருதற்கு வழியாய் அருள் வெளிப்பட்டு விளையும் தன்மையாம் என்பதும் குறிப்பு.

அழைக்கப் புகும்போழ்து - புகும் அப்பொழுதே அழைத்தார் என வரும்பாட்டுடன் முடிக்க ; தரியாமையும் ஊட்டும் ஆர்வமும் தமது செயலில்லாமையும் பற்றி எழுந்த விரைவுக் குறிப்பு. 80

3740. (வி - ரை) வைய நிகழ்தல் - உலகில் புகழ் என்றும் விளங்குதல்.

மைந்தா வருவாய் - " மைந்தன் தன்னை அழையும் " என்று அடியவர் ஆணையிட்டமையால் மைந்தா என்றழைத்தார். நாயனார் புத்திரவாஞ்சையின் வாசனையினால் இவ்வாறு அழைத்தார் என்றும், அம்மையார் அழைத்த திறத்தில் அவ்வாசனையும் இல்லை என்றும் இங்கும் பிழைபடும் தற்போத முனைந்த ஆராய்ச்சியிற் றலைப்பட்டு அபசாரப் படுவாரு முண்டு ; வயிரவர் உண்ணும் நரப்பசுவைப்பற்றி உரைத்த அப்பொழுதே மகனாரை அவ்வடியவரது உணவுப்பொருள் என்று கொண்டு மகனும் பற்று அறவே ஒழித்தனர் என்பது இதுவரை நிகழ்ச்சிகளால் நன்கு உணரப்படும். " கறியமுதா மென்னு மதனால் - உச்சி மோவார்..."(3710) என்பதும் காண்க ; மகனார் மீள ஓடிவரக் காணும் நிலையில், இத்தன்மை மாறி, அம்மையார் அவரை எடுத்துத் தழுவுதலும் நாயனார் மகிழ்தலும் அடியவர் உமது மகனை அழையும் என்று ஆணை தந்தருளிய வாற்றால் அவரால் மீளத் தரப்பட்ட தமது மைந்தனாகக் காணும் வேறுபாடு பற்றியாகும் என்பதும் ஓர்க.

தையலாரும் - உம்மை கணவனார் அழைத்ததே யன்றித் தையலாரும் என இறந்தது தழுவிய எச்சவும்மை.

தலைவர் பணி தலைநிற்பாராயத் தாம் அழைப்ப - தலைவர் பணித்தபடி செய்யும் கடப்பாடு பற்றி அழைத்ததே யன்றிப் பிள்ளை வருவான் என்ற எண்ணத்தாலன்று என்பது நன்கு விளங்குதல் காண்க; தலைநிற்றல் - வழியே அமைந்து ஒழுகுதல். உறுதியாய் நிற்றல்;

சிவனார்...அழைக்கின்றார் - நான் அழைக்கவில்லை; அடியார் அழைக்கின்றார். அவருக்காக வருவாய் என்பது குறிப்பு.

யாம் உய்யும் வகையால் உடனுண்ண - யாம் உய்யும் வகை என்று சீராள தேவரையும் உள்ளிட்ட உளப்பாட்டுத் தன்மைப்பன்மை உண்மையின் குறிப்பு; "எங் குடிமுழு துய்யக் கொள்வீர்" (1812) என்று இவ்வாறே அப்பூதியார் திரு வாக்கில் வந்தமையும் ஆண்டுரைத்தவையும் காண்க.

சிவனாரடியார் - அடியார் வேடத்தில் வந்த சிவனார் என்பது குறிப்பு.

உடனுண்ண - உடனே கூடச் சிவலோகச் சார்வாகிய இன்பத்தை நாம் எல்லா ரும் கூடி அனுபவிக்கும் பொருட்டு என்ற சரிதவிளைவுக் குறிப்பும் காண்க.

அழைப்பார் - ஓலமிட - அழைத்தல் மட்டுமன்றி மணியே - சீராளா - அழைக் கின்றார் - வாராய் என்று உரத்துப் பலவாறும் ஓலமிட்டனர் என்பது அவரை ஊட் டும் ஆர்வத்தின் மிகுதி குறித்தது. 81

3741. (வி - ரை) பரமர் அருளால் - பரமர் - அப்பாற்பட்டவர் - கடந்த வர்; விளையும் இச்செயலின் காரணமாகும் முழுமுதற் றன்மைக் குறிப்பு.

தரமில் வனப்பிற் றனிப்புதல்வன் - எஞ்சலில்லாக் கோலத்துடன் மறைந்து இறைவர் பாலாயின அவர், இறைவரால் மீளத் தரப்பட்ட வனப்புடன் வருகின்று ராதலின் அவ்வனப்புத் தரங்கடந்ததாய்த் தெய்வத்தன்மையுடன் விளங்கிற்று என்பது; "அதிமதுரக் கனி" (1741) என்றவிடத் துரைத்தவை பார்க்க.

எடுத்தல் - தழுவுதல் - அணைத்தல் - கொடுத்தல் - என்ற இவை இப்போது இறைவராற் றரப்பட்ட தமது மைந்தனாராந் தன்மையும், அவருடன் உண்ணவரும் தமது மைந்தராந் தன்மையும் பற்றி நிகழ்ந்தன.

பொலிவால் களிகூர்ந்நார் - மகனை மீளப் பெற்றதன் பொருட்டு அன்றி, அவன் வருகையினால் அடியார் அமுதுசெய்யும் பேறு பெற்றோ மென்ற காரணத் தால் மகிழ்ந்தனர் என்று சிறுத்தொண்ட நாயனாரது பெரிய மனநிலை பற்றி அறி வுறுத்தி உலகினரை எச்சரித்து ஆசிரியர் காட்டும் திறம். "சிறிதிடை யூறு செய்தா னிவன் என்று சிந்தை நொந்தார்" (1819) என்ற அப்பூதியார் - மனைவியார் மன நிலைகளை ஈண்டு ஒப்புநோக்குக.

பொலிவு - விளக்கம்; மன மலர்வு; அகநிகழ்ச்சி. 82

3742. வந்த மகனைக் கடிதிற்கொண் டமுது செய்விப் பான்வந்தார்;
முந்த வேயப் பயிரவரா முதல்வ ரங்கண் மறைந்தருளச்
சிந்தை கலங்கிக் காணாது திகைத்தார்; வீழ்ந்தார்; தெருமந்தார்;
வெந்த விறைச்சிக் கறியமுதுங் கலத்திற் காணார்; வெருவுற்றார். அங

(இ - ள்) வந்த...வந்தார் - முன்கூறியவாறு வந்த மகனாரைக் கொண்டு இறை வரைத் திருவமுது செய்வித்தற் பொருட்டு விரைவாக வந்தார்; முந்தவே...மறைந் தருள - அதற்கு முன்பே அந்த வயிரவராய் வந்த முதல்வனார் அங்கு நின்றும்

மறைந்தருளினாராக ; சிந்தை...தெருமந்தார் - அவரைக் காணாமல் மனங்கலங்கித் திகைப்படைந்தார் ; விழுந்தார் ; மனஞ் சுழலப்பெற்றார் ; வெந்த...வெருவுற்றார் - வெந்த இறைச்சிக் கறியமுதினையும் பரிகலத்திற் காணாதவராய் திடுக்கிட்டார்.

(வி - ரை) வந்த - முன்பாட்டிற் கூறியவாறு ஓடிவந்த ; செய்விப்பான் - செய்விப்பதன் பொருட்டு ; வந்தார் - சிறுத்தொண்டர் வந்தார் ; முந்தவே - அவர் வரு முன்னமே ; அங்கண் - அவ்விடத்தினின்றும்;

திகைத்தார் - வீழ்ந்தார் - தெருமந்தார் - தொடர்ந்து தனித்தனி நிகழ்ந்த துன்பச் செயல்களைத் தனி வினையெச்சங்களாற் கூறாது வினைமுற்றுக்களாற் கூறியது கவிநயம் ; தனித்தனி அவற்றை மனங்கொளற் பொருட்டாம்.

வெந்த...வெருவுற்றார் - வெருவுறுதல் - சடுதியில் திடுக்கிட்டு நேரிடும் அச்சம் திகைத்தார் முதலிய மூன்றும் வயிரவரைக் காணாமையால் நிகழ்ந்தவை ; இத்துணையும் அவர் அமுது செய்யும் பொருட்டே செய்யப்பட்டனவாதலின் அவரைக் காணாமை பெருமயக்கமும் துன்பமும் ஆகி விளைந்தது ; மேற்பாட்டுப் பார்க்க ; இறைச்சி அமுது காணாது வெருவுற்ற நிலையினைப் பிரித்துணர வேறு கூறினார்.

கலத்தில் - படைக்கப்பட்ட பரிகலத்தில் ; தெருமருதல் - மனஞ் சுழலுதல் ; திகைத்தல் - போயின வகை காணமாட்டாது மயங்குதல்.

பயிரவராம் முதல்வர் - பயிரவச் சங்கம வேடந்தாங்கி வந்த இறைவனார். 83

3743. "செய்ய மேனிக் கருங்குஞ்சிச் செழுங்கஞ் சுகத்துப் பயிரவர்யாம்
உய்ய வமுது செய்யாதே யொளித்த தெங்கே?" யெனத்தேடி
மையல் கொண்டு புறத்தணைய மறைந்த வவர்தா மலைபயந்த
தைய லோடுஞ் சரவணத்துத் தனய ரோடுந் தாமணைவார், அ௪

3744. தனிவெள் விடைமே னெடுவிசும்பிற் றலைவர் பூதகண நாதர்
முனிவ ரமரார் விஞ்சையர்கண் முதலா னோர்கள் போற்றிசைப்ப
இனிய கறியும் திருவமுது மமைத்தார் காண வெழுந்தருளிப்
பனிவெண் டிங்கண் முடிதுளங்கப் பரந்த கருணை நோக்களித்தார்.

3743. (இ - ள்) செய்ய...தேடி - சிவந்த திருமேனியும் கரியகுஞ்சியும் செழிய போர்வையும் தாங்கிய வயிரவர் யாம் உய்யும்படி திருவமுது செய்யாமல் எங்கே ஒளித்தனர் ? என்று தேடுவாராகி ; மையல் கொண்டு புறத்தணைய - மயங்கி வெளியே வர ; மறைந்த...அணைவார் - மறைந்தருளிய அவ்வயிரவர் தாமே, மலைமகளாராகிய உமையம்மையாரோடும் சரவணத்தில் வளர்ந்த திருமகனாராகிய முருகப் பெருமானோடும் அணைவாராகி, அ௪

3744. (இ - ள்) தலைவர் - இறைவர் ; பூதகண நாதர்...போற்றிசைப்ப - சிவபூத கணத்தலைவர்களும் முனிவர்களும் தேவர்களும் விஞ்சையர்களும் முதலாக உள்ளவர்கள் துதி செய்ய ; இனிய...காண - இனிய கறியினையும் திருவமுதினையும் அமைத்த அவர்கள் காணும்படி ; நெடுவிசும்பில் - நீண்ட ஆகாய வெளியிலே ; தனி வெள்விடைமேல் - ஒப்பற்ற வெண்மையான இடபத்தின் மேலே ; எழுந்தருளி...நோக்களித்தார் - வெளிப்பட்டு எழுந்தருளிக் குளிர்ந்த வெள்ளிய சந்திரனை அணிந்த திருமுடி அசையப் பரந்த அருணோக்கத்தினை அளித்தருளினர். அரு

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

**3743.** (வி - ரை) செய்ய...பயிரவர் - அவரது திருவுருவத்தை கண்குளிர நன்கு கண்டு வழிபட்டாராதலின் அதனை ஈண்டுத் தமது மனத்துள் கண்டு கொள்கின்றார். 3690 பார்க்க. இக்கருத்துத்துப் பற்றியே, " வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடும், அஞ்சனப் புகையென வால மாமெனச், செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக், கஞ்சுசக் கடவுள்பொற் கழல்கள் போற்றுவாம் " என்று கந்த புராணமுடையார் துதித்தலும் ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது. செம்மை - கருமை முரண்டொடை.

யாமுய்ய அமுது செய்யாதே - அடியார்க்கு அமுதூட்டுவோர் அவரது பசிதீர உண்கின்றார் என்பதன்றித் தாம் உய்ய அவர் உண்கின்றார் என்ற எண்ணம் வரப் பெறுதல் வேண்டு மென்பது.

எங்கே ஒளித்தது எனத்தேடி...அணைய - அவர்மனையின் புறத்தே சென்று ஒளித்தனர் எனக்கருதித் தேடும் பொருட்டு வெளியில் அணைந்தனர்.

அவர்தாம் - அவர்தாமே ; தேற்றேகாரம் தொக்கது.

மலைபயந்த தையல் - உமையம்மையார்.

சரவணத்துத் தனயர் - முருகப்பெருமான். இவ்வாறு உமையம்மையாரும் முருகப்பெருமானும் தாமுமாகக் கூடிச் சோமாஸ்கந்த மூர்த்தமாக வெளிப்பட்டு இறைவர் அருள் புரிந்தது பெரிய சிறுத்தொண்டருக்கு அருள வந்த இவ்வோரிடத்தேதான் என்பது ஈண்டுப் பெருஞ் சிறப்பாகக் கருதத்தக்கது ; அம்மையும் தாமுமாக விடையேறிவந் தருள்வதே பெரும்பான்மை ஏனைத் தொண்டரிடங்களாம் ; தொண்டர்க் கருளத் தாமும், நங்கைக்கும் தாதியார்க்கும் அருள அம்மையாரும், சீராளதேவருக் கருள வேல்மைந்தனருமாக எழுந்தருளினர் என்பது, பின்னர் (3746), இம்முறையே நிரனிரையாக வைத்துக் கூறிக் காட்டியருளுதலாற் கருதிக்கொள்ளத் தக்கது.

சரவணம் - நாணற்காடு ; நாணற்காட்டினிடையே உள்ள பொய்கைக்காகி வந்தது; சரம் - நாணல் ; வனம் என்பது வணம் என வந்தது உத்தராயணம், ராமாயணம் என்புழிப்போல ; சரவணத்துத் தனயர் - சரவணப் பொய்கையுள் வளர்ந்த குமாரக் கடவுள் என்க. " நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை " (முருகு).

தாம் - தலைவர் தாமும் கூடி என்று, மேல் பாட்டில் தலைவர் என்பதனுடன் கூட்டி முடிக்க.

அணைவார் - அணைவாராகி ; முற்றெச்சம். அணைவார் - எழுந்தருளி என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 84

**3744.** (வி - ரை) தலைவர் - பூதகண நாதர்......போற்றிசைப்ப - காண - விசும்பில் - விடைமேல் எழுந்தருளி - அளித்தார் என்று மாற்றிக் கூட்டி உரைத்துக் கொள்க. போற்றிசைப்பவும் - காணவும் என்க.

நெடுவிசும்பு - ஞான வொளியுடைய ஆகாயம் என்பார் நெடு என்றார்.

போற்றிசைப்ப - அடியார்க்கெளிவந்து இறைவர் அருளும் திறத்தினைப் போற்ற.

அமைத்தார் - நாயனர் - மனைவியார் - தாதியார். வினையாலணையும் பெயர்.

முடிதுளங்க - துளக்கி என்பது துளங்க என வந்தது முடிதுளக்குதல் - திருத்தொண்டினை ஏற்றருளுதற் குறிப்பு. மகிழ்ச்சிக்குறிப்புமாம்.

பரந்த நோக்கு - நிரம்பிப் பரவிய ஊன்றிய பார்வை.

கருணை நோக்கு - அருட்பார்வை ; இதுவரை " மடவரலை முகநோக்கி " (3697) - "தொண்டர்தமை நோக்கி " (3703) என்று வந்தனவெல்லாம் அருள்களே

யாயினும், அவை திரோதானமாகிய அருள்நோக்கம் ; இங்குச் செய்தது சிவானந்த வாழ்வுதரும் அருள் நோக்கம் என்பார் பரந்த கருணை நோக்கு என்றார்.

அளித்தார் - அளியுடன் கொடுத்தற் குறிப்பு. 85

3745. அன்பின் வென்ற தொண்டரவர்க் கமைந்த மனைவி யார்மைந்தர்
முன்பு தோன்றும் பெருவாழ்வை முழுதுங் கண்டு பரவசமாய்
என்பு மனமுங் கரைந்துருக விழுந்தா; றெழுந்தா; ரேத்தினார்;
பின்பு பரமர் தகுதியினாற் பெரியோ ரவருக் கருள்புரிவார், அசு

3746. கொன்றை வேணி யார்தாமும் பாகங் கொண்ட குலக்கொடியும்
வென்றி நெடுவேள் மைந்தருந்தம் விரைப்பூங் கமலச் சேவடிக்கீழ்
நின்ற தொண்டர் மனைவியார் நீடு மகனார் தாதியார்
என்றும் பிரியா தேயிறைஞ்சி யிருக்க வுடன்கொண் டேகினார். அஎ

3745. (இ - ள்) அன்பின்...மைந்தர் - அன்பின் உறைப்பினாலே பாச உலகியலை வென்ற தொண்டரும், அவருக்கேற்ப அவ்வாறே அமைந்த மனைவியாரும், (அவ்வாறே அமைந்த) மைந்தனாரும் ; முன்பு...பரவசமாய் - தம்முன்பு வெளிப்பட்டுத் தோன்றியருளிய பெருவாழ்வாகிய சிவபெருமானது காட்சியை முற்றும் கண்டு தம்வசமிழந்து அக்காட்சியின் வயமாகவே நின்று ; என்பும்...ஏத்தினார் - எலும்பும் மனமும் கரைந்து உருக விழுந்தார்கள் ; எழுந்தார்கள் ; துதித்தார்கள் ; பின்பு...அருள்புரிவார் - அதன்பின்பு இறைவர் அவர்களுக்கேற்றபடி உள்ள தகுதியினாலே பெரியோர்களாகிய அவர்களுக்கு அருள் புரிவாராகி, அசு

3746. (இ - ள்) கொன்றை...மைந்தரும் - கொன்றை மலரைச் சூடிய சடையினை உடைய சிவபெருமானும், அவரது ஒரு பாகத்தை யிடமாகக் கொண்ட குலக்கொடியாராகிய உமையம்மையாரும், வெற்றி பொருந்திய நீண்ட வேலேந்திய மைந்தராகிய முருகப் பெருமானும் ; தம்...நின்ற - தமது மணமுடைய தாமரைப் பூப் போன்ற சேவடிகளின் கீழ் வீழ்ந்து எழுந்து துதித்து நின்ற ; தொண்டர்... தாதியார் - சிறுத்தொண்டரையும் திருவெண்காட்டு நங்கையாரையும் நீடும் மகனாராகிய சீராள தேவரையும் சந்தனத்தாதியாரையும் ; என்றும்...ஏகினார் - நித்தியமாய் என்றைக்கும் தம்மைப் பிரியாதே வணங்கி யிருக்கும்படி தமது சிவலோகத்துக்குத் தம்முடனே கொண்டு சென்றருளினார்கள். அஎ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

3745. (வி - ரை) அன்பின் வென்ற தொண்டர் - அன்பின் - அன்பின் உறைப்பினாலே ; இன் - ஐந்தனுருபு ; ஏதுப்பொருட்டு. வென்ற - வெல்லுதல் - கடந்த ஞானிகளாலும் கடத்தற்கரிய மக்கட் பாசத்தினைக் கடந்து பாச வெற்றி கொள்ளுதல் - பாசத்தினை அறுத்தல். "உலகை வென்ற" என்றது காண்க. மக்கட் பாசத்தைப் புத்திர ஏடணை என்பர்.

அவர்க்கு அமைந்த மனைவியார் - அவர் தகுதிக்கேற்றவாறே ஒப்ப அமைந்த என்பது; "தாதை அரியத் தாய் பிடிக்க"(3710) என்று இருவரையும் ஒப்ப வைத்துப் பணித்ததனுக்கேற்பப், பணிபுரிய அமைந்த என்பது. அமைந்த என்பதனை மைந்தர் என்பதனுடனும் கூட்டுக. அமைத்த என்பது பாடமாயின் அமுதமைத்த என்க.

பெருவாழ்வு - பெருவாழ்வு தரும் இறைவரது காட்சியினை வாழ்வென்றார்.

முழுதும் கண்டு - முன்னரும் இவ்விறைவரே முன்பு தோன்றக் காட்சியளிக்கத் தாமே கண்டார். அங்கு அவரியல் முற்றும் கண்டாரில்லை. ஆனால் இப்போது காண எழுந்தருளிக் கருணை நேர்க்களிக்க முழுதும் கண்டார் என்பதாம். "காண்பா ரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" "காட்டுவித்தா லாரொருவர் காணா தாரே" (தேவா).

என்பும் கரைந்துருகுதல் - உடலுக்கு ஆதாரவாயுள்ள வலிய எலும்பும் உள்ளுருகிக் கரைதல்.

என்பும் மனமும் கரைந்துருக - என்றதனால் அந்தக்கரண புறக்கரணங்கள் எல்லாம் கரைய என்பதாம். "என்பூ டுருகக் குனிக்கும் பிரான்."

விழுந்தார் - எழுந்தார் - ஏத்தினர் - முன்னர்க் (3742) காணுமையால் நிகழ்ந்த வற்றுக்கெல்லாம் வேறாக, ஈண்டுக் கண்டமையால் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறிய நயமும் திறமும் கண்டுகொள்க.

பின்பு - அவ்வாறு அவர்கள் காட்சி கண்டு துதித்து இவ்வுலக இயலின் நிகழ்ச்சிகள் முடிந்து நிறைவாயின பின்பு என்பது குறிப்பு.

தகுதியினால் - திருத்தொண்டின் தகுதிப்பாட்டினாலே அது காரணமாக.

பெரியோர் அவருக்கு - பெரியோர்களாகிய அந்நால்வருக்கும்.

அருள் புரிவார் - முற்றெச்சம். மேல் ஏகினர் என்றதனுடன் வினைமுடிபு கொள்க. 86

3746. (வி - ரை) வேணியார் - கோடி - மைந்தர் - என்ற மூவரும் தொண்டர் - மனைவியார் - மகனார்; தாதியார் என்ற நால்வருக்கும் முறையே அருள் புரிந்தனர் என்று கொள்ள வைத்தது கண்டுகொள்க. வேல் மைந்தர் அருள் மகனார் தாதியார் இருவருக்குமாகக் கொள்ளுதல் குறிப்பு. என்னை? தாதியார் மகனாரை வளர்த்த பண்பு பற்றி அவருடன் கூட்டி யுரைத்தவாறும்.

நீடுமகனார் - நீடு - சீராளதேவரது சிறப்புக் குறித்த அடைமொழி; "சீராள தேவர்" (3676) என்று தொடங்கியதற் கேற்ப முடித்துக் காட்டியவாறு; ஆண்டுரைத்தவை பார்க்க.

மகனார் - தாதியார் - தாதியாரும் ஐவகைத் தாயர்களுள் ஒருவராய், மகனாரை வளர்த்தெடுத்தமையாலும், அடியார்க் கடியாராய்ப் பணிசெய்தமையாலும் தாயர்க்குப் போலவே தாதியர்க்கும் ஒத்த பயன்தரப் பெற்றார் என்பதும் முன் தகுதியினால் (3743) என்ற குறிப்பு.

என்றும் பிரியாதே - இருக்க - மீளாநெறி; உடன்கொண்டு - ஏத்தி நின்ற அந்நிலையே; இருக்க - இருக்கும்படி. இறைஞ்சி - முத்தியிலும் ஆன்மாவின் அடிமைப் பண்பு. 87

3747. ஆறு முடிமே லணிந்தவருக் கடியா ரென்று கறியமுதா
ஊறி லாத தனிப்புதல்வன் றன்னை யரிந்தங் கமுதூட்டப்
பேறு பெற்றார் சேவடிக டலைமேற் கொண்டு பிறவுயிர்கள்
வேறு கழறிற் றறிவார்தம் பெருமை தொழுது விளம்புவாம். அஅ

(இ - ள்) ஆறு...என்று - கங்கை யாற்றினைச் சடையிற் சூடிய இறைவருக்கு அடியவர் என்று; கறி அமுதா...பெற்றார் - கறியமுதாகத் தமது மறுவில்லாத தனி மாமகனாரை அரிந்து அங்கு அமுதூட்ட வரும் அப்பெரும் பேற்றினைப் பெற்றாராகிய சிறுத்தொண்ட நாயனாரது; சேவடிகள் தலைமேற் கொண்டு - திருவடிகளை எமது சிரத்தின்மேலே தாங்கிக்கொண்டு; தொழுது - வணங்கி; (அத்துணையாலே);

பிறவுயிர்கள்...பெருமை - பிற உயிர்கள் எல்லாம் வெவ்வேறாகப் பேசும் மொழிகளையெல்லாம் அறியுந் தன்மையாற் கழறிற்றறிவார் எனப் பெயர்பெறும் நாயனாரது பெருமையினை ; விளம்புவாம் - சொல்வோம்.

(வி - ரை) அடியார் என்று - அடியார் என்ற கருத்தினாலே அவருக்கு, அமுதூட்ட என்க.

புதல்வன்றன்னைக் கறியமுதா அரிந்து ஊட்டப்பேறு என்க.

அமுதா - அமுதாக ; ஈறு கெட்டு நின்றது.

ஊறு இலாத - " உறுப்பின் மறுவின்றேல் " (3709) என்ற கருத்து. தனி - ஒப்பற்ற ; ஒரு குடிக்கு ஒரு மகனாக என்றலுமாம்.

அமுதூட்டப் பேறு பெற்றார் - அடியார் அமுதுண்ண வில்லையே ? எனில், அன்புநுகர்ந் தருளுதற்கே '' (3684) இறைவர் திருமலைநின் றணைந்தாராதலானும், அவ்வாறே அன்புச் செயலினை நிகழ்த்திக் கண்டு நுகர்ந்தாராதலானும், ஊட்டப் பேறு பெற்றார் என்பதுண்மையாம் என்க. அரிந்தமுதாக்கிய அன்புச் செயலின் உள்ளேயும் அவர்கள் மனத்துள்ளேயும் நின்று இறைவர் உண்டருளினார் என்க ; ஊட்டு அப் பேறு - ஊட்டும் அப்பேறு என்க.

பேறு பெற்றார் - நாயனார் மனைவியார் மகனார் தாதியார் என்ற நால்வரையும் உட்படக் கூறியது குறிப்பு.

தலைமேற் கொண்டு - தொழுது - என்று கூட்டுக. சேவடிகள் தலைமேற் கொண்டு அத்துணையானே, பெருமையினை, உடன்தொடங்காது, தொழுது சொல்வோம் என்றலுமாம்.

பிற உயிர்கள் வேறு கழறிற் றறிவார் - வேறு - வெவ்வேறு ; ஒவ்வோருயிர் வருக்கத்தின் மொழியும் வேறுவேறாவன ; கழறிற்றறிவார் என்ற, திருத்தொண்டத் தொகையுள் வரும் பெயர்க்காரணமும் சரிதச் சுருக்கமும் கூறித் தோற்றுவாய் செய்த நயமும் காண்க.

அடியார் என்று...ஊட்டப்பேறு — சிறுத்தொண்ட நாயனார் சரிதசாரமாய் வடித்து எடுத்து முடித்துக் காட்டியவாறு.

இப்பாட்டுக் கவிக்கூற்று ; ஆசிரியர் தமது மரபுப்படி இதுவரை கூறிவந்த சரிதத்தை முடித்துக்காட்டி, மேல் வரும் சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்தருளுகின்றார். 88

---

சரிதச் சுருக்கம்:—காவேரி பாய்ந்து வளம் செய்யும் சோழநாட்டில் வளமுடைய சிறந்த ஊர் திருச்செங்காட்டங்குடி யாகும். அதில் மாமாத்திரர் குடியிலே திருநீற்றுச் சார்புடையாராய் உயிர்களுக்கெல்லாம் உயர் காவற்றொழில் பூண்டு விளங்கியவர் பரஞ்சோதியார்.

அவர் ஆயுள்வேதக் கலையும், வடநூற் கலையும், படைக்கலத் தொழிற் கலையும் குதிரை யானைப் படைத் தொழிற் கலையும் அறிந்து சிறந்தனர். கலைத்துறைகளின் தெள்ளி வடித்தறிந்த பொருளாவது சிவன் கழலிற் செறிவாகிய அன்பேயாம் என்று துணிந்து, சிவனடிமைத் திறத்தில் பூண்ட அன்பு பள்ளமடையாய் என்றும் பயின்று வந்தனர். சிவன் அடியார்களுக்கு என்றும் இயல்பான பணி செய்து வந்தார்.

அரசன்பால் அணுக்கச் சேவகத்தில் அமர்ந்து அவருக்காக யானைப்படைகளைப் போரிற் கொண்டு செலுத்திப் பகைவரது தேசங்கள் பலவற்றையும் வென்று

தமது அரசனிடம் சிறப்புப் பெற்றார். அரசனுக்காகத் தண்டெடுத்துச் சென்று வடபுலத்திலே (Badami – Bhijapur Dt - Bombay Presidency) பகைவனுடைய வாதாவி என்னும் வலிய கோட்டையினையும் நகரினையும் யானைப் படை செலுத்தி அழித்துப் பல அரிய சின்னங்களையும், யானை முதலிய பொருள்களையும் கொண்டுவந்து அரசனாற் சிறப்பாகப் பாராட்டப் பெற்றார். அப்போது வேனை மந்திரிகள், இவர் பெருஞ் சிவத்தொண்டு வாய்த்த வலியுடைமையினால் இவ்வுலகில் இவருக்கு எதிர் எவருமில்லை என்றார்கள்.

அது கேட்ட அரசன், சிவனடியாரை அறியாதே போர்முனையில் விட்டேன்! நான் கெட்டேன்! என்று அஞ்சி அதனைப் பொறுக்க வேண்டுமென்று அவரை வேண்டினான்; அவர் எனது உரிமைத் தொழிலுக் கடுத்தவாறே வினைபுரிவேன்; அதனால் என்ன தீங்கு? என்றார்; அரசன் அவருக்கு வேண்டியவாறு நிறைந்த செல்வங்களையும், இறையிலி மானியங்களையும் கொடுத்தே, "உம்முடைய உயர் நிலையினை உலகறியா வண்ணம் கொண்டு செலுத்தினீர்! இனி உமது மனக்கருத்துக்கிசையவே வாழ்ந்து, உமது மெய்யன்பு விளங்கும்படி ஒழுகி வாழ்வீராக!" என்று வேண்டி விடைகொடுத்தனன். அவர் அரசன்பால் விடைகொண்டு தமது பதியினில் வந்து சேர்ந்து அரன்பணியும், அடியார் பணியும் முன்போலவே முறையன்பினால் வழுவாது செய்து வருவாராயினார்; நீதில் குடிப்பிறந்த திருவெண்காட்டு நங்கை என்னும் அம்மையாரை மணந்து இருவர் கருத்தும் ஒன்றவரும் பெருமை நீதி மனையறத்தில் ஒழுகினர். நாடோறும் சிவனடியார்களை முறைமைப்படி முன்னர்த் திருவமுதூட்டிப் பின்னரே தாம் உண்ணும் நிலையினை நித்த நியமமாக வழுவாது கைக்கொண்டொழுகி வந்தனர். சிவனடியார்கள் எண்ணிறந்தோர் இவர்பால் வந்து அமுதுண்டு மன மகிழ்ந்தனர். அடியார்களின் முன்னே தம்மை மிகச் சிறியராய் வைத்து ஒழுகி வந்த காரணத்தால் உலகில் இவர் சிறுத்தொண்டர் என்று வழங்கப்பெற்றனர். அந்நாளில் இறைவாருளால் நிறை தவத்தினையுடைய இவருக்குத் திருவெண்காட்டு நங்கைபால் சீராளதேவர் என்னும் திருமைந்தர் அவதரித்தனர். அவர் அவதரித்த மகிழ்ச்சியினால் நகரமுழுதும் பெருஞ் சிறப்புக் கொண்டாடப் பெற்றது. அம்மைந்தர் பெருஞ் சிறப்புடன் எல்லாச் சடங்குகளும் செய்யப் பெற்று ஐந்து வயதாகிய உரியபிராயத்தில் கலைகள் பயிலப் பள்ளியினில் அமர்த்தப் பெற்று வளர்வாராயினர்.

அந்நாளில் திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருமருகல் நகரில் வரக்கேட்டுச் சிறுத்தொண்டர் ஓடிச்சென்று பணிந்து, அவரை வேண்டித் தமது பதிக்கு அழைத்து வந்து தமது திருமனையில் வைத்து உபசரித்தனர். அவர் பாடியருளிய திருப்பதிகத்தில் சீராளதேவரையும் தம்மையும் வைத்துப் பாராட்டும் பேறு பெற்றனர்.

இவ்வாறு இவர் செய்துவந்த திருத்தொண்டு திருக்கயிலை அத்தர் திருவடிக் கீழ்ச் சார்வாயிற்று. இவருடைய மெய்த்தன்மை யன்பு நுகர்ந்தருளுதற்கு இறைவர் தாமே பயிரவச் சங்கமத் திருவேடம் தாங்கி இங்கு எழுந்தருளி வருவாராயினர்; அவர் கொண்டெழுந்தருளிய பயிரவ வேடமாவது; தம் நீண்ட சடையினையே கார மேகச் சுருள்போலக் கருங் குஞ்சியாகக் கொந்தளமாகப் பரப்பினார்; அம்மேகத்தினிடையே விளங்கும் விண்மீன்கள் போலத் தும்பை மலர்களை இடையே செருகினார்; சடையில் அணிந்த இளம்பிறையினைச் சிறுமதியாக்கியது போலத் திருநுதலிற் திருநீற்றுப் பொட்டு விளங்கிற்று; சூரியமண்டலமும், சந்திர மண்டலமும், அக்கினி மண்டலமும் உடன் அணைந்தது போலக் காதில் சங்குக் குழையினிடையே

செவ்வரத்த மலரினைச் செருகினர் ; கழுத்தில் உள்ள விடத்தினை மறைத்த அமுதக் குமிழிகள் போலப் பளிங்குமணி வடத்தினைக் கழுத்தில் அணிந்தனர் ; மேற்கடலிற் குளித்த செங்கதிரவனைப் புடைசூழும் இருள் போலச் செம்மேனிமேல் கரிய கரியுரிப்போர்வையே கஞ்சுகமாக ஆயிற்று; அன்பர்களின் அன்பே அவாது திருமேனியில் பல இடத்திலும் விளைந்தன என்னும்படி சன்னவீரம், ஆரம், கைச்சரி, இடைச்சரி காற்சரி இவைகள் விளங்கின ; இவர் அன்பர்க்கு அருள்புரிய வரும் திறங்கண்டு அன்பின்வழி நில்லுங்கள் என்று உலகினரை அழைத்ததுபோல மறைச்சிலம்புகள் காலில் ஒலித்தன ; பிரம கபாலத்தினை ஏந்திய இடத் திருக்கையினால் திரிசூலத்தினை விளங்க அணைத்தனர் ; வலத்திருக்கையில் உடுக்கையினைப் பிடித்து ஒலி செய்தனர் ; திருமுகத்தில் முறுவல் நிலவெறித்தது : இவ்வாறாகிய திருவேடத்துடன் உலகம் அன்பு தழைத்தோங்கி ஏத்தும்படி தமிழ்நாட்டுத் திருச்செங்காட்டங் குடியிற் சேர்ந்தருளினர்.

மிக்க பசியுடையவர் போல வழியிற் கண்ட சனங்களைச் சிறுத்தொண்டர் மனை எங்கே ? என்று கேட்டு விரைவில் வந்து, “ தொண்டர்க்கு எந்நாளும் சோறு அளிக்கும் தொண்டனார் இவ்வீட்டினுள் உள்ளாரோ?” என்று வினவினர்; சந்தனத் தாதியார் புறத்து வந்து “ அவர் அடியாரைத் தேடிப் போனார் ; தேவரீர் மனையினுள்ளே எழுந்தருளும்” என்றார். அதற்கு அவர் “பெண்கள் இருந்த இடத்தில் நாம் தனியே புகுதமாட்டோம்” என்று புறப்படுவார் போலக் காட்டத், திருவெண்காட்டு நங்கையார் முன்வந்து மனையில் எழுந்தருளியிருக்க வேண்டினர். அதற்கு, “ நாம் உத்தராபதி யுள்ளோம்; சிறுத்தொண்டர்தமைக் காணவந்தோம் ; அவரில்லாமல் இங்கு இரோம் ; கணபதீச்சரத்தில் ஆத்தியின் கீழே இருப்போம் ; அவர் வந்தால் நாமிருக்கும் தன்மையினைச் சொல்லுவீர் ” என்று சொல்லிச், சென்று, திருவாத்தியின்கீழ் அமர்ந்தருளினர்.

அடியவரைத் தேடிப்போன சிறுத்தொண்டர் அடியார்எவர்களையும் காணப்பெறாது மீண்டு மனையில் வந்து மனைவியார்க் குரைத்து மயங்கி நிற்ப, அவர் பயிரவர் வந்த தன்மையினைச் சொல்லக் கேட்டுச், சென்று, திருவாத்தியின் கீழ் இருந்த பயிரவரைக் கண்டு பணிந்து நின்றனர். அவர், அவரை நோக்கி “நீரோ பெரிய சிறுத்தொண்டர்?” என்று கேட்க, “ அடியேன் அடியார் முன் நின்று துதிக்கவும் தகுதியில்லேன் ; ஆனாலும் அடியார்கள் கருணையினால் அப்பெயருடையவன் நான் என்று சொல்வார்கள்” என்று கூறித் தொழுது, “இன்று அமுது செய்விப்பதற்காக அடியார்களை இப்பதியில் எங்குந் தேடியும் காணவில்லை ; தவப்பயனாகத் தேவரீரைக் கண்டேன் ; அடியேன் மனையில் எழுந்தருளி அமுது செய்தருள வேண்டும் ” என்று விண்ணப்பித்தனர். அதுகேட்டு அவர், “ நிகழும் தவமுடையீரே! நாம் உத்தராபதியோம்; உம்மைக் காண வந்தனம்; எம்மைப் பரிந்தூட்ட உமக்கு முடியாது” என்றார்; சிறுத்தொண்டர் அதுகேட்டு “எவ்வாறாயினும் தேவரீரை அமுது செய்விக்க அடியேனால் இயலும். தேவரீர் அமுது செய்யும் இயல்பதனைக் கடிதமைக்க உரைசெய்யுங்கள் ” என்று சாலவும் வேண்ட, அவர் “ தொண்டரே ! மூவிருது கழித்தால் பசுப்படுத்து உண்போம் ; அதற்குரிய நாளும் இன்றேயாம் ; நாம் உண்பது நரப்பசு ; ஒரு குடிக்கு ஒரு மகனாய் ஐந்துவய துள்ளவனாய் உறுப்பில் மறு இல்லாதவனாய் உள்ள மகனைத் தம்முள் உவந்து தாய்பிடிக்கத் தந்தை அரிந்து சமைத்த கறி நாம் உண்பது ” என்றார் : “ அதுவும் அடியேனால் இயையும், தேவரீர் அமுதுசெய்யப் பெற்றால் ?” என்றுகூறி, விடைபெற்று மனையிற் போந்து மனைவியாருக் கறிவித்தனர். அவரும்

இசையச், சென்று, சீராள தேவரைப் பள்ளியினின்று கொண்டுவந்து மஞ்சனம் ஆட்டிக் கோலஞ் செய்து, இறைவர் பணித்தவாறே கறி சமைத்து அவர்பால் சென்று, வணங்கி, யறிவித்துத், தாழாது அமுது செய்ய எழுந்தருள வேண்டினர். அவரும் எழுந்தருளி வர, மனை யலங்கரித்து, ஆசனத்தமர்த்தி, முறையாற் பூசனைகள் செய்து, முக்காலியின் மேல் வெண்டுகில் விரித்து, அதன்மேல் பரிகலம் வைத்து, அவர் பணித்தவாறே கறியமுதும் செஞ்சாலிச் சோறும் கறிவகைகளும் எல்லாம் ஒக்கப்படைத்து அமுது செய்யும்படி வேண்டினர்; அவர் அப்போது "நமக்குத் தனி உண்ண ஒண்ணாது; உடன் உண்ண அடியாரை அழைத்து வாரும்" என்றார்; அது கேட்டுத் தொண்டனர் போய்த் தேடிக் காணமையால், மீண்டு வந்து பணிந்து, வேறு அடியார்களைக் காணமையால் தாமும் திருநீறிடுந் தன்மை பற்றித் தம்மையே அடியாராகக் கொள்ளும்படி குறிப்பிக்க, அவரும் இசைந்து, பணித்த படி, அம்மையார் அமுது படைக்க, உண்ணப் புகுந்தனர். அப்போதில், அவர் தடுத்து, "மைந்தனைப் பெற்றீரேல் எம்முடன் உண்ண அழையுங்கள்" என்று கூற, அவன் இப்போது இங்கு உதவான் என்று தொண்டனர் சொல்ல, "அவன் வந்தாலே நாம் உண்பது; நாடி யழையும்" என்று ஆணையிட, அவ்வாணையின்படியே நாயனரும் மனைவியாரும் மனைப்புறம் போய் மகனரை அழைத்தனர். உடனே, சீராளதேவர் பள்ளியினின்றும் ஓடிவருவார் போல எதிரே ஓடி வந்தனர். அவரை நங்கையார் எடுத்து அணைத்துக் கணவனர் கையிற் கொடுப்பத், தொண்டர் அமுதுசெய்யப் பெற்றேம் என்னும் பொலிவாற் களிகூர்ந்து அன்பரை அமுது செய்விப்பதற்காக மகனரைக் கொண்டு விரைந்து உள்ளே வந்தனர். அதன் முன் பயிரவர் மறைந்தருளினர். பரிகலத்திற் படைத்த இறைச்சிக் கறியமுது வகைகளும் காணப்படவில்லை. அடியார் எங்கே ஒளித்தனர் எனத் தேடிப் புறத்தே அணைந்தனர். மறைந்த அவர் தாம் உமையம்மையாரோடும், முருகப்பெருமானேடும், வெள்ளைவிடையின்மேல் ஆகாய வீதியிற் காட்சி கொடுத்தருளக் கண்டு களித்து வீழ்ந்து வணங்கினர். அவ்வாறு வணங்கித் துதித்துநின்ற தொண்டனர், மனைவியார், சீராளதேவர், தாதியார் இவர்கள் என்றும் பிரியாதே இறைஞ்சி யிருக்க இறைவர் தம்முடன் சிவலோகத்தே கொண்டு சேர்ந்தருளினர்.

---

கற்பனை: 1. சிறுத்தொண்ட நாயனரது இயற்பெயர் பரஞ்சோதியார் என்பது. இவ்வாறு அவ்வவர்களது உண்மைத் தன்மைப் புலப்பட இயற்பெயரமைவது பெரியோராந் தன்மை யுடையோர்களது சிறப்பு; திண்ணனர் - புனிதவதியார் - மங்கையர்க் கரசியார் முதலிய திருப்பெயர்கள் காண்க.

2. தமக்குபகாரமாக, உள்ளநிலைக்கலைத் துறைகளாகிய நூற்கலையும் ஏற்றதொரு தொழிற்கலையும், பிற உயிர்களுக்கு உபகாரமாகஆயுள்வேதக்கலை முதலியபிறிதொரு கலையும்கற்கவேண்டியது யாவருக்கும் கடமை; இங்குப் பரஞ்சோதியார் பிறர் பொருட்டுஆயுள்வேதக் கலையும், தம்பொருட்டு வடநூற்கலையும் படைக்கலத் தொழிலும் பரி கரிப் படைத்தொழிலும் கற்று விளங்கினர் (3662).

3. உள்ளநிறை கலைத்துறைகள் எல்லாவற்றாலும் தெள்ளி வடித்தறிந்த பொருள் சிவன் கழலிற் செறிந்த அன்புடைமையே யாம். அதனைச் செலுத்தி யுய்தி தேடும் ஒழுக்கமாவது அரன்பணியும் அடியார் பணியுமேயாம் (3663 - 3664).

4. பரஞ்சோதியார் அரசனிடம் சேனைத் தலைமை பூண்டு களிற்றுப்படை செலுத்திப் பகையரசர் பலரையும் வென்று வடபுலத்து வலிய வாதாவிப் போரிலும் வெற்றிகொண்டு தமது அரசனுக்குச் சிறப்பு வருவித்தனர். இஃது உலகியல் ஆண்மையாகிய வீரம். அஞ்சாநெஞ்சு படைத்த அவரே சிவனடியார்களைப் பணிந்து உபசரித்து அமுதூட்டி அவர்கள்முன் தம்மை மிகச் சிறியரா யடைந்தார். அதனால் சிறுத்தொண்டர் எனப் பெயர் பெற்றார். இஃது அன்பினியலில் அடியார்பாற் காணும் வீரம்; "வீர மென்னால் விளம்புந் தகையதோ?" உலகினியலில் வீரம் வேண்டும்; அஃது சிவன் அடிமைப் பண்பில் பணிதல் வேண்டும்; (3664 - 3665-3672.)

5. சிவன் திருத்தொண்டு வாய்த்த வலியுடைய தொண்டர்களை இவ்வுலகில் மாறுகொண்டு எதிர்த்து நிற்பார் இல்லை (3666).

6. சிவனடியார்களை, உலகியல் நிலையில் ஏவல் கொள்ளுதல் தகாத செயல் (3667)

7. கற்புநெறி வழுவாது இல்வாழ்க்கை நடத்தி உலகியலில் இல்லறம் பேணவும் நன்மக்கட் பேறு பெறவும் கன்னியை மணஞ்செய்து கொள்க என்று வேத முதலிய அறநூல்கள் விதிக்கும். அவை உலகியல் அறங்களேயாம்; இங்குப் பரஞ்சோதியார் அவற்றுடனே கூடி, அவற்றினுக்கும் மேலாகிய சிவதருமங்கள் செய்யவும், வேதகாரணரடியார் வேண்டிய மெய்ப்பணி செய்யவும் தீதில் குடிப்பிறந்த திருவெண்காட்டு நங்கையம்மையாரை மணந்துகொண்டனர். இஃது இல்லறத்தின் உயர்ந்த குறிக்கோள் (3671).

8. காதன் மனைக்கிழத்தியாரும் தாமும் கருத்தொன்ற வரும் பெருமை நீதி மனையறம் புரியும் நீர்மையே மிகச்சிறப்புடையது (3671.)

9. நாடோறும் சிவனடியார்களை விதி முறைப்படி இனியவாறு அன்புடன் முன்னே திருவமுதூட்டிப் பின்னே தாம் உண்ணும் நியதியினைக் கொள்ளுதல் சிறந்த சிவதருமமாம். அதுவே வீடு பயப்பிக்கும் நெறியாம் (3672).

10. சிவனடியார்களின் முன்பு கூசிமொழிந்து மிகச் சிறியராய் அடைந்தொழுகுதல் முறை. இஃது உலகியற் பெரியாராகிய சிறுத்தொண்டர் (3675) காட்டிய நெறி. அதனாலே அவர் சிறப்புப் பெற்றுப் "பெரிய சிறுத்தொண்டர்" எனப்பட்டார்.

11. கற்புடைய மனைவியே மனையறத்தின் வேராகி விளங்குபவர். (3676)

12. சிவனருளினாலும் சிவ தருமங்களும் அடியார் பணியும் செய்த நலத்தினால் நன்மகப்பேறு வாய்க்கும்; மானக்கஞ்சாறனாரும், சிவநேசரும் நன்மகப்பேறு பெற்ற நிலைகள் கருதத்தக்கன. "அரிய நீர்மையி லருந்தவம் புரிந்தர னடியார்க், குரிய வருச்சனை யுலப்பில செய்தவந் நலத்தால்...பெண்கொடி யுதித்தாள்." (2939); "கூத்தனா ரருளாலே, இழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த விப்பிறவிக் கொடுஞ்சூழல், பிழைக்குநெறி தமக்குதவப் பெண்கொடியைப் பெற்றெடுத்தார்" (876).

13. உலகில் மகப்பேறு பெறுவார் அப்பாசத்திற் பட்டுப் பிறப்பு இறப்புக்களுள் வந்துழலுவர். ஆனால் சிறுத்தொண்டர் பெற்ற மகப்பேறு அவரது பந்தமறவும் குடும்பத்துடன் வீடுபெறவும் ஏதுவாயிற்று; "தம் பந்தமற வந்தவரை" (3681).

14. ஆளுடைய பிள்ளையாரை வணங்கித் திருமனையில் உபசரித்து அவரது அருளுக்கும், பாராட்டுதற்கும் உரியவராகப் பெறும் பேறு முன்னைத் தவமுதிர்ச்சி

யால் வீடுபெறும் தகுதியுடைய சீவன் முத்தருக்கே வாய்க்கப் பெறுவதொன்றாகும். (3682 - 3683).

15. சிறுத்தொண்டரும் சீராள தேவரும் இறைவர்பாற் பெரும்பேறு பெற்று உள்ள நிலைமையினை முற்குறிப்பாக ஆளுடைய பிள்ளையார் தமது திருவாக்கினால் ஆசிபுரிந்தருளினர். இது பெரியோரின் தன்மை. "பொடிநுகரும் சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாகக், கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே" "சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய, பேராளன்" (தேவா).

16. அடியார்களின் அன்புச் செயல்கள் மிக்கபோது அந்தப் பக்குவ நோக்கி அவ்வன்பினை நுகர்ந்து அருள்புரியும் பொருட்டு அரன் தாமே வெளிப்பட்டு வந்தருள் புரிவர்.

17. பயிரவச் சங்கமத் திருவேடம் சிவனடியார் திருவேடங்களுள் ஒன்று.

18. அடியார்களின் அன்பின் திறத்தினை உலகறிய வெளிப்படுத்துதற்குச் சிவபெருமான் புரியும் அருளின் வகைகள் அளப்பிலவாம். அவை அவ்வவர் திறத்துக் கேற்றபடி அமைவன; திருக்குறிப்புத் தொண்டர்பால் கந்தையினைக் கழுவக் கொடுத்த செயலும், திருநீலகண்டருக்கு ஓடு கொடுத்ததும், இயற்பகையார்பால் மனைவியாரைக் கொடுக்கக் கேட்டதும், கண்ணப்பர்பால் கண்பற்றிய நினைவருளியதும் ஆக அவ்வவர்க்கேற்ற நிலைபற்றி அமைவதுபோலவே, ஈண்டு மகனைக் கறியாக்க இறைவர் கேட்ட செயலுமாம். இவை உலகியற் பாசநிலைபற்றி யாராயப் படுவனவல்ல.

19. திருத்தொண்டர்களின் செயல் இறைவரருள் வழிப்படும் நிலைகளை வன்றொண்டு என்றும், மென்றொண்டு என்றும் இருவகையாகக் கூறுவது திருக்களிற்றுப் படியார். அவற்றுள் சிறுத்தொண்டர் செயல் பிறருக்கரியதாகிய வன்றொண்டின்பாற் படுமென்று வகுத்தனர்.

20. மக்கள்மேலாசை என்பது மிக வலியபாசம்; அதனை அறுத்து வெல்லுதல் யார்க்கும் அரிது; இயல்பான காரணங்களால் மகனை இழக்க நேர்ந்தாலும் உயிர்விடும் மாக்களும் உளர். ஈண்டுத் தாயரும் தந்தையும் மகனை மனமுவந்து தாமே அரிந்து கறியமுதாக்கியது செயிதற்கரிய பெருஞ் செயலாம்.

21. மாதர்கள் இருக்குமிடத்தில் ஆண்மக்கள் தனி புகுதலாகாது என்பது நம் நாட்டின் உலகியல் அறநூல் விதியும் மரபுமாம். (3697)

22. இறைவருக்கும் அடியாருக்கும் ஆக்கும் திருவமுதுப் பொருள்களையும் பிற பொருள்களையும் எவ்வாற்றானும் முகர்தல் முதலாகவேனும் அனுபவித்தல் கூடாது. (3720)

23. அடியாராகிய பெரியோர்கள் மற்றும் சிவனடியார்களுடனன்றித் தாம் திருவமுது தனியுண்ணார்கள்.

24. இல்லறத்தில் வாழ்வோர் அடியார்க்கமுதூட்டுதல் முதலிய அடியார் பணி அரன்பணிகளைக் கணவன் மனைவியிருவரும் தம்மில் மனமுவந்து கருத்தொன்றிச் செய்தல் வேண்டும்.

25. இல்லறத்தில் நிற்போர்பால் திருவமுதுண்ணும் அடியார்கள் அவ்வில்லற முடையாரின் மைந்தரையும் அவ்வில்ல முடையவரையும் உடனிருத்தி உண்ணுதலும் மரபு.

26. சிறுத்தொண்டரும் மனைவியாரும் பயிரவர் சொற்படி அழைத்தபடி, சீராள தேவர் மீள உயிர் பெற்று ஓடிவரக் கண்டபோது, எடுத்து அணைத்துக் களி கூர்ந்தனர்; ஆனால் தமது மகனாரை மீளப் பெற்றதன் பொருட்டன்றி, அத்தொண்டர் உண்ணப்பெற்றோம் என்னும் பொலிவால் மகிழ்ந்தனர்; முன்னர் மகனாரைக் கறியமுதாக்கிய போதும் அடியாருக்குத் திருவமுதுக்கு இம்மைந்தன் உதவினான் என்று மகிழ்ந்தனர்; உலகில் மக்கள் தமது உயிர்ச்சார்பு பொருட் சார்புகளை யெல்லாம் தம்பொருட்டென்று பற்றி நோக்காது, அவை அரனுடைமையே - அரனடியாருடைமையே யாவன என்று கருதி வாழ்தல் விதிமுறை.

27. உமையம்மையாரோடும் சரவணத்துத் தனயரோடும் வந்தருளிச் சிறுத்தொண்டனாருக்கும் குடும்பத்துக்கும் தாதியாருக்கும் இறைவர் திருவருள் புரிந்து, உடனிறைஞ்சி யிருக்கும் பேறு நல்கியருளினர். இது சிறுத்தொண்டரது பெருந் தனிச் சிறப்பு.

தலவிசேடம் : திருச்செங்காட்டங்குடி - III - பக். ச0ச - பார்க்க.

குறிப்பு : பைரவவிரதம் - சிவாகமங்களில் இவ்விரத நாட்கள் சித்திரைப் பரணி, ஐப்பசிப் பரணி என இரண்டும் குறிக்கப்பெற்றுள்ளன. இவை ஆறுமாதத்துக் கொன்றாக அமைந்துள்ளதும், இப்புராணத்துள் வந்த பயிரவர் ஆறு திங்கட்கொருமுறை நாம் உண்போம் என்றதும், சித்திரைப் பரணியே சிறுத்தொண்ட நாயனார் திருவடிபெற்ற நாளாதலும், அந்நாளில் திருச்செங்காட்டங்குடியில் "அமுது படை" என்று விளக்கமாக அறியப்பட்டு நிகழும் இவ்வாலாற்று விழாவும் கருதுக.

"விரும்பும் புதல்வனை மெய்யரிந் தாக்கிய வின்னமிர்தம்
அரும்பும் புனற்சடை யாயுண் டருளென் றடிபணிந்த
இரும்பின் சுடர்க்களிற் றன்சிறுத் தொண்டனை யேத்துதிரேற்
சுரும்பின் மலர்த்தமி ழாகரன் பாதத் தொடர்வெளிதே"

—11-ம் திருமுறை - ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி - 72

சிறுத்தொண்ட நாயனார் புராணம் முற்றும்

# கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடுகள்

வழக்கறிஞர் - சிவக்கவிமணி

**திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B. A., அவர்கள்.**

பதிப்பித்தவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெரியபுராணம் — உரையுடன் - I பகுதி - திருமலை - தில்லைவாழந்தணர் சருக்கங்கள் ... | (அச்சில்) | |
| ஷை II பகுதி - இலைமலிந்த - மும்மையாலுலகாண்ட சருக்கங்கள் | (அச்சில்) | |
| ஷை III பகுதி - திருநின்ற சருக்கம்-முதற்பாகம்-திருநாவுக்கரசு நாயனார் புராணம் ... | 8 | 8 |
| ஷை III பகுதி - திருநின்ற சருக்கம் - இரண்டாம் பாகம் ... | 4 | 12 |
| ஷை III பகுதி - 1, 2 பாகங்கள் சேர்த்துக் கட்டியது ... | 12 | 8 |
| ஷை IV பகுதி - வம்பறு வரிவண்டுச் சருக்கம் - 1-ம் பாகம் - திருஞானசம்பந்தர் புராணம் 1-630 பாட்டுக்கள் (6 சஞ்சிகைகள்) | 12 | 8 |
| ஷை V பகுதி - வம்பறு வரிவண்டுச் சருக்கம் - 2-ம் பாகம் திருஞானசம்பந்தர் புராணம் 631 முதல் அது முழுதும் - 7 சஞ்சிகைகள் .... | 13 | 8 |
| ஷை VI பகுதி - வம்பறு வரிவண்டுச் சருக்கம் மூன்றும் பாகம் ஷை சருக்கம் எஞ்சிய பகுதி முழுதும் - வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் 1ம் பகுதி சிறுத்தொண்ட நாயனர் புராண முழுமையும் - (3636-3737 வரை-111 பாட்டுக்கள்).... | 13 | 0 |
| கண்ணப்ப நாயனர் புராணம்—உரையுடன் ... | 2 | 0 |
| திருக்குறிப்புத்தொண்ட நாயனர் புராணம்—உரையுடன் ... | 1 | 8 |
| சண்டீச நாயனர் புராணம்—உரையுடன் .... | 0 | 12 |
| காரைக்காலம்மையார் புராணமும் அருணூல்களும்—உரையுடன் | 1 | 8 |
| அப்பூதி நாயனர் புராணம்—உரையுடன் .... | 0 | 8 |
| ஏயர்கோன் கலிக்காமநாயனர் புராணம்—உரையுடன் ... | 8 | 0 |
| திருமூலதேவ நாயனர் புராணம்—உரையுடனும், திருமந்திரத் திரட்டு முதலிய குறிப்புக்களுடனும் ... | 1 | 4 |
| கருவூர்த் தேவர்—ஆராய்ச்சி நூல் ... | 0 | 8 |
| கண்ணப்ப நாயனர் சரிதம்—தலத்தேவாரங்களுடன் ... | 0 | 6 |
| திருநாவுக்கரசு நாயனர் சரிதம்—ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் ... | 0 | 8 |
| திருப்பாசுர விளக்கம் ... | 0 | 12 |
| பூம்பாவை ... | 1 | 0 |
| திருஞானசம்பந்த நாயனர் திருமணம் .... | 1 | 4 |
| திருஞானசம்பந்த நாயனர் சரிதச் சுருக்கம் முதலியன ... | 0 | 12 |
| சிறுத்தொண்ட நாயனர் புராணம்—உரையுடன் ... | 1 | 4 |
| கழறிற்றறிவார் நாயனர் புராணமும்—உரையும், திருவாரூர் மும்மணிக் கோவை—உரையுடனும் ... | 4 | 0 |
| திருவாரூர் மும்மணிக் கோவை—உரையுடன் ... | 0 | 8 |
| சேக்கிழார்- (சென்னைச் சர்வகலாசாலைப் பிரசங்கங்கள்) ... | 2 | 0 |

இவை அச்சில் :

அவிநாசிக் கருணாம்பிகை பிள்ளைத்தமிழ்
மாணிக்கவாசகர் - அல்லது - நீத்தார் பெருமை
வாகீசர் - அல்லது - மெய்யுணர்தல்
சுப்பிரமணியர் திரிசதார்ச்சனை (கிரந்தத்திலும் தமிழிலும்)